Registered as a News Paper in Sri Lanka
பக்கம் 20 ரூபா 12/00
දිනමුරසු වාරමලර් ஒக். 29-நவ. 04, 2000

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 380

# தமிழ் அரசியலின் பலப் பரீட்சை கூட்டணிக்கு வந்தது சோதனை!



# முரசம்

## தீபாவளி!

***அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்.***

தீபாவளிப் பண்டிகைக்
காலமிது.
கொண்டாடி மகிழ்வதற்கு
மனநிலை உள்ளதா?
தீப ஒளிகக்க
மத்தாப்பூ வாணங்களை
கொழுத்தி மகிழ்ந்த
காலம் இப்போது
மாறிவிட்டது.

இன்றோ யாழ்நகரில்
பல்குழல் றொக்கெட் லோஞ்சர்கள்
பயங்கர சத்தத்துடன்
எறிகணைகளை வீசியெறியும்
யுத்தப் பேரிரைச்சலைத்தான்
மக்கள் தினந்தினம்
கேட்டு பழக்கமாகிவிட்டது.

விண்ணில் எப்போதும்
இந்த எறிகணைகள்
பீறிட்டுப்பாயும்
ஒளிக்கீற்றுக்களையெல்லாம்
இரவு பகலாக நாம்
கண்ணுற்று வருகிறோம்.

இந்நிலையில்
எம் மக்களுக்கு
இந்தத் தீபாவளி
வாணவேடிக்கைகளெல்லாம்
அற்பமானதாக ஆகிப்போய் விட்டது.
உயிரைத் தினமும்
கையில் பிடித்தபடி
வாழ்க்கை நடத்திவரும்
எமது மக்களுக்கு
உண்மையான ஒரு தீபாவளி
எப்போது தோன்றுமென்றால்,
இந்தப் பெருந்துயர் நீங்கி
நிலையான ஒரு
கௌரவமான வாழ்க்கை
உத்தரவாதப் படுத்தப்
படும்போதுதான்.

தீபாவளியென்ற
புராணக் கதைகூட
அதர்மத்தை ஒழித்து
தர்மத்தை நிலைநாட்டிய
வெற்றியின் விழாவாகவே
கூறப்பட்டு வருகிறது.

இந்த நாட்டின்
நரகாசுரன் யாரென்றால்,
இங்கு உருவாகிவிட்ட
இனவாத அரக்கன்தான்.
இந்த இனவாதம் தான்
இந்நாட்டின் வெவ்வேறின
மக்களுக்கிடையே
விரிசல் ஏற்படுத்தியது.

ஓர் இனத்தை இன்னோரினம்
அழித்தொழிப்பதே
சமூக நீதியென்ற பொய்மையை
பெரும்பான்மை மக்களுக்கு
எண்ணக்கருவாக்க முனைந்தது.
சிறுபான்மை மக்களின்
நியாயமான உரிமைகளை
பலாத்காரமாகப் பறித்தது.
அவர்களை உடல் ரீதியாக வதைக்கும்
இனக் கலவரங்களைக்
கட்டவிழ்த்து விட்டது.

இத்தகைய இனவாதமென்ற
நரகாசுரன் இன்றும் கூட
மாறு வேடங்களில் நின்று
இனப்பிரச்சனைக்குத்
தீர்வு ஏற்படாமல்
தடுத்த வண்ணம் இருக்கிறது.
முன்னைய காலங்கள் போல்
அது முரட்டுத்தனமாக வெளிப்பட்டு
முட்டாள்தனமாக
உலக அபிப்பிராயத்தில்
கெட்ட பெயர் சம்பாதிக்காதவாறு
மாற்று வழிகளில் இப்போது
முகம் கொடுக்கிறது.

எப்படி எந்த முகத்துடன் அது
வெளிப்பட்டாலும் அதன்
செயற்பாடானது எப்படியும்
தீர்வு கிட்டாது
தடுப்பதாகவே உள்ளது.
இந்நிலையில்
இப் புதிய முகங்களுடன்
வெளிவருகின்ற இந்த
இனவாதமென்ற நரகாசுரனை
இனம் கண்டு எதிர்த்து
நிர்மூலமாக்கி
சமாதானத்தை மீண்டும்
நிலைபெற வைப்பதுதான்
எமக்காக அமைந்துள்ள
தீபாவளியாகும்.

அந்தத் தீபாவளி
இப்போது எமக்கு
ஒரு வெற்றியின் கொண்டாட்டமல்ல!
வெற்றிக்கான போராட்டமே.
இந்தப் போராட்டத்தில்
தர்மமே ஜெயிக்குமென்ற
நம்பிக்கை கொண்டால்
நாம் அதர்ம வழிமுறைகளில்
வீழ்ந்து விடாதிருப்பதும்
அவசியமானதே.
எமது நாட்டில்
தீபாவளியைக் கொண்டாடும்
அனைத்து மக்களோடும்
முரசும் கலந்து
கொண்டு
இந்தப் புரிலைப்
பகிர்ந்து கொள்கிறது.

*மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை*

***என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.***

# ஆன்மீகம்

## வையகம் வாழவேண்டுவோம்!

குழந்தைகள் கோவிலுக்குச் செல்லும் பொழுது பகவானிடம் "நான் நன்றாகப் படிக்க வேண்டும்!" என்று பிரார்த்தனை செய்துகொள்வார்கள். இளைஞர்கள் நல்ல உத்தியோகம் கிடைக்க வேண்டும் என ஆண்டவனை வேண்டுவார்கள். இளம் பெண்கள் தமக்கு நல்ல மணாளனையும், உயர்ந்த வாழ்க்கையையும் தர வேண்டும் எனக் கடவுளைத் துதிப்பார்கள். தாய்மார்கள் தாம், மஞ்சள் குங்குமத்துடன் வாழ இறைவனை இறைஞ்சுவார்கள். வியாபாரிகள் தங்கள் தொழிலில் நல்ல இலாபம் கிடைக்க வேண்டுவார்கள். இப்படி ஒவ்வொருவரும் தங்கள் தங்களுக்குள்ள பிரச்சனைகளைத் தீர்த்துக் கொள்ள கேட்டுக் கொள்வார்களே தவிர, எங்கள் குடும்பம், எங்கள் சமுதாயம், எங்கள் நகரம், எங்கள் நாடு, எங்கள் மதம், இவை சிறப்படைய வேண்டும் என்று யாரும் பிரார்த்தனை செய்து கொள்வதில்லை.

நாடு முழுவதிலுமுள்ள எல்லா ஜீவராசிகளும் நலமுடன் வாழவேண்டும் என்று நரகாசுரனும், அவனுடைய தாயாரும் ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மாவிடம் பிரார்த்தனை செய்து கொண்ட தினம் 'தீபாவளி' தினமாகும். இந்து மதமும் இதையே தான் வலியுறுத்துகிறது. வையகம் முழுவதும் துயர் தீர்க்க பிரார்த்திக்கிறது. தற்கால சூழ்நிலையில் இப்படிப் பிரார்த்தனை செய்வது குறைந்து விட்டதனால்தான் நாட்டில் தனி மனிதப்பிரச்சனையும் தீரவில்லை. சமுதாய தேச பிரச்சனையும் தீரவில்லை. தனிமனிதனின் பிரார்த்தனை சமுதாய தேச-மத சம்பந்தப்பட்டது. எல்லரும் நலமுடன் இருக்க வேண்டும் என அமைய வேண்டும்

எஸ்.என்.ராஜரட்ணம்-கொஸ்லாந்தை



## அனைத்தும் பறிபோகின்றது

நபி (ஸல்) கூறியதாக ஹஜ்ரத் நவ்ஃபல் இப்னு முஆ லியா(றலி) அறிவிக்கிறார்கள். "ஒருவருக்கு ஒரு தொழுகை தவறிவிட்டாலும் அது அவருடைய குடும்பம், சொத்துக்கள் பறிக்கப்பட்டதற்குச் சமம் ஆகும்"

**விளக்கம் :**

குடும்பத்தை கவனிப்பதனாலும், பணம் சம்பாதிப்பதாலும் தொழுகை தவறி விடுகிறது. தொழுகையை விடுவது தனது குடும்பத்தையும், பொருளையும் இழந்து நடுத்தெவில் நிற்பதைப் போன்றதாகும். அதாவது எல்லாம் இழந்து விட்டால் எவ்வளவு கவலையும் துக்கமும் ஏற்படுமோ, அந்த அளவு ஒரு நேரத் தொழுகையை விடுவதால் வருத்தமும் துக்கமும் உண்டாகவேண்டும்.

இன்றைய காலகட்டத்தில் நம்மில் சிலர் வணக்கவழிபாடு இன்றியும் தொழுகையிம் கவனம் இல்லாதவர்களாக உள்ளனர். எனவே அனைவரும் இமாம் ஜமாத்தோடு தொழுகப் பழகுவோமாக!

ஜவாப்தீன் ஜஸ்ரி-மூதூர்-05.

## விசுவாசத்தின் பலன்

எபிரேயர் 11:6

"விசுவாசமில்லாமல் தேவனுக்கு பிரியமாயிருப்பது கூடாத காரியம்"நமது வாழ்வில் ஆண்டவரிடத்திலிருந்து ஏதாவது ஒரு காரியத்தை பெற்றுக்கொள்ள வேண்டுமேயானால், அவருக்கு பிரியமாக நாம் நடந்து கொள்ள வேண்டும். அவருக்கு பிரியமாயிருக்க அவரை நாம் விசுவாசிக்க வேண்டும்.

கர்த்தராகிய கிறிஸ்து இயேசு இவ்வுலகத்திலே அவதரித்து நோயாளிகளை சுகமாக்கி அநேக அற்புதங்களைச் செய்தார். அவரைத் தேடி வந்தவர்களிடம் "என்னால் இக்காரியத்தைச் செய்ய இயலுமென்று விசுவாசிக்கிறாயா?" என வினவினார். விசுவாசித்தவர்கள் மத்தியில் உடன் அற்புதங்கள் நடந்தன. வேதாகமத்தில் ஆபிரகாம் என்பவருக்கு நூறு வயதானபோது ஆண்டவர், "ஒரு மகனைத் தருவேன்!" என கூறியதை விசுவாசித்தார். அதன் பலனாக வயதுபோன அவரது மனைவி சாராளுக்கு ஈசாக்கு பிறந்தார். தொடர்ந்து விசுவாசத்துக்கூடாக அனேக நன்மைகளை பெற்று 'விசுவாசத்தின் தந்தை' என பேர்பெற்றார். இவ் விசுவாசத்தை இல்லாமலாக்க அனேக போராட்டங்கள் வரலாம். ஆனாலும் விசுவாசத்தில் நிலைத்திருந்து நன்மைகளை பெற்றுக்கொள்வோம்.

சகோ.டேவிட் எஸ்.சந்திரதாஸ்-நாவலபிட்டி

## கவிதைப் போட்டி இல.380



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 04.11.2000

கவிதைப் போட்டி இல.380
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

**இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்**



## கவிதைப் போட்டி இல.377

### பரிசுக்குரிய கவிதை

### விதி

ஆறறிவு ஜீவன்கள்...
அன்னையைப் பறித்ததனால்!
ஐந்தறிவு ஜீவனது
அமுதூட்ட வருகையிலே!!
அதையும் அழித்திடுமோ
ஆறறிவின் ஆட்டிலறி?

பி.சதாசிவம்-நுவரெலியா.

### பலம்

அச்சமில்லை இந்த
இளந் தமிழனுக்கு
அருகில் வந்து மோதிப்பார்....
அப்பொழுது புரியும்
எனது பலம்....!

த.பிரையன்-மொனறாகலை.

### எட்டாத சமாதானம்

எட்டாத சமாதானம்
இழுத்தாலும் வராதது போல்! இந்த
புத்தி கெட்ட பசு மாடு
புரளிப்பண்ணுது புரட்சி மண்ணிலே!
விடுவானா.....?
விடவே மாட்டான்!
இவன் தான் தமிழ்க் குழந்தையாச்சே!!!

என்.பாலசுந்தரம்-ஹால்கறனோய.

### பிஞ்சுமனம்

துள்ளியோடும் பசுக்கன்றே-நான்
துணையின்றித் தவித்திருக்க,
நல்ல வேளை உனைக் கண்டேன்
மெல்ல உள்ளம் பூத்ததுவே!

எம்.ராணி-ஹட்டன்.

### தேடல்!

கடந்தகால யுத்தத்தில்
அம்மாவை இழந்தவன் நான்
முத்தமிட்டு என்னை அணைக்க
ஓர் அம்மா தேவை;
அதற்காக தாய்ப்பாசத்தைத்
தேடுபவன் தான் நான்!

வீ.ஸ்ரீதரன்-மல்லிகைத்தீவு.

### வரமாட்டேன் வடக்கு விட்டு

எட பொடியா-என்னை
தேடாக் கயிற்றால் கட்டி
தெற்கு நோக்கி இழுக்காதே-அங்கே
அடாவடித்தனம் அதிகம்-ஆதலினால்
அங்கே நான் வரமாட்டேன்!

ப.அம்பிகாபதி-மன்னார்.

### முயற்சி!

மனத்துணிவு
கொண்ட
மைந்தனே!
விடாதே முயற்சிசெய்!
எதையும் உன்
வழிக்குக் கொண்டுவரலாம்!

க.ஜெ.கரன்-கொட்டகலை.

### நன்றிக் கடன்

பால் கொடுத்து எனை வளர்த்த கோமாதாவே-உன்னைப்
பராமரித்த என் தகப்பன் உயிரோடில்லை!
பாடுபட்டுப் பாலகன் நான் நன்றியோடு-உனை
பாதுகாத்துக் காத்திருப்பேன் பயப்படாதே!

ஏ.எம். ஆறுமுகம்-
கிருலப்பனை.

### கவனம்

கவனம்! கவனம்!
தம்பி கவனம்!
விளையாட்டு
வினையாகி விடும்
தம்பி கவனம்!

அ.யாழினி-
மட்டக்களப்பு.

### யார் உளரோ?

ஆவுக்குத் தீனி தரும்
பாலகனே!
உனக்குத் தீனி தர
பூவுலகில் யாருளரோ....?

சோ.சங்கரலிங்கம்-
திருப்பழுகாமம்-02.

### பே(ா)ர் இழப்பு!

தாயை இழந்த
சிறுவனும்
கன்றை இழந்த
தாயும்
பேசுகிறார்கள் ஊமையாய்
போர் புரிந்த கொடுமையால்!

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில் 02.

### தப்பி விடு

ஐயோ பசுவே! முன்னே
அடியெடுத்து வைக்காதே!
அதோ ஒரு மிதிவெடி....
அப்பால் சென்று விடு!
ஆபத்திலிருந்து தப்பிவிடு!

ந.விகிதா-நெடுங்கேணி.

# வாசக[ர்]சாலை



அன்பு முரசே....

உன்னை ஞாயிறு தோறும் தவறாமல் பெறுவதில் எனக்கு மட்டில்லா மகிழ்ச்சிதான். அதிலும்... நாடு விட்டு நாடு வந்து உன்னைப் பெறுவதில் நித்தம் நித்தம் மகிழ்ச்சியடைகின்றேன். முரசு 370தில் நீ தாங்கிவந்த அத்தனை அம்சங்களும் அருமையே....

அதில் 'எக்ஸ்ரே ரிப்போர்ட்', 'செய்திச் சிதறல்', 'தகவல் பெட்டி' அத்தோடு 370 வயதைத் தொட்ட முரசில்,

100 வயதைத் தொட்ட பட்டத்துராணியம்மா, 2வது எலிசபெத் ராணியம்மாவின் பிறந்த விழா பற்றிய அம்சம் அருமை.

முரசின் சிறுகதைகளான.....

'நாய்க்கு லைசன்ஸ் இருக்கு', 'மனதில் உறுதி வேண்டும்', 'பட்டதாரி' போன்ற கதைகள் பிரமாதம்.

கிரிக்கெட் ஊழலைக் கண்டுபிடிக்க சூட்டப்பட்டுள்ள பெயர் 'ஒப்பரேஷன் ஜென்டில் மேன்' சூப்பர்.

அதையெல்லாம் விட முத்தான அம்சங்களை தித்திக்கும் வகையில் தாங்கிவரும் உந்தன் வருகை சூப்பர்.

புதிய காத்தான்குடி முஸம்மில்-
குவைத்.

முரசுக்கு ஒரு முடங்கல்!

நீ சுமந்து வரும் அரசியல் ஆக்கங்கள் அத்தனையும் சூடு!

இலக்கிய நயமும், இனிக்கும் கிண்ணத்தில் தொனிக்கும் கவிதைகளும், கலக்கல் கதைகளும் சுவை!

வியக்க வைக்கும் வினோதப்படங்களும், சுவைக்கத்தக்கதாகும். 'தகவல் பெட்டி'யும் நவரசம் ததும்பும் நறுமணப்படைப்பும் சுவாரசியம்!

மொத்தத்தில் முரசே உனக்கு எனது கரகோஷங்கள்! வணக்கம் கூறி உன்னை வரவேற்று மகிழ்வுடன் படிப்பதில் பரம திருப்தியடையும் வாசகி -நான்!

திருமதி.அ.அன்னலெட்சுமி-சேனையூர் 06.

அன்பின் முரசே,

*13.08.2000 முரசில் கல்லாறு சதீஷ்க்கு கிடைத்த பணப் பரிசினை ('பனிப்பாறைகளும் சுடுகின்றன' எனும் நூலுக்காக) நோயால் அவதியுறும் படுதலம் சுகுமாருக்கு கொடுத்ததாக இருந்தது. (29.03.1987 ஆனந்த விகடனில் வெளியான ஜோக்ஸ் எழுதிய அந்த படுதலம் சுகுமாரா அல்லது வேறு ஒருவரா? ஆனந்த விகடன் ஆசிரியர் சிறை செல்லவும் காரணமாய் இருந்தது இந்த ஜோக்.*

ஜோன் சித்திரன்-கந்தப்பளை.

விகடனில் 'ஜோக்' எழுதிய அதே படுதலம் சுகுமார் தான் கல்லாறு சதீஷின் பண உதவி பெற்றவர். **-ஆசிரியர்-**

என் முத்தான முரசே!

உன் ஊர்வலம் இவ்வுலகெங்கும் புகழ் பரப்பி பல மக்களின் மனதில் இடம்பிடித்து விட்டாய். 'சிறுகதை', 'கதை', 'அரசியல்', 'தேன்கிண்ணம்', இப்படியான பலசுவைகளை அள்ளித் தந்து கொண்டிருக்கிறாய். உன்னை வாழ்த்தா விட்டால் நியாய மாகுமா? உன் பணி தொடர்ந்தும் பல வெற்றிகளைப் பெற்று சீரும் சிறப்புடனும் வளர என் வாழ்த்து பல கோடி.....

ஜெ.லக்கி-பெரியகல்லாறு.

வாரத்தில் ஒரு முறை வந்து வாசகராகிய எங்கள் நெஞ்சங்களில் குடி கொண்டு இருக்கும் என் இனிய முரசே!

உன்னில் அடங்கியுள்ள ஒவ்வொரு அம்சங்களும் ஆஹா இனிமையிலும் இனிமை. அதிலும் 'மன்னாதி மன்னன்', 'பாப்பா முரசு', 'தேன்கிண்ணம்', 'சிந்தியா பதில்கள்', பகுதிகளில் நான் என்னையே மறந்து விடுகிறேன்.

என் உயிர் மலரே! நான் உன் வரவை எதிர்பார்த்து வழிமீது விழிவைத்து, விழித்திருந்து தபால்காரனை நேசிக்கும் அளவில் நீர் என் மனதில் மிக ஆழமாக குடி கொண்டுள்ளாய். நீ விண் மூலம் சிறகடித்து பறந்து வந்து என் கரம் தழுவியதும் நான் உன்னை ஒவ்வொரு இதழ் இதழாகப் புரட்டிப் புரட்டித்தேன் குடிக்க ஆரம்பித்து விடுகிறேன். மலரே நீர் எவ்வளவு அற்புதமான ஆக்கங்களை என்னைப் போன்ற வாசகர்களுக்கு சுமந்து வருகின்றாய் என் அபிமான உயிர் மூச்சே!

உமக்கு நன்றி சொல்ல என்னிடம் வார்த்தை இல்லையே என்பதையிட்டு வேதனையடைகிறேன். இருந்தும் நீ உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் இருக்கும் வாசக நெஞ்சங்களில் என்றும் குடி கொண்டு இருக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்தித்து என் இனிய மலருக்கும் இதையெல்லாம் வர்ணித்து எழுதும் முரசு ஆசிரியர் அவர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றியும் பாராட்டுக்களும் என்றென்றும் மலரும்!

மணல்சேனை வே.சுதாகரன்-டோகா
கட்டார்.

*11வது பாராளுமன்றம், ஒரு தொங்கு பாராளுமன்றமாக அமையப் போகிறது என்றும், பொது முன்னணியே சிறுபான்மை கட்சிகளுடன் சேர்ந்து ஆட்சியை அமைக்குமென்றும் 377வது முரசு 'எக்ஸ்ரே ரிப்போர்ட்டில்' நரன் தெட்டத் தெளிவாகக் கூறியிருந்தார்.*

*யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, திகாமடுல்ல மற்றும் வன்னித் தொகுதிகளில் யார் யார் வெற்றி ஈட்டுவார்கள், யார் யார் தோல்வியைத் தழுவுவார்கள் என்பன போன்ற கணக்குகள் விவரமாகத் தெரிவித்திருந்தார். நரன் கூறியபடியே, அவருடைய கணிப்பு எந்த வகையிலும் பிசகவில்லை. அப்படியே நடந்து முடிந்துள்ளன. நரனுக்கு எம் பாராட்டுக்கள்.*

*முரசு ஆரம்பித்த காலம் தொடக்கம் அரசியல் நிலவரங்களைப் பற்றியோ, தேர்தல்கால நிலவரங்களைப் பற்றியோ அவ்வப்போது தெரிவித்து வந்த கருத்துக்கள் அத்தனையும் துளிகூட பிசகாமல் அவ்வாறே நடந்து வந்திருக்கிறது. எதிர்காலத்தையிட்டு ஆரூடம் கூறிவரும் முரசு, இனிமேல் வரும் காலங்களிலும் இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் மக்களுக்கு நல்ல வழிகாட்டியாக விளங்கவேண்டுமென்பதே எமது அவாவாகும். வாழ்க முரசு!*

செ.அழகுதுரை-கல்லடி, மட்டக்களப்பு.

**மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266**

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறி இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிக்கொடுத்து விட்டு, வேறு பிரதி வாங்கிக்கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்து விடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

# இனப்பிரச்சனைக்குத் தீர்வில்லாத இணக்கப்பாட்டினால் என்ன பயன்?

ஆளுங்கட்சியும் எதிர்க்கட்சியும் ஓர் இணக்கப்பாட்டுக்கு வந்து இந்நாட்டில் எழுந்துள்ள சில பிரச்சனைகளுக்குத் தீர்வு காணப்போவதாகக் கடந்த சில நாட்களாகச் செய்திகள் அடிபடுகின்றன. ஆனால் இந்த நாட்டை முழுமையாக வாட்டும் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பதற்கோ யுத்தத்தினால் ஏற்படும் சீரழிவுகளைத் தடுத்து நிறுத்துவதற்கோ எந்த விதமான ஆலோசனைகளும் இடம் பெறுவதாகத் தெரியவில்லை.

ஆட்சியிலிருக்கும் பொதுஜன முன்னணியும் எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியும் ஓர் இணக்கப்பாட்டுக்கு உடன்பட்டு வருவதாகச் செய்திகள் கூறுகின்றன. முக்கியமாக சீரழிந்து வரும் நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபடவும், சுயாதீன ஆணைக் குழுக்கள் அமைக்கப்படுவது தொடர்பாகவும் இரண்டு வருடங்களுக்காவது இரு கட்சிகளும் இணைந்து செயற்பட ஏற்ற திட்டங்களை வகுப்பதற்கான முயற்சிகளிலீடு படப்போவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி சந்திரிக்காவின் ஆதரவுடன் பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்காவும் ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவின் அனுசரணையுடன் அக்கட்சியின் சிரேஷ்ட பா.உ. ஆன டிரோன் பெர்னாண்டோவும் இதற்கான பூர்வாங்க பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்டுள்ளனர். இப்பேச்சுவார்த்தைகளின் பெறுபேறுகளை திங்கட்கிழமையன்று கூடிய ஐக்கிய தேசியக் கட்சியின் உயர் மட்டக் குழுவின் முன்வைத்து ஒரு முடிவுக்கு வருவதெனவும் செய்திகள் தெரிவித்தன. ஆனால் திங்கட்கிழமையன்று கூடிய ஐ.தே.கவின் பிரமுகர்கள் மத்தியில் மேற்படி இணக்கப்பாடு தொடர்பான எத்தகைய பேச்சுவார்த்தைகளும் இடம் பெறவில்லையென்று பிந்தி வந்த செய்திகள் தெரிவிக்கின்றன.

இந் நாட்டின் இரு பெரும் கட்சிகள் ஒன்றிணைந்து இந்த நாட்டில் முக்கியமான பிரச்சனைகளில் ஒத்துழைக்கப்போவதாக வெளியான செய்தி, நாட்டு மக்கள் மத்தியில் ஒரு பெரும் நம்பிக்கை விதையை நட்டது போன்ற நிலையை உருவாக்கியது.

இந்நாட்டில் இன்று முக்கியமாக எழுந்துள்ள பூதாகரமான பிரச்சணை இனப்பிரச்சனையாகும். இதனால் ஏற்பட்ட மோதல்களினால் நாட்டின் அமைதியே சீர்குலைந்து போயிற்று. பொருளாதாரம் சின்னாபின்னப்பட்டு சிதறுண்டு போயிற்று.

நாட்டை நிர்மூலமாக்கும் முழுமுதற் பிரச்சனையான இனப்பிரச்சனைக்கு ஒரு தீர்வினைக் காண்பதற்கு ஏற்ற வழிவகைகளைத் தேடுவதற்கு எதுவிதமான முக்கியத்துவமும், மேற்கூறப்பட்ட இரு கட்சிகளுக்கிடையிலான இணக்கப்பாடு பற்றிய பேச்சுவார்த்தைகளில் தலைகாட்டவேயில்லை. இது பெரும்பாலான இந்நாட்டு மக்களுக்குப் பெரும் ஏமாற்றத்தையே தருகிறது.

இரு கட்சிகளுக்குமிடையிலான இணக்கப்பாடு, ஒரு தேசிய அரசாங்கத்தை அமைத்தல் போன்றவார்த்தையெல்லாம் இக்காலகட்டத்தில் தகவல் ஊடகங்களில் இடம் பிடித்து வருகின்றன. இருப்பினும் எந்தவொரு இடத்திலும் நாட்டில் சமாதானத்தை நிலைநாட்ட ஏதாவதொரு வழிதேடவேண்டும் என்ற பொருளில் எவரும், எதுவும் கூறாமலிருப்பது அவதானிகள் மத்தியில் பெரும் விசனத்தையே ஏற்படுத்தியிருக்கிறது. ■

## புலிகளின் தாக்குதலால் திருமலை அதிர்ந்தது

(திருமலை நிருபர்)

திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் திருகோணமலை கடற்படைத் தளத்துறைமுகத்தில் தரித்து நின்ற கடற் பயணிகள் கப்பலொன்றும் படையினரின் அதிவிசேட படகு ஒன்றும் விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்குள்ளாயின.

யாழ் குடா நாட்டுக்கு இராணுவத்தினரை ஏற்றிச் செல்லும் சேவையில் ஈடுபடுத்தப்படுவதென நம்பப்படும் இக்கப்பல் தாக்குதலுக்குள்ளானதைத் தொடர்ந்து கடற்படையினர் சரமாரியாக எதிர்த்தாக்குதல் நடத்தினர். இதனால் திங்கள் அன்று முழுவதும் திருமலை நகரம் அதிர்ந்தது. தொடர்ந்து தாக்குதல் நடைபெற்றபோதும் விடுதலை புலிகளுக்கு ஏற்பட்ட சேதம் பற்றி எதுவும் தெரியவில்லை.

கப்பல் கடலில் அமிழ்ந்து கொண்டிருப்பதை கடற்கரையில் நின்றவர்கள் அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

இலங்கையின் பாரிய கடற்படைத் தளமாக திருகோணமலை கடற்படைத்தளம் விளங்குகிறது. பல மைல் தூரம் கடற்பரப்பை கண்காணிக்கக் கூடிய வசதிகள் பல நிறைந்ததென்பதும் குறிப்பிடத்தக்கது. இத்தளத்தைச்சுற்றி தொடர்ந்து 24 மணிநேரமும் கடற்படையினரின் ரோந்துப் படகுகள் தீவிரகாவல் பணியில் ஈடுபட்டு வருகின்றன. இது தவிர, இதனையொட்டி பல கிலோமீட்டர் தூரம் வரை பாதுகாப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டும்; எவரும் நுழைய முடியாத படி கண்காணிக்கப்பட்டும் வருகிறது. இந்த நிலையில் விடுதலைப் புலிகள் எவ்வாறு நுழைந்தார்கள் என்பதும் கேள்விக்குறியாக இருக்கிறது.

1994ல் சந்திரிக்கா அரசு பதவியேற்றபோது இடம் பெற்ற விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை முறிவடைந்த நிலையில் விடுதலைப்புலிகள் இதே கடற்படைத் தளத்திலிருந்த அதி நவீன வசதிகள் நிறைந்த டோராப் படகொன்றைத் தாக்கியழித்துத் தமது அதிருப்தியை வெளிப்படுத்தினர் என்பது குறிப்பிடத்தக்கது.

கடற்படையினருக்கு உதவுவதற்காக ஹிங்குராகொட விமானத்தளத்திலிருந்து புறப்பட்டுச் சென்ற எம்.ஐ. 24 ரக ஹெலிக்கொப்டர் ஒன்றும் புலிப்படையினரால் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. கிண்ணியாவிலிருந்து மூதூர் நோக்கிச் செல்லும் பாதையில் கடற்கரைப் பிரதேசத்திலுள்ள உப்பாறு என்ற இடத்தில் இந்த ஹெலிக்கொப்டர் வீழ்ந்து நொருங்கியிருக்கிறது. இந்தக் கிராமத்தில் மூன்று வருடங்களுக்கு முன்னர் வாழ்ந்த தமிழ் மக்களை இராணுவத்தினர் குடியெழுப்பி விட்டனர். இதன் பின்னர் இப்பகுதி விடுதலைப் புலிகளின் வசமாயிற்று.

திருமலையிலிருந்து கிண்ணியா செல்லும் பாதையில், துறையடிக்கு அண்மையில் சின்னம்பிள்ளைச்சேனை மற்றும் கரடிப்பூவல் ஆகிய ஊர்களில் விடுதலைப் புலிகள் புகுந்துள்ளனர் என்ற சந்தேகத்தில் இராணுவத்தினர் இக் கிராமங்களுட்புகுந்து தேடுதல் வேட்டை நடத்தியதனால் இங்கு வாழ்ந்த 500க்கும் மேற்பட்ட குடும்பங்கள் குடியெழும்பி வெள்ளைமணலில் குடியேறியுள்ளனர்.

திருமலைத்துறைமுகத்துள் விடுதலைப் புலிகள் ஊடுருவி இருக்கலாம் என்று கருதிய கடற்படையினர் அந்தப் பிரதேசம் முழுவதையும் சல்லடை போட்டுத் தேடி வருகின்றனர். இதனால் திங்கட்கிழமை இரவு முழுவதும் வெடிச் சத்தம் கேட்டவண்ணமேயிருந்தது.

## மலையக மக்கள் முன்னணி தலைவரின் அறிக்கை

பல நாட்கள் தொடர்ந்த வேலை நிறுத்தங்களினாலும் விலைவாசி ஏற்றத்தினாலும் இம்முறை தீபாவளித் திருநாள் மலையக மக்களுக்கு மகிழ்ச்சியாக அமையப் போவதில்லை என்று மலையக மக்கள் முன்னணித் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான திரு.பெ.சந்திரசேகரன் தனது அறிக்கையொன்றில் தெரிவிக்கிறார்.

"அரக்கத்தனம் அழிந்து நீதியும் அமைதியும் நிலைநாட்டப்பட்ட நாளாக தீபாவளித் திருநாளை இதிகாசம் கூறுகின்றது. ஆனால் இன்று நமது நாடு உள்ள நிலையில் யுத்த அழிவுகளும் பாரிய பொருளாதார நெருக்கடிகளும் எதிர்காலத்தின் அச்சுறுத்தலாகியுள்ளன. எதிர்காலத்திலாவது நாட்டின் தொல்லைகள் அகன்று இந்த நாட்டில் வாழும் தமிழ் மக்களும் மலையக மக்களும் சிறப்பாக வாழ வேண்டும் என்று மலையக மக்கள் முன்னணி சார்பில் வேண்டுகிறேன்!" என்று தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

## இடமாற்றத்தை எதிர்க்கும் மக்கள்

கடந்த சில வருடங்களாக கடற்படையின் மக்கள் தொடர்பாளராக (P.R.O) தீவுப்பகுதியில் கடமைபுரிந்த எச்.பி.எம்.மங்கல விஜயரத்ன அவர்கள் இடமாற்றலாகிச் செல்கின்றார். இவர் இனத்துவேசமற்ற அதிகாரி ஆவார். இவர் மக்களுடன் நெருக்கமான உறவை வைத்திருந்ததன் நிமித்தம் இவருடைய இடமாற்றத்தை இரத்து செய்ய வேண்டும் எனக் கோரி பலர் கையொப்பமிட்டு மகஜர் ஒன்றை கடற்படையின் தலைமை அலுவலகத் திற்கு அனுப்பிவைத்துள்ளனர்.

இவர் மாற்றலாகிச் செல்லும் பட்சத்தில் அதே இடத்துக்கு இன்னுமொருவர் (மக்கள் தொடர்பாளர்) நியமிக்க வேண்டிய கட்டாயம் இருப்பதனால், அவர் எப்படிப்பட்டவராக இருப்பரோ மக்களுடன் இனப்பாகுபாடு இன்றிப் பழகுவாரோ? என்ற எண்ணமே மக்கள் மனதை திண்டாடச் செய்கின்றது. நேர்மையாகவும் நியாயமாகவும் மக்களுடன் இனத்துவேசமற்ற முறையில் பழகி தன்னால் இயன்ற சகல விடயங்களையும் திரு.விஜயரத்ன துரிதகதியில் செய்து முடிப்பார். ■

## வடக்கில் உக்கிர மோதல்!

வடபுல நாகர்கோயில் பகுதியில் புலிகளுக்கும் படையினருக்குமிடையில் பலத்த மோதல் ஏற்பட்டுள்ளது. மோதலில் ஈடுபட்டுள்ள இருதரப்பினரும் அதிநவீன ஆயுதங்களை கொண்டு தாக்குதல் நடத்தி வருகின்றனர். இதனால் மக்கள் தொடர்ந்து இடம்பெயர்ந்த வண்ணமுள்ளனர்.

பேரிரைச்சலுடன் கூடிய தாக்குதல்களினால் எந்நேரம் எது நடக்குமோ என்று மக்கள் பீதி கொண்டுள்ளனர்.

இதுவரை நடந்த மோதல்களினால் யாழ் மந்திகை ஆஸ்பத்திரியில் புலிகளின் 20 சடலங்கள் படையினரால் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இவற்றில் ஏழுபேர் பெண்கள் என்றும் ஏனைய 13 பேரும் ஆண்கள் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

புலிகளிடம் கையளிப்பதற்காக அச்சடலங்கள் அங்கு ஒப்படைக்கப்பட்டுள்ள போதும் சடலங்கள் மிகவும் உருக்குலைந்து போயுள்ளதாக மந்திகை ஆஸ்பத்திரித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## பௌத்த கோட்பாடுகளுக்கு முன்னுரிமை

### பிரதமர்

நாட்டில் புத்த சாசனத்திற்கு முன்னுரிமையளித்து அதனை மேம்படுத்துவதற்கான திட்டம் ஒன்றை அமுல் படுத்தப் போவதாக பிரதம மந்திரி அறிவித்துள்ளார்.

22ம் திகதி தலதா மாளிகைக்கு விஜயம் செய்த அமைச்சர், அங்குள்ள பௌத்த துறவிகளிடம் இத்தகவலை வெளியிட்டார்.

"எந்த நிலைமையிலும் பௌத்த கோட்பாடுகளை மேம்படுத்துவதற்கு முதலிடம் கொடுக்கப்படும், புத்தசாசனம் பேணிப் பாதுகாக்கப்படும்!" இவ்வாறு பிரதமர் ரட்ணசிறி விக்கிரமநாயக்கா தெரிவித்தார். ●

## தமிழ்க் கைதிகளுக்குத் தீபாவளி விழா!

பதுளை மத்திய சிறைச்சாலையிலும், தல்தெனவிலுள்ள இளம் குற்றவாளிகள் சீர்திருத்த நிலையத்திலுமுள்ள இந்து தமிழ்க் கைதிகளுக்குச் சிறைச்சாலையில் தீபாவளி நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

சிறைக்கைதிகளின் மத்தியில் ஆன்மீக உணர்வை ஊட்டி அவர்களைச் சமுதாய நீரோட்டத்தில் சேர்ப்பதற்கும் தமக்கும் பிறருக்கும் தீங்கிழைக்காத மனிதநேயம் கொண்டவர்களாக மாற்றுவதற்கும் இத்தகைய நிகழ்ச்சிகள் உதவும் என்று ஊவா மற்றும் வடகிழக்கு மாகாண சிறைச்சாலைகள் சிரேஷ்ட நலன்புரி அலுவலர் திரு.இராசையா இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

இந்த சமய நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு பதுளை ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தானத்தின் அனுசரணை பெறப்பட்டுள்ளது.

பதுளை மத்திய சிறைச்சாலையிலும், பதுளை தல்தென இளம் குற்றவாளிகள் சீர்திருத்த நிலையத்திலும் சுமார் 85 தமிழ்ச் சிறைக்கைதிகள் தடுப்புக்காவலில் உள்ளனர்.

## அதிகரித்த விசேட கொடுப்பனவு!

அரசாங்க ஊழியருக்கு வழங்குவதாக உறுதி அளிக்கப்பட்டிருந்த விசேட கொடுப்பனவு ரூபா 1000/- ஒக்டோபர் மாத சம்பளத்துடன் முழுமையாக வழங்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே செப்டெம்பர் மாத சம்பளத்துடன் 600/- வழங்கப்பட்டிருந்தது. ஒக்டோபர் மாதம் மேலும் 400/-சேர்த்து வழங்கப்பட்டதால் விசேட கொடுப்பனவு 1000/-ரூபாவாக உயர்ந்துள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரித்தமையால் அரச ஊழியர்களுக்கு விசேட கொடுப்பனவு வழங்க அரசு தேர்தலுக்கு முன் வாக்குறுதி அளித்திருந்தது தெரிந்ததே.

## மாறுவேடத்தில் தப்பி ஓட முயன்ற படையினர் கைது!

தம்மை மீன் வியாபாரிகள் எனக் கூறிக் கொண்டு படைமுகாமிலிருந்து தப்பியோட முயன்ற படைவீரர்கள் இருவர் வகையாக மாட்டிக் கொண்டனர்.

மட்டக்களப்பு-வாழைச்சேனை காகித ஆலை பிரிகேடியர் இராணுவ முகாமிலிருந்து தப்பிய இரு இராணுவத்தினர் சிவிலுடை சகிதம் இ.போ.ச.பயணிகள் பஸ்ஸில் ஏறிக் கொண்டனர்.

இவர்கள் இராணுவ முகாமிலிருந்து தலைமறைவாகிய விடயம் சகல இராணுவ முகாம்களுக்கும் தெரியப்படுத்தப்பட்டது. இதனால் போக்குவரத்திலீடுபட்ட வாகனங்களை வழி மறித்துப் படையினர் சோதனையிடத் தொடங்கினர்.

பயணிகள் ஒவ்வொருவரின் அடையாள அட்டைகளைச் சோதனையிட்டுக் கொண்டு வரும் போது, சிங்களப் பெயர் கொண்ட அடையாள அட்டைகள் இவ்விருவரிடமும் இருந்தது. விசாரித்தபோது தாங்கள் மீன் விற்பனையிலீடுபட்டு வருவதாகவும் மட்டக்களப்பிலிருந்து பொலன்னறுவைக்குச் செல்வதாகவும் கூறினார்.

தொடர்ந்து இடம் பெற்ற விசாரணைகளின் போது அவர்கள் தாங்கள் கோப்ரல் தரத்திலுள்ள படை வீரர்கள் என்பதை ஏற்றுக் கொண்டனர். ■

## காணாமல் போவோர் தொகை அதிகரிப்பு!

வவுனியாவில் திடீர் திடீரென ஆட்கள் காணாமல் போகும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துள்ளன. சமீப சில நாட்களுக்கு முன்னர் ஆட்களைக் கடத்தும் வெள்ளை வேன் பீதி அங்குள்ள அனைவரையும் கிலிகொள்ள வைத்தது. பாடசாலை மாணவர்களும் இளவட்டத்தினரும் அச்சுறுத்தப்பட்ட சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன.

ஆட்கள் காணாமல் போனது பற்றிய முறைப்பாடுகளை அவர்களது உறவினர்கள், மனித உரிமை பணிக் குழுவிடம் முறையிட்டுள்ளனர்.

ஒக்டோபர் மாதம் காணாமல் போயுள்ளதாக அந்த அமைப்புக்கு அறிவிக்கப்பட்ட முறைப்பாடுகளில் 8 பேரின் கதி குறித்து எதுவித தகவலும் இல்லை. அவர்கள் என்னவானார்கள் என்று தெரியவில்லை. இந்த 8 பேரில் 13 வயதுச் சிறுவன் ஒருவனும் அடங்குகிறான்.

இதுவிடயமாக பாதுகாப்புத்தரப்பினருடன் சகல வழிகளிலும் தொடர்பு கொண்டு விசாரித்த போது அவர்கள் தங்கள் பிடியில் இல்லை. அவர்களைப் பற்றிய எந்த விவரங்களும் தங்களிடம் இல்லை என்று கைவிரித்து விட்டார்கள்.

தொடரும் இந்த வித அச்சுறுத்தல்கள் வவுனியா நகரில் நடமாடுவதற்கான அச்சத்தையும் பதற்றத்தையும் அதிகரித்துள்ளது என்று மனித உரிமை குழுவினர் கவலை தெரிவிக்கிறார்கள். ●

## மதுவரி இலாகா காவலாளி பதவி

### தமிழருக்கு இல்லையா?

(காரைதீவு நிருபர்)

இலங்கை மதுவரி இலாகாவின் காவலாளிகள் பதவிகள் தமிழ் பேசும் சமூகத்திற்கு மறுக்கப்பட்டுள்ளதா? என்று அச்சமூக இளைஞர்கள் கேள்வியெழுப்பியுள்ளனர்.

மேற்படி பதவிக்கான விண்ணப்பம் கடந்த 16.09.2000ம் திகதியன்று கோரப்பட்டு, 06.10.2000 அன்று முடிவுத் திகதியாகும்.

பிரச்சனை என்னவென்றால், இவ்விண்ணப்பம் ஆக 'தினமின' என்ற சிங்களப் பத்திரிகையில் மட்டுமே கோரப்பட்டிருந்தது. தமிழ்த் தினசரிகளில் ஒன்றிலாவது பிரசுரிக்கப்படவில்லை. இதனால் தமிழ் பேசும் இளைஞர்கள் விண்ணப்பிக்க முடியாமல் போய்விட்டது.

இதேவேளை சிங்கள மொழியில் விண்ணப்பித்தவர்களுக்கான நேர்முகப் பரீட்சை நடைபெறுவதற்கான திகதியும் அந்தந்த பிராந்திய மதுவரி திணைக்களத்தில் நடைபெற உள்ளது.

எனவே தமிழ்த் தினசரிகளிலும் மேற்படி பதவிக்கான விண்ணப்பம் கோரப்பட வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டிருக்கிறது.

### தமிழில் இல்லையா?

இதேபோன்று, தேசியகல்வி நிறுவகம் நடாத்தி வரும் கல்வி முதுமாணி பயிற்சி நெறி 2001லிருந்து தனியே ஆங்கிலத்தில் மாத்திரமே நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

கடந்த வருடம் மேற்படி பயிற்சிநெறி சிங்களத்திலும், தமிழிலும் வெவ்வேறாக நடாத்தப்பட்டு வந்தது. பலத்த போராட்டங்களுக்கு மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட தமிழ் மொழி மூலம் கல்விமுதுமாணி பயிற்சி நெறி 2001ல் நிறுத்தப்படும் அபாயத்தை எதிர் நோக்கியுள்ளது. ●

## உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவி நீக்கப்படும்!

(கண்டி நிருபர்)

சில மாதங்களுக்கு முன்னர் மாகாண சபைகளின் விதப்புரைக்கு ஏற்ப நாடெங்கும் நியமிக்கப்பட்டுள்ள கல்வித்திணைக்களங்களின் உதவிக் கல்விப் பணிப்பாளர் பதவிகள் அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் தொடக்கம் நீக்கப்பட்டு விடும்.

தற்காலிகமாக ஏற்படுத்தப்பட்ட இந்த நியமனங்கள் மாகாண சபைகளைச் சேர்ந்த கல்வித் திணைக்களங்களினால் மேற்கொள்ளப்பட்டதாகும்.

உதவி கல்விப்பணிப்பாளர் பதவிகள் கல்விச் சேவை ஆணைக்குழுவினாலேயே வழங்கப்படுவது வழக்கமாகும். இதன் காரணமாக பல சிக்கல்களையும் மாகாண கல்வி அமைச்சுக்கள் எதிர் நோக்க வேண்டியிருந்தன. என்றாலும் இவர்கள் தமது கடமைகளை தொடர்ந்து இட்டுச் செல்லும் பொருட்டு இவ்வாறு நியமிக்கப்பட்டவர்களை 'இணைப்பாளர்' என்ற பதம் கொண்டு அழைக்குமாறும் கல்வித் திணைக்களப் பணிப்பாளர்கள் கோரப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் இவ்வாறு நியமிக்கப்பட்டோர் உதவிக் கல்விப் பணிப்பாளர் என்ற பதத்தையும் பிரயோகிக்க முடியாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ●

## துப்பாக்கி தவறி வெடித்து பொலிஸ்காரர் பலி!

மட்டக்களப்பு-பாலமீன்மடு பொலிஸ் சோதனைச் சாவடியிலிருந்த பொலிஸ் கான்ஸ்டபிள் ஒருவர் தவறுதலாக வெடித்த துப்பாக்கிச் சூட்டுக்குப் பலியானார்.

இறந்தவர் காமினி-ரத்நாயக்க (30) என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இச்சம்பவம் 21ம் திகதி காலை 8.30 மணிக்கு இடம் பெற்றது. ■

## கிளைமோர் குண்டுகள் மீட்பு!

மட்/ வந்தாறுமூலைப் பகுதியில் 3 கிளைமோர் குண்டுகள் மீட்கப்பட்டதாக படையினர் தெரிவித்துள்ளனர்.

படையினரின் வாகனத் தொடரணிகளைக் குறிவைத்தே இக் குண்டுகள் பொருத்தப்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது.

மரத்தில் பொருத்தப்பட்டிருந்த 3 குண்டுகளில் ஒன்று 15 கிலோகிராம் எடையும் மற்றைய இரண்டும் தலா 4 கிலோ கிராமும் எடை கொண்டவை என்றும் கண்டறியப்பட்டுள்ளது. ●

# விரோதப் போக்கு எம்மிடமில்லை!

முரசு ஆசிரியருக்கு!

தினமுரசில் வெளிவரும் அரசியல் தொடர்பான விடயங்களின் மூலம் பல்வேறு அம்சங்களையும் அறிந்து கொள்ள முடிகின்றது. என்றாலும் கடந்த 377வது முரசில் (08-14, 2000) 'மட்டக்களப்பு முஸ்லிம் பகுதிகளில் விரோதப் போக்கு நிலவுகின்றது' என்ற தலைப்பு பொதுவாக மட்டக்களப்பு முஸ்லிம்களை தாழ்மைப் படுத்துவதாகவும், கொச்சைப்படுத்துவதாகவும் அமைந்தது.

'கல்குடாத் தொகுதி முஸ்லிம்களுக்கு ஒரு எம்.பி. தேவை, என்ற கருத்து உண்மைதான். ஆனால் இத்தொகுதியிலே எம்.பி ஒருவர் தெரிவாக வேண்டும் என்பதற்காக செங்கலடி, ஏறாவூர், மட்டக்களப்பு, காத்தான்குடிப் பிரதேசங்களைச் சேர்ந்த வேட்பாளர்கள் எவரும் கல்குடாத் தொகுதிக்கு வரக் கூடாது என்ற சட்டமும் இல்லை. அவ்வாறான கருத்து இப்பிரதேசங்களில் நிகழவும் இல்லை. ஆனால் இதனை தவறாகப் புரிந்து கொண்டு ஓட்டமாவடி, வாழைச்சேனைப் பகுதி முஸ்லிம்கள் குரோதமுடையவர்கள் என முடிவு கட்டி விட முடியாது.

கடந்த காலங்களில் செங்கலடி, ஏறாவூர் மட்டக்களப்பு, காத்தான்குடி பிரதேசத்தவர்களே எம்.பி.க்களாகத் தெரிவு செய்யப்பட்டனர். அந் நிலையில் கல்குடாத் தொகுதி முஸ்லிம்களது வாக்குகளும் இந்த எம்.பி.க்களையே போய்ச் சேர்ந்தன. ஆனால் அவர்கள் அனைவரும் தங்களது பிரதேச நலன்களையே கருத்திற் கொண்டார்களே தவிர, கல்குடாத் தொகுதி முஸ்லிம்களது நலனை நோக்காகக் கொள்ளவில்லை. இதன் காரணத்தாலே ஓட்டமாவடி, வாழைச்சேனை பிரதேச வாசிகள் அனைவரும் ஒன்று சேர்ந்து பிரதேச ரீதியாக ஒரு எம்.பி.யைத் தெரிவு செய்ய முடிவு செய்தனர். ஆனால் இதனை தவறாகப் புரிந்து கொண்டு 'கல்குடாத் தொகுதியில் பிரதேச விரோதப் போக்கு நிலவுகின்றது' என்ற கருத்து பிழையான முடிவையே தரும் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏ.எம். நளீம்-
வாழைச்சேனை-05.

# இருதய சிகிச்சைக்கு உதவுக!



கொழும்பு முகத்துவாரம் பீரிஸ் ஒழுங்கை, 93/7, இலக்க இல்லத்தில் வசிக்கும், மட்டக்களப்பைச் சேர்ந்த, ஏ.குமுதினி (வயது 28) என்ற இரு பிள்ளைகளின் தாயாருக்கு அவசர இருதய சத்திர சிகிச்சை செய்வதற்கு ரூபா. 200,000/- தேவைப்படுகிறது. ஸ்ரீ ஜயவர்த்தனபுர மருத்துவ மனையில் சத்திரசிகிச்சையை (Bypass Surgery) செய்வதற்கு நிதியுதவி புரியும் வண்ணம் வேண்டுகோள் விடுக்கப்படுகிறது.

நிதியுதவி செய்ய விரும்புவோர், ஏ.குமுதினி அலுத்கடை Hatton National Bank இலக்கம் 0211264016 என்ற இலக்கத்திற்கு பணம் செலுத்துமாறு அன்புடன் கேட்கப்படுகின்றனர். ○


# மட்டக்களப்பு மாந்திரீகம்

உங்கள் பிரச்சினைகளுக்கு தீர்வுகண்டு எதிர்கால வாழ்வில் மகிழ்ச்சி பெறுவதற்கு. மட்டக்களப்பு மாந்திரீக வசியம் செய்து கொள்வதற்கு பரம்பரை வைத்திய மனோதத்துவ நிபுணர் டாக்டர் 'குட்டி' அவர்களுடன் தொடர்பு கொண்டு வெற்றி பெறுங்கள். இரகசியம் வெளியாகாது.

**DR. A.P.S. KUTTY**

50, THEATRE ROAD,NINTHAVUR-21, SRI LANKA. ☎ 067-50349

# ஏசியன் சிகையலங்கார நிலையம்

இல.84. செய்யது அலவிரோட்
சிங்கப்பூர். 207663
[முஸ்தபா நிலையத்துக்கருகில்]
**T.P. 98993370**

உலகப் புகழ்பெற்ற

# எக்ஸ் ஒயில்

TRADE MARK

- காய்ச்சல்
- தலைச்சுற்று
- ஜலதோஷம்
- மூக்கடைப்பு
- காதுவலி
- வயிற்றுவலி
- வாதத்தால் வரும் வலிகள்
- உணர்ச்சியற்ற பாகங்கள்
- சுளுக்கு
- தசை வலிகள்
- பூச்சிக் கடிகள்
- பிரயாணக் களைப்பு
- மதுவால் ஏற்படும் பிரச்சினை
- தலைவலி
- தலைப்பாரம்
- இருமல்
- பல்வலி



Rs.25/= Only (3.ml)

**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி**


எக்ஸ் ஒயிலைப் பெற வசதியில்லாத பகுதிகளில் விற்பனையாளர்கள் தேவை. தொடர்பு கொள்ளவும்.

**SINGHA HOLDINGS (PVT) LTD**

14,Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
**T.P : 888214 Fax : 682984**

# மலையாள மாந்திரீகம்





மலையாள மாந்திரீகத்தை இலங்கையில் திட்டவட்டமாகக் கற்றவர் டாக்டர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை, எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கு மட்டுமே இடமுண்டு எண்ணியவன்-எண்ணியவளைத் திருமணம் முடிப்பதற்குச் சிற்சில தடைகளா, திருமணமே நடக் காதா என்ற ஏக்கமா. காதல் தோல்வியாகிவிட்டதா, கணவன்-மனைவி ஒற்றுமை குறைகிறதா, கையில் பணம் தங்கவில்லையா, பணவருவாய் குறைவா, கொடுத்த கடன் திரும்பி வரவேண்டுமா, குடும்ப வாழ்க்கை இனியவையாக அமையவேண்டுமா, லக்சுமி கடாட்சம் பெறவேண்டுமா, வெளிநாட்டுப் பயணத்தில் தங்கு தடை ஏற்படுகின்றதா, தான் பெற்றபிள்ளை தன் பேச்சைக் கேட்கவில்லையா, பெருவாழ்வு-குபேர வாழ்வு பெற வேண்டுமா, குழந்தைப்பேறு கிட்டவில்லை எனக் கவலையா, கல்வியில் சித்தி பெற வேண்டுமா, கடந்த 33 வருடமாக ஸ்ரீ துர்க்கையின் அருட் கடாட்சத்தால் 100க்கு 100% வெற்றி பெற்றவர்கள் எமது பதிவேடு மூலம் தெரிந்து கொள்ளலாம், வெளிநாட்டவர்களுக்கு கடல் கடந்து செயல்பட கூடிய வண்ணம் அதிவிசேட மாந்திரீக உச்சாட்ட பிரிவு மூலம் உடனுக்குடன் அனுப்புவதால் வெற்றியும் உடனுக்குடன் கிடைக்கிறது. இது ஒரு பிரமாண்டமான அங்கீகாரம் பெற்றதும் வரையறுக்கப்பட்ட நிறுவனத்தில் மாந்திரீகப் பிரிவாக அதி உன்னத சேவையின் நிமித்தம் வெற்றி கிட்டுவது மிக மிகச் சுலபம், மாந்திரீக வேலைகள் வெற்றிக்கு அச்சொட்டான திட்டவட்டமான சரிவரும் திகதியும் கொடுப்பது என்றால் அது எமது திருவருளே, அதுமட்டுமல்ல காண்ட அடிப்படையில் ஜாதகங் களையும் கைரேகைகளையும் தெட்டத் தெளிவாக எழுதி அறிந்து கொள்ளலாம். இன்னும், அனைத்து உலக நாட்டில் வசிக்கும் வெளிநாட்டவர்கள் பிரச்சனைகளை உடனுக்குடன் மாந்திரீக சக்தியால் தீர்வு கண்டமையால், எண்ணற்ற வாடிக்கை யாளர்களின் நற்சாட்சிப் பத்திரங்களை எமது நிருவாக பதிவேட்டில் காணலாம்.

**வெளிநாட்டவர்களுக்கென அதி தொழிநுட்பம் வாய்ந்த 24 மணித்தியால தொலைபேசிச் சேவை உண்டு.**

Tel-466620, 466820 **தேவைகளுக்கு:-**

**உலக மாந்திரீகச் சக்கரவர்த்தி**
Dr.P.K.Saamy J.D.G.A. NL
Hon. Prof. (IUMA)
Sri Durgaadevi Manthirik
Uchchada Peedam.

**கொழும்பில்**
No.162,
Kotahena Street,
Mayfield Road,
Colombo 13,
Sri Lanka.

**நுவரெலியாவில்**
33, Daily Fair Complex,
Kandy Road,
Nuwara-Eliya.
052-22508, 052-35097.

வெளிநாட்டார் தொடர்பு கொள்ளவேண்டிய தொ.பேசி
TEL : 00941 431137
FAX : 00941 344831

உள்நாட்டார்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்
01-466271, 466571
E-mail:drpksamy@sltnet.lk
www.imexpolanka. com/drpksami.

# அஸ்மா நோய்க்கு வைத்தியம்



- தொய்வு
- இளைப்பு
- மூச்சுத்தட்டல்
- நெஞ்சுச்சளி
- இருமல்
- மூக்கடைப்பு
- தலைவலி
- இழுப்பு
- மாய்ச்சல்
- மண்டைச்சளி
- தடிமன்
- கண் கடி
- பீனிசம
- தும்மல்

போன்ற குணங்களுக்கு முழு சுகமடைய உடலுக்கு பாதுகாப்பான, பக்க விளைவுகள் அற்ற மருந்துகளைக் கொண்டு கிரந்தியான, குளிரான, சமிபாடு அடையாத உணவுகளை உண்ணுதல்,குளித்தல் போன்ற பல விளக்க முறைகளுடன் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

ஒருமுறை வைத்தியம் செய்து பாருங்கள் பலன் தெரியும்

டொக்டர்
சுறாஜ்சோமசுந்தரம்

அஸ்மா சிகிச்சை நிபுணர்

Ph.D H(Ind); M.B.B.S CH (Cey)
Govt. Reg. No : A 1553 (1970)

25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை மவுண்ட்லேவினியா - (கொழும்பு)
(பஸ்ஸால் இறங்க வேண்டிய இடம் ஓடியன் தியேட்டர்-காலிவீதி)

**தொலைபேசி இல: 074-201582**

இவ்விடத்தில் பழைய நோயாளர்களும் முன் அனுமதி பெற்ற புதிய நோயாளர்களும் தினமும் மாலையில் 4மணி முதல் 7மணி வரையும் செவ்வாய், வியாழன், சனி கிழமை நாட்களில் காலை 9மணி முதல் 12மணி வரையும் சிகிச்சை அளிக்கப்படுகிறது. புதிதாக வரும் நோயாளர்கள் மேற்கூறிய நாட்களிலும், நேரங்களிலும் தொலைபேசி மூலம்(074-201582) தொடர்பு கொண்டு உங்களுக்கு சிகிச்சை அளிக்கப்படும் நாளையும், நேரத்தையும் முன்அனுமதி பெற்றே (பதிவு செய்து) வரவேண்டும்.



தங்களின் வாழ்க்கையின் கஷ்டங்கள், காதல் தோல்வி, வேலை வாய்ப்பு, கல்யாணத் தடை, பரீட்சைத் தோல்வி, வாகன அனுமதிப்பத்திரம், குடும்பப் பிரச்சனை, கணவன்-மனைவி கருத்துவேறுபாடு ஆகியவற்றை நிவர்த்தி செய்ய என்னை அணுகவும். பிரச்சனை நிவர்த்தியாகியபின் பணம் பெற்றுக் கொள்ளப்படும்.

சந்திக்கும் நேரம்: காலை 10.00 இருந்து மாலை 8.00 மணிவரை

விலாசம் :

**MR. ALI, 55. Rue des Poissonniers, 75018 Paris, France.**
தொலைபேசி-0142552036

# —கவலை வேண்டாம்—

உங்கள் சங்கடம் எதுவாயினும் உடன் வெற்றி காண்பதற்கு தொடர்பு கொள்ளுங்கள். காதல் விவகாரம்; தொழில் விருத்தி; பாலியல் குறைபாடுகள்; திருமண-பிரயாணத்தடங்கல்; முதலானவற்றை விசேடமாய் தீர்வுகாணும்; மட்டுநகர்-மலையாள மணிமாந்திரீகச் சித்தர் "கலாநிதி-சக்தி சரவணா" உங்களை நிச்சயம் வெற்றி பெற வைப்பார். மற்றும், எண்சோதிடம், நினைத்தகாரியம், ஜாதகபலன் முதலான சோதிட அருள் வாக்கும் பெற்று பூரண பலன் பெறலாம். வெளிநாட்டு அன்பர்களுக்கு விசேட துரித சேவை உண்டு. (வியாழன் விடுமுறை) நேரில் காலை 8 மணி முதல் மாலை 3 மணி வரை.


தொடர்பு: **"DR.SHAKTHY SARAVANA"**

வியாழன் விடுமுறை.

48/12 : SRI VIMALASARA ROAD,
KALUBOWILA; DEHIWALA. SRI LANKA. T.P 723646


# நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

கர்த்தர் கொடுத்து 13 ❀ 03 ❀ 1951



அவரே எடுத்தது 12 ❀ 09 ❀ 2000

## திரு.பே.அரியதாசன் J.P

(அரசாங்க ஒப்பந்தக்காரர் ICTAD, உரிமையாளர் ரஞ்சனாஸ், மன்னார்)

2000.09.12 அன்று எம்மை விட்டுப் பிரிந்து இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவன் வைத்தியசாலையில் இருந்த வேளையிலும் அன்னார் காலமாகிய செய்தி கேட்டு நேரிலும் ஏனைய வழிகளிலும் தொடர்பு கொண்டோருக்கும், மலர் வளையங்கள் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும், அனைத்து வழிகளிலும் எமக்கு உதவி ஒத்தாசையாக இருந்து அன்னாரின் இறுதி யாத்திரையில் கலந்து கொண்ட நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம். தனிப்பட்ட முறையில் நன்றி கூற முடியாமைக்கு வருந்துகின்றோம்.

துயருறும் மனைவி மலர்,
பிள்ளைகள்: விமால், ரஞ்சனா.
பெற்றா-மன்னார்.
023-32434


# மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடிமனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

**வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்**

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஓடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழம்பில் ஒக்டோபர் 22 முதல் 28 திகதி வரை**

(கொழம்பு விலாசம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல்: 072-609388

**கல்முனையில் நவம்பர் 04, 05 திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067-29329

**வவுனியாவில் நவம்பர் 11, 12 திகதிகளில்**


(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019

**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
**NO.51/5. Koolavady Road,**
**Batticaloa. SRI LANKA.**


# ஆண்டு ஒன்றிலும் ஆறாகும் கண்ணீர் அஞ்சலி

அன்னையின் மடியில் 21 ✲ 05 ✲ 1971



அதர்மத்தின் கையில் 15 ✲ 10 ✲ 1999

## கணபதிப்பிள்ளை பத்மநாதன்

(உப தலைவர்-பூங்காவன விழாக் குழு-தென் புலோலி புற்றளைச் சித்திவிநாயகர் ஆலயம்)

"நீண்ட காலம் நல்லவர்கள் வாழ்வதில்லை
மாண்டவர்கள் சிலரை மறக்க முடிவதில்லை"
கண்ணீர் நினைவலைகள் ஒன்றாகியும்
நித்தமும் உன்னை நினைக்கின்றோமய்யா
உன்னை இழந்த நிலையில் வாடுகின்ற தந்தை.
நோய்வாய்ப்பட்டு நொந்து நொந்து வாடுகின்றார்
அண்ணன் அவன் ஆவேசத்தில் அத்தியாயம்
எழுதுவாண்டா
உன்னைக் கட்டி வைத்தடித்து கிணற்றில் போட்ட
கோழையர்கள் அமைதி தேடி ஓடுகின்றார்கள்
மரணித்தவர்களைப் பழி வாங்கும் வரை உமது
ஆத்மா சாந்தி அடையுமாய்யா!

சாரையடி-புலோலி

தகவல்: கணபதிப்பிள்ளை குடும்பத்தினர்.

எக்ஸ்ரே ரிப்போர்ட்

# தமிழ் அரசியலின் பலப் பரீட்சை

## கூட்டணிக்கு வந்தது சோதனை!

வடக்கு கிழக்குத் தமிழ் அரசியல் இப்போது புதிய மாற்றத்தை எடுத்து வருகிறது. அதாவது இதுவரை இம் மக்களைப் பிரதிநிதித்துவம் செய்வதில் தம்மைத்தான் தனித்த ஒரு ஜனநாயகரீதியான தலைமையாக நிலைநிறுத்தி வந்த தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைமைத்துவம் இப்போது சரிக்கப்பட்டுள்ளது. அத்துடன் கூட்டணி வழிகாட்டி வந்த பாராளுமன்ற அரசியலுக்கு மாறாக இப்போது புதிய அணுகுமுறை உதயமாகியுள்ளது. நீண்ட காலத்தின்பின் முதன் முதலாக தேசிய அரசியலில் 'பங்குபற்றா அரசியலில்' (Non Partisipant Politics) இருந்து பங்குபற்றும் அரசியலுக்கு (Partisipant Politics) தமிழ் அரசியல் மாற்றப்பட்டுள்ளது. அதாவது வடக்குக் கிழக்குத் தமிழ்த் தரப்பை இணைத்து கூட்டரசாங்கமொன்றை அமைக்க வேண்டிய நிலைமை தோன்றியுள்ளது. அதன் பிரகாரம் தமிழ்த் தரப் பொன்று அரசாட்சியில் பங்கேற்கிறது. மிக நீண்ட காலத்தின்பின் அமைச்சுப் பொறுப் பொன்று தமிழ்த் தரப்பொன்றுக்கு வழங்கப் பட்டுள்ளது.

ஆரம்ப காலங்களில் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டமைத்து அதன் தலைவர் ஜி.ஜி. பொன்னம்பலம் அமைச்சராகியிருந்ததுண்டு. அதேபோல் தமிழரசுக் கட்சி ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டமைத்து திருச்செல்வம் அமைச்சராகியதும் உண்டு. எனினும் 1966ற்குப் பின் எந்த ஒரு வடக்குக் கிழக்குத் தமிழ்ப் பிரதிநிதித்துவமும் கூட்டாட்சியொன்றில் பங்குபற்றியதுமில்லை. அதற்கு இதுவரை எந்த அமைச்சுப் பொறுப்பும் கிடைக்கப்பெற்றதும் இல்லை.

இன்னொரு வகையில் பார்த்தால் இலங்கையின் அரசியலில் இதுவரையிலான எந்தத் தமிழ்த் தரப்பும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் கூட்டாட்சி அமைத்திருக்கின்றனவே தவிர மற்றைய தேசியக்கட்சியான ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடனோ அல்லது அது அமைத்துக் கொண்ட கூட்டணியான பொதுஜன ஐக்கிய முன்னணியுடனோ கூட்டாட்சி அமைத்ததில்லை. குமார் பொன்னம்பலத்தின் தலைமையிலான அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 1990களில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் தேர்தல் கூட்டுக்குச் சென்றிருந்தாலும் அதனால் அக் கூட்டால் ஆட்சியைக் கைப்பற்ற முடியவில்லை. அந்த வகையில் ஒரு தமிழ்த் தரப்பொன்று சுதந்திரக் கட்சியின் தலைமையிலான கூட்டணி அரசாங்கமொன்றில் பங்கேற்பதும் இதுதான் முதல் தடவை. மேலும் மற்றொரு வகையில் 1972ல் இலங்கை குடியரசு நாடாக மாற்றப்பட்ட பின் முதல் முதலின் ஏற்பட்டுள்ள தமிழ்-சிங்கள-முஸ்லிம் கூட்டரசாங்கமும் இதுவே.

இதற்கு முன்னரும் பல தமிழ் அமைச்சர்கள் அரசாங்கத்தில் இருந்திருக்கிறார்கள். கடந்த அரசாங்கத்தில் லக்ஷ்மன் கதிர்காமர் இருந்தார். (இப்போதும் இருக்கிறார்.) அதற்கு முன்னர் தேவநாயகம், ராஜதுரை போன்ற அமைச்சர்களும் இருந்திருக்கிறார்கள். ஆயினும் அவர்கள் எவரும் வடக்கு கிழக்குத் தமிழ்க் கட்சியொன்றின் பிரதிநிதிகளல்ல. அந்தந்த அரசாங்கத்தின் ஆளும் கட்சியைச் சேர்ந்தவர்களே. இந்த வகையில் இவ்வரசாங்கத்தில் முக்கிய அமைச்சொன்றைப் பொறுப்பேற்கும் டக்ளஸ் தேவானந்தா வித்தியாசமானவராக அமைகிறார்.

இந்நிலையில்தான் தமிழர் விடுதலைக் கூட்டணி தன் இருப்புக்கான பாரிய சவாலை எதிர்கொள்ள நேர்ந்துள்ளது.

ஒருபுறம் நடந்து முடிந்த தேர்தலில் அதற்கு ஏற்பட்ட மிகப்பெரிய பின்னடைவு. மறுபுறம் வேறொரு தமிழ்த் தரப்பு கூட்டணியின் இடத்தைக் கைப்பற்றிய நிலையிலும் அதி சக்திவாய்ந்த அமைச்சுப் பொறுப்பொன்றைப் பெற்றுள்ள நிலையிலும் அதன் பலம் வாய்ந்த எதிர்கால வேலைத்திட்டங்களுக்கு முகம் கொடுக்க முடியுமா என்ற நிலை.

கூட்டணியைப் பொறுத்தவரையில் நடந்து முடிந்த தேர்தலின் பெறுபேறுகள் வடக்குக் கிழக்கின் எல்லாப் பகுதிகளிலும் தோல்விகரமானதாகவே முடிந்துள்ளன. வடக்கைப் பொறுத்தவரையில் யாழ்ப்பாணத்தில் அது இரண்டாம் தரப்பாகத் தள்ளப்பட்டுள்ளது. யாழ்ப்பாணத்தில் முதன்மை ஸ்தானத்தை ஈ.பி.டி.பி. ஈட்டிக்கொள்ள கூட்டணி அங்கிருந்த மொத்தம் ஒன்பது ஆசனங்களில் மூன்றையே ஈட்டிக்கொள்ள முடிந்துள்ளது. வன்னியிலோ இதற்கு முன்னைய தேர்தலில் நிகழ்ந்ததைப்போலவே அடியொட்ட நிராகரிக்கப்பட்டுள்ளது. எந்தவொரு ஆசனத்தையும் அதனால் பெற முடியவில்லை.

கிழக்கில் அதன் செல்வாக்கு பெருமளவு வீழ்ச்சிகண்டுள்ளது. மட்டக்களப்பில் முன்னைய தேர்தலில் அது ஈட்டியிருந்த மூன்று ஆசனங்களில் ஒன்றை இம்முறை பறிகொடுத்து இரண்டையே தக்கவைத்துக் கொள்ள முடிந்துள்ளது. அதில் அவதானத்துக்குரிய மற்றொரு விடயம் என்னவென்றால் அதன் தலைமை வேட்பாளரான ஜோசெப் பரராசசிங்கம் கண்டுள்ள வீழ்ச்சியே. அவர் முன்னைய தேர்தலில் பெற்ற சுமார் இருபத்தியிரண்டாயிரம் வாக்குகள் இம்முறை பன்னிரண்டாயிரமாக வீழ்ச்சிகண்டு தனது கட்சிக்குள்ளேயே இரண்டாமிடத்துக்குத் தள்ளப்பட்டுள்ளார். இந்த வீழ்ச்சி இவர் கூட்டணியில் வகித்த முன்னிலை ஸ்தானத்துக்கு ஆப்புவைப்பதாகவும் அமைந்துள்ளது. அவரைச் செல்வாக்கிழந்த தலைவராக வெளிப்படுத்தியதால் மட்டுமன்றி சென்ற முறை கூட்டணிக்குள் கிழக்கு மாகாண உறுப்பினர்கள் வகித்து வந்த பாராளுமன்ற ஆதிக்கம் பறிபோயுள்ளது. இதனால் இம்முறை கூட்டணியின் பாராளுமன்றக் குழுத் தலைமை ஜோசெப் பரராசசிங்கத்தின் கைகளிலிருந்து ஆனந்த சங்கரியின் கைகளுக்கு மாறிவிட்டது.

கிழக்கைப் பொறுத்தவரை மட்டக்களப்பைத் தவிர வேறு எங்கும் கூட்டணியால் ஆசனம் எதையும் பெற முடியவில்லை. அம்பாறையில் கூட்டணியால் போட்டியிட முடியாது போய்விட்ட நிலையில் ஈ.பி.டி.பியைச் சேர்ந்த குணசேகரம் சங்கர் அங்கு அமைக்கப்பட்ட சுயேச்சை அணி மூலம் வெற்றிபெற்றார். இலங்கை முழுவதிலும் கூட ஆசனமொன்றைப் பெற்ற சுயேச்சைக்குழுவாகவும் அதுவே அமைந்தது. இதில் அம்பாறையை ஈ.பி.டி.பி. கைப்பற்றியதன் மூலம் சென்ற தடவை கிழக்கில் கூட்டணி வகித்த ஏக பிரதிநிதித்துவம் தகர்க்கப்பட்டுள்ளது.

திருகோணமலையில் கூட்டணி மமதைத்தனமாக தனித்து நிற்க முனைந்ததில் தான் தோற்றதுமல்லாமல் திருமலைத் தமிழருக்கு எந்தப் பிரதிநிதித்துவமும் இல்லாது போகச் செய்து விட்டது. இரண்டு பிரதிநிதிகளைத் தெரிவு செய்யப் போதுமான சுமார் எழுபத்தொன்பதாயிரம் வாக்காளர்களைக் கொண்ட திருமலைத் தமிழருக்கு எந்த ஆசனத்தையும் வெல்ல முடியாதிருக்க 30 ஆயிரம் வாக்காளர்களையே கொண்ட முஸ்லிம்களால் அங்கு அதிகூடிய ஆசனங்களான 3 ஆசனங்களை இரு பிரதானக் கட்சிகளின் பட்டியல்களில் போட்டியிட்டதன் மூலம் பெற முடிந்துள்ளது. ஒரு சிங்கள பா.உம் தெரிவாக முடிந்துள்ளது. அத்தோடு தமிழ்த் தரப்பைப் பின்தள்ளி பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஐக்கிய தேசியக் கட்சியும் வெற்றி பெற முடிந்துள்ளது.

இந்தக் குளறுபடிகளின் சூத்திரதாரியாக கூட்டணியே அமைந்துள்ளது. அதாவது அது தேசியப் பட்டியலின் பிரதிநிதித்துவத்துக்கு ஆசைப்பட்டு திருகோணமலையைப் பறி கொடுத்துள்ளது. தேசியப் பட்டியலில் கூட்டணியின் செயலாளர் நாயகம் சம்பந்தன் போட்டியிட்டதால் தனது பாராளுமன்ற வாய்ப்பைக் காப்பாற்றும் ஆதங்கத்தில் கூட்டணிக்கான மொத்த வாக்கில் குறிவைத்து திருமலைக்கான பிரதிநிதித்துவத்தைக் காப்பாற்றக்கூடிய பொதுச் சின்னத்தில் போட்டியிட மறுத்து விட்டார். இறுதியில் கூட்டணிக்கு தேசியப் பட்டியல் பிரதிநித்துவம் கிடைக்கவும் இல்லை. திருகோணமலையின் தமிழ்ப் பிரதிநிதித்துவம் காப்பாற்றப் படவும் இல்லை.

இந்த அப்பட்டமான சுயநலத்தால் அம்பலமாகியுள்ள கூட்டணி தான் செய்த இக் கெடுதிக்குப் பதிலளிக்க முடியாத நிலையிலுள்ளது. கூட்டணியின் செயலாளர் நாயகம் சம்பந்தன் தோல்வியயடுத்து வெளிநாடு பறந்துவிட்ட நிலையில் இதற்குப் பதிலளிக்கத் தள்ளப்பட்ட அதன் துணைத்தலைவர் ஆனந்த சங்கரி மோட்டுத்தனமான பதில்களால் சமாளிக்க முனைந்து மேலும் அவஸ்தைக்குள்ளாகிக் கொண்டார்.

திருகோணமலையில் கூட்டணியை அனைத்துத் தமிழ்த் தரப்பு கட்சிகளுடனும் ஒன்றிணைந்து பொதுச் சின்னத்தில் தேர்தலில் நிற்கும்படி கேட்டு அங்குள்ள மக்கள் உண்ணாவிரதம் நடத்திப்பார்த்தும் கூட கூட்டணி அதற்கு இணங்காததுடன் இறுதியில் எந்தத் தமிழ்ப் பிரதிநிதியும் தெரிவாகாதபடி செய்துவிட்டதே என்று ஆனந்தசங்கரியிடம் ஊடகவியலாளர்கள் வினவியபோது, அவர் வழங்கிய பதில் போலித்தனமானதாக அமைந்திருந்தது. "நாம் எந்த ஆயுதக் குழுவுடனும் கூட்டுச்சேர்ந்து போட்டியிட முடியாது. அப்படிப் போட்டியிட்டால் மக்கள் எம்மீது காறி உமிழ்வார்கள்!" என்று அவர் பதிலளித்தார்.

தமது தேர்தலுக்கு ஆயுதப் போராட்டத்தையே அடிப்படை ஆதாரமாகப் பயன்படுத்திக் கொள்ள விளைந்த கூட்டணி மறுபுறம் தம்மை ஆயுதத்தை வெறுக்கும் அகிம்சைவாதிகளாக காட்ட முனைவது இரட்டைத்தனம்வாய்ந்த ஏமாற்றே. இத்தகைய வேடம் அதன் கடந்த காலத்தை மறைக்க முனையும் போலித்திரையும் கூட.

மற்றைய ஆயுத அமைப்புகள் தோன்றி இயங்கிவந்த வேளையில் கூட்டணியும் அதன் அன்றைய தலைவர் அமிர்தலிங்கத்தின் இரண்டாவது மகனான பகீரதன் தலைமையில் தமிழீழ தேசிய இராணுவம் (ரெனா-TENA) என்ற ஆயுதக் குழுவை நிறுவி பயிற்சி கொடுத்தது. இதற்கான போராளிகளை பெருமளவில் மன்னாரிலிருந்து பாக்கு நீரிணையூடாக படகுகள் மூலம் தென்னிந்தியாவுக்குக் கடத்தி வந்து திரைமறைவுப் பயிற்சி முகாம்களமைத்துப் பயிற்சி கொடுத்தது.

அப்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் எண்ணம் யாதெனில், இந்திய அரசாங்கம் மற்றைய யாவரையும் விட கூட்டணியையே விரும்புமாதலால் தனது இராணுவ அமைப்பை இந்திய உதவியுடன் பலப்படுத்தி முதன்மைப் படுத்தி விடலாம் என்பதாக இருந்தது. ஆனால் கற்பனாவாதத்தில் ஆழ்ந்திருந்த கூட்டணியால் முறையான பயிற்சியளித்து ஓர் உறுதியான இராணுவத்தைக் கட்ட முடியவில்லை. அதனால் அது திரட்டிய போராளிகள் விரக்திக்குள்ளாகியிருந்தனர்.

கூட்டணியின் இவ் எண்ணத்தையும் தனது ஆயுத அமைப்பான ரெனாவினால் ஆசைகாட்டி அழைத்துவரப்பட்ட போராளிகளின் விரக்தி நிலையையும் அறிந்து கொண்ட விடுதலைப் புலிகள் தமிழ் நாட்டில் கூட்டணி நடத்திவந்த அந்த இரகசியப் பயிற்சி முகாமைத் தாக்கி அங்கிருந்த போராளிகளைத் தமது படையில் இணைத்துக் கொண்டனர். அத்தோடு கூட்டணியின் அந்தப் பகற்கனவு சிதைந்தது.

இந்த அவமானத்தை மறைக்க கூட்டணி படாத பாடுபட்டு வருகிறது. தான் அவ்வாறு ஒரு படையைக் கட்டவில்லையென்றும் தமிழ் நாட்டில் எந்தப் பயிற்சி முகாமும் வைத்திருக்கவில்லையென்றும் தனது பழுத்த அரசியல் தனத்தால் மறைக்க முனைந்தது. ஆனால் புலிகளால் நேரடியாகத் தகர்க்கப்பட்டு தம்முடன் இணைக்கப்பட்டதை புலிகளிடமிருந்தே மூடிமறைக்க முடியாதென்பதை உணர்ந்து ரெனா தனது இராணுவ அமைப்பில்லையெனக் கூறவிழைந்தது. ஆனால் ரெனாவின் தலைவன் அமிர்தலிங்கத்தின் மகன் பகீரதனேயென்ற உண்மையை மறுதலிக்க முடியாத நிலையில் அதிகூடிய சமாளிப்பாக, அவருக்கும் கூட்டணிக்கும் சம்பந்தமில்லையென்றும் அது அவரது தனிப்பட்ட படையென்றும் தனது வாதத்திறமையால் மெய்யைப் பொய்யாக்க முயற்சிக்கிறது.

எவ்வாறாயினும் ரெனா என்ற கூட்டணியின் அந்த இராணுவ அமைப்பின் கையாலாகாத் தன்மையால் எந்த இராணுவ நடவடிக்கையையும் மேற்கொள்ள முடியாத காரணத்தால் அதைப்பற்றி பொதுமக்கள் அறிந்திருக்கவில்லை. இந்த அறியப்படாத நிலையையே தனக்குச் சாதகமாக்கி தான் வெறும் அகிம்சாவாதி என வெளிக்காட்டி, ஆயுதப் போராளிகளை ஏதோ தீண்டத் தகாதவர்கள் போல விலத்தி வைக்க முனைகிறது.

இதேவேளை கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கத்தின் மூத்த மகன் நிருத்தனும் ஆரம்பத்தில் ஆயுதப் போராளிகளுடன் சேர்ந்து ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டு அரசாங்கத்தால் தேடப்பட்டவரே. ஆனால் மற்றைய போராளிகளை ஆயுத நடவடிக்கைகளில் ஈடுபட்டு அரசாங்கத்தால் தேடப்பட்டவரே. ஆனால் மற்றைய போராளிகளை ஆயுத நடவடிக்கைகளில் இறங்க ஊக்குவித்த கூட்டணித் தலைவர் அமிர்தலிங்கம் தனது மகனை மட்டும் அரசாங்கத்துடன் பேசி விசா பெற்று வெளிநாட்டுக்கு அனுப்பிவைத்துவிட்டார். இதுவே கூட்டணிப்பற்றிய ஆயுதப் போராளிகளுக்கு அவநம்பிக்கை ஏற்படுத்திய முதற் சம்பவமாக அமைந்தது.

கூட்டணி தமிழ் இளைஞர்களைப் போராட மட்டுமன்றி தனது அரசியல் எதிரிகளை அழிக்கவும் தூண்டியது. அவ்வகையில் விளைந்த முதலாவது தமிழ் அரசியல் படுகொலை துரையப்பாவின் படுகொலையாகும். அக் கொலையைச் செய்துவிட்டு வந்த போராளிகள் கூட்டணியின் மற்றைய முக்கிய தலைவர் யோகேஸ்வரனின் வீட்டுக்கே வந்தனர். அவர்களுக்குத் தேனீர் வழங்கியதாக படுகொலை செய்யப்பட்ட கூட்டணியின் முன்னாள் யாழ். மேயர் திருமதி சரோஜினி யோகேஸ்வரன் தெரிவித்திருந்தார்.

அன்று, மரம் பழுத்தால் வௌவால் வரும், வௌவால் எங்கிருந்து வரும், அது ரஷ்யாவிலிருந்து வருமென எமது போராட்டத்துக்கு ஆயுத உதவி கிடைக்குமென்ற பொருளில் மேடைகளில் முழக்கமிட்டதும் இதே கூட்டணிதான். வீட்டுக்கொரு வீரர் திரளவேண்டுமெனப் பிரசாரம் செய்ததும் இவர்களேதான். எனவேதான் இப்போது ஆனந்த சங்கரி ஆயுதக் குழுக்களுடன் சேர்ந்து தேர்தலில் போட்டிபோட்டால் மக்கள் தம்மீது காறி உமிழ்வார்கள் என்று தமது திருமலை மக்களைப் படுகுழியில் வீழ்த்திய பிடிவாதத்துக்குக் காரணம் காட்டுவது நகைப்புக்கிடமானது.

இதில் மக்களுக்கு அவர் செய்யும் மிகப் பெரும் பூச்சுத்தல் என்னவென்றால் இந்திய இலங்கை ஒப்பந்தத்தின் பின்னர் நடந்த 1988ம் ஆண்டுப் பொதுத் தேர்தலில் கூட்டணி, ஈ.பி.ஆர்.எல்.எ.்.ப்., டெலோ ஆகிய ஆயுத இயக்கங்களுடன் கூட்டுச் சேர்ந்தே போட்டியிட்டது. அப்போது இந்த ஆயுத இயக்கங்கள் தீண்டத் தகாதவர்களாக கூட்டணிக்குத் தெரியவில்லை. இதற்குக் இரு காரணங்கள் இருந்தன. ஒன்று தேர்தலில் தாம் எப்படியும் வெற்றிபெற்று தமது அரசியல் இருப்பைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டுமென்ற ஆதங்கம். மற்றையது இந்தியாவின் ஆலோசனைகளை மீறி நல்லெண்ணத்தை இழக்க விரும்பாமை. இவ்வாறான காரணத்தாலேயே முன்னரும் திம்பு பேச்சுவார்த்தைகளின்போது கூட்டணி விடுதலைப் போராளிகளுடன் ஒருமித்து பேச்சுவார்த்தைகளில் கலந்து கொண்டிருந்தது. அதைவிட இந்திய இலங்கை ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்ட பின்னர் அமைக்கப் படவிருந்த வட-கிழக்கு மாகாண சபைக்கான உத்தேச இடைக்கால நிர்வாக சபையில் அது புலிகளின் ஏழு பிரதிநிதிகளுடன் சேர்ந்து தானும் ஒரு பிரதிநிதித்துவத்தை வகிக்க சம்மதித்திருந்தது.

ஆனால் பின்னர் தனக்கான தனி மவுசைப் பேணிக்கொள்வதற்காக எடுத்துக்கொண்ட உத்தியே தன்னைப் போராளிகளிடமிருந்து பிரித்துக் காட்டும் முயற்சியில் இறங்கியது. இவர்களின் இந்த அரசியல் தனத்தினாலேயே இதுவரை பாராளுமன்றத் தமிழ்க் கட்சிகள் ஒன்றுபட்டுச் செயற்பட முடியாமல் போனது. குறைந்தது தமிழ்ப் பேசும் மக்களின் அடிப்படைக் கோரிக்கைகளை முன்னிறுத்தியாவது இவர்கள் பாராளுமன்றத்தில் ஒன்றுபட்டு இயங்கவில்லை. இறுதியாக நடந்த அரசியல் தீர்வுத் திட்டம் குறித்த பேச்சுவார்த்தைகளிற் கூட தமிழ்த் தரப்பினர் ஒன்றாக முடிவெடுத்துச் செயற்பட முன்வராமைக்கும் கூட்டணியின் இந்தத் தனிப்போக்கு ஒரு பிரதான காரணம்.

இதேவேளை ஆயுதக் குழுக்களுடன் சேர்ந்து நின்றால் மக்கள் தம்மீது காறி உமிழ்வார்கள் என்று சங்கரி கூறும்போது உண்மையில் உமிழப்பட்டது தாங்கள் தான் என்ற உண்மையை உணராதவராகவே உள்ளார். யாழ்ப்பாணத்தில் தாம் மக்களால் கைவிடப்பட்டது மட்டுமல்ல வன்னியிலும் முற்றாக நிராகரிக்கப்பட்ட அதேவேளை அங்கு முறையே ஈ.பி.டி.பி.யையும் டெலோவையும் மக்கள் தெரிவு செய்துதான் உள்ளனர்.

உண்மையில் இந்த இறுமாப்பு வீராப்பு என்பனவற்றால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்று கூட்டணி சிந்திப்பதை விட எந்த இடத்தில் எதைச் செய்து மக்களைக் காப்பாற்றலாம் என்று சிந்திப்பதே பொருத்தம். திருமலையில் மற்றைய கட்சிகளோடு ஒன்றாகச் சேர்ந்து பொதுச் சின்னத்தில் கேட்டிருந்தால் மக்கள் இவர்களைக் காறி உமிழ்ந்திருக்க மாட்டார்கள். மாறாக சார்பாக வாக்களித்து ஒன்றுக்கு இரண்டு பிரதிநிதிகளைக்கூட ஈட்டிக் கொடுத்திருப்பார்கள். அதன் மூலம் அம்மக்களின் தயவால் கூட்டணிகூட அங்கு பிரதிநிதிகளைப் பெற்றிருக்கலாம்.

அவ்வாறேதான் அம்பாறையில் மக்கள் கூட்டணி தவிர்ந்த அனைத்துத் தமிழ்க் கட்சிகளும் ஒன்றாய்க் கேட்ட சுயேச்சைக் குழுவுக்கு வாக்களித்து தமக்கு முன்னைய தேர்தலில் இல்லாது போன பிரதிநிதித்துவத்தை மீட்டெடுத்துள்ளார்கள். அங்கு மக்கள் சங்கரி கூறியதுபோல் 'காறி உமிழ' வில்லை. மாறாக அம்பாறையில் வேட்புமனு நிராகரிக்கப்பட்ட கூட்டணிதான் காழ்ப்புணர்ச்சியில் அங்கு ஐக்கிய தேசியக் கட்சிக்குப் பிரசாரம் செய்தது. அங்கு கூட்டணி வேட்பாளர் பட்டியலில் இடம்பெற்றிருந்தவர்கள் கூட அங்கு ஐ.தே.க. மேடையேறிப் பிரசாரம் செய்திருக்கிறார்கள். இது தனக்கு மூக்குப் போனாலும் பரவாயில்லை எதிரிக்கு சகுனம் பிழைத்தால் நன்மை என்று எண்ணும் மனோபாவமாகும்.

எனவே கூட்டணி தன் தோல்விகளை ஜீரணித்துக் கொள்ள முடியாதவர்களாக இருக்கின்ற அதே நேரத்தில் எதிர்காலச் சவால்களை எவ்வாறு எதிர்கொள்ளப் போகிறார்கள் என்பதும் கேள்விக்குரியதே. ஏனெனில் அரசில் அங்கம் வகிக்கும் நிலையில்மிக சக்திவாய்ந்த, தமிழ்ப் பேசும் மக்கள் மத்தியில் நேரடியாக ஈடுபடக்கூடிய, அமைச்சொன்றைக் கைப்பற்றியிருக்கும் நிலையில் இன்னும் சில அவசியமான துணை அமைச்சர் பதவிகளையும் ஈட்டிக்கொள்ளக்கூடியவாறு இருக்கும் ஈ.பி.டி.பி. கட்சியினரை முகம் கொடுப்பது மிகவும் கடினமான ஒன்றாகவே கூட்டணிக்கு அமையப்போகிறது. மேலும் கூட்டணியினருக்கு யாழ்.நகரில் நின்று மக்கள் பணியாற்றக்கூடிய தென்பும் ஆர்வமும் வசதியும் இல்லை. இந் நிலையில் ஒரு போராளிக் குழுவாக இயங்கிய ஈ.பி.டி.பி.யினருக்கு புலிகளின் அச்சுறுத்தலுக்கு மத்தியிலும் அங்கு நின்று பிடிக்கக் கூடியவாறு இருக்கும். முன்னர் கூட்டணியினர் நீலன் திருச்செல்வத்தின் மூலம் அரசாங்கத்தின் அரசியல் தீர்வு வரைக்கும் ஒத்தாசை வழங்கியும் தாமே மக்கள் ஆதரவுடைய தமிழ் அரசியற் கட்சி என்ற நம்பிகையை வழங்கியும் அரசாங்கத்தை ஈ.பி.டி.பி.யின் யோசனைகளுக்கு இணங்காமல் தடுத்து வர முடிந்தது. அவ்வாறே அதன் வட-கிழக்கு மாகாண சபைக்கான இடைக்கால நிர்வாக சபை யோசனைக்கும் முட்டுக்கட்டை போட்டது. இனி அத்தகைய விதத்தில் அரசாங்கத்தைக் கையாள முடியாத நிலையில்கூட்டணி தன்னை நிலை நிறுத்த முடியுமா என்பது கேள்விக்கிடமானதாகிச் செல்கிறது. ஏனெனில் நாம் ஏற்கனவே கூறியிருந்ததைப்போல கூட்டணி தன் பழைய வாக்கு வங்கியை ஒருமுறை இழந்தால் அதை மீள ஈட்டிக் கொள்வது கடினம்!

நரன்

# செய்திச் சிதறல்

மத்திய தரைக்கடலிலுள்ள யேமன் நாட்டுக் கடலோரத்தில் நங்கூரமிடப்பட்டிருந்த அமெரிக்க நாசகாரி கப்பலொன்று ஒக்டோபர் 12ம் திகதியன்று தற்கொலைக் குண்டுதாரிகளின் படகொன்றினால் மோதி சிதைக்கப்பட்டது. இத்தாக்குதலுக்கு யார் காரணம் என்று கண்டறிவதற்காக பலதரப்பட்ட ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இத்தாக்குதலைத் தமிழீழ விடுதலைப் புலிகளே நடத்தியிருக்கலாம் என்று அமெரிக்காவிலிருந்து வந்த நிபுணர்கள் தெரிவித்திருப்பதாக பத்திரிகைச் செய்தியொன்று வெளியாகி இருக்கிறது. இலங்கையிலிருந்து பல்லாயிரம் மைல்களுக்கப்பால் சென்று அமெரிக்கப் போர் கப்பலை தாக்கியழிக்க விடுதலைப் புலிகள் ஏன் முற்பட வேண்டும் என்ற சந்தேகம் இப்பொழுது பரவலாக எழுந்துள்ளது.

கொழும்பு மாநகரசபை மண்டபத்துக்கு முன்புறமாகவுள்ள வீதியில் தற்கொலைக் குண்டுதாரி ஒருவர் குண்டை வெடிக்க வைத்து மற்றும் இருவரையும் கொன்றதுடன் அமெரிக்கக் குடிமக்கள் மூவருக்கும் காயமேற்படச் செய்துள்ளார். பல பொதுமக்கள் இத்தாக்குதலின்போது படுகாயமடைந்துள்ளனர். அலரி மாளிகையில் புதிய அமைச்சர்கள் பதவிப்பிரமாணம் எடுக்கும் தினத்தன்று இத்தாக்குதல் இடம்பெற்றிருப்பதால் கொழும்பில் பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டுள்ளதாக அறியப் படுகிறது. தற்கொலைக் குண்டுதாரி மற்றும் அவர்களுக்கு உதவுபவர்கள் என்று விடுதலைப் புலிகளால் நன்கு பயிற்றப்பட்ட 50 போராளிகள் கொழும்பில் ஊடுருவி இருப்பதாகவும் அரச உளவுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

சிலாபம் இரயில் நிலையத்துக்கு அருகில் இரயில் பாதையில் நடந்து சென்ற ஒருவர் மீது சந்தேகப்பட்ட பொலிஸார் அவரைத் தடுத்து நிறுத்தி பரிசீலனை செய்ய முற்பட்டபோது, அந்த நபர் தன்னிடமிருந்த ஒரு பொதியை போட்டு விட்டு ஓடிச் சென்றுள்ளார். அவரை இது வரை பொலிஸாரால் பிடிக்கமுடியவில்லை.

இராணுவத்திலிருந்து ஏராளமானோர் தப்பியோடிச் சென்றுள்ளனர். இவர்களை மீண்டும் வந்து படையில் சேருமாறு இராணுவ தலைமையகம் பொது மன்னிப்புடன் கூடிய வேண்டுகோள்களை விடுத்தும் போதுமான பலன் கிட்டவில்லை. தவிர புலிகளுடனான மோதல்களிலும் ஏராளமான படையினர் உயிரிழந்து வருகின்றனர். இதனால் படையணிகளில் ஆட்களுக்கான தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பதனால் உடனடியாக படையில் சேருமாறு இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளன. தேர்ந்தெடுக்கப்படும் புதியவர்கள் உடனடியாக பயிற்சி முகாம்களுக்கு அனுப்பி வைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் இனந் தெரியாத துப்பாக்கிதாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்ட மயில்வாகனம் நிமலராஜனின் படுகொலை குறித்து இந்நாட்டிலுள்ள பல தரப்பட்ட ஊடகங்களும், ஊடகவியலாளர் சங்கங்களும் கண்டனங்களை தெரிவித்து வருகின்றன. இது தவிர, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், வவுனியா, போன்ற நகரங்களிலும் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் நடைபெறுகின்றன. புதன்கிழமையன்று நண்பகல் 12 மணிக்கு சிங்கள, தமிழ், ஆங்கில ஊடகவியலாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து கொழும்பில் ஒரு மாபெரும் ஆர்ப்பாட்டத்தை நடத்துவதற்கு திட்டமிட்டுள்ளனர். அமரர் நிமலராஜன் அவர்களின் இறுதிக்கிரிகைகளில் கலந்து கொள்வதற்காக யாழ்ப்பாணத்துக்கு தங்கள் சொந்தச் செலவில் சென்றுவர சில ஊடகவியலாளர் அனுமதி கோரியும் பாதுகாப்புத் தரப்பினர் அனுமதி மறுத்து விட்டனர்.

# அண்டை மண்டலத்தில்....

## ராஜ்குமார் விடுதலைக்கு நெடுமாறன் முயற்சி

கன்னட நடிகர் ராஜ்குமார் தனது இந்த வருட தீபாவளியை காட்டிற்குள், வீரப்பன் கூட்டாளிகளுடன்தான் கொண்டாடமுடியும் போலிருக்கிறது. அவரது விடுதலை தள்ளிப் போய்கொண்டேயிருக்கிறது. அவர் கடந்த ஜூலை மாதம் 30ம் திகதி தமிழ்நாடு கர்நாடக எல்லைப் பகுதியில் அமைந்துள்ள தொட்டகஞ்சனூர் கிராமத்தில் இருக்கும் அவரது பங்களாவிலிருந்து கடத்தப்பட்டார்.

இன்று வருவார், நாளை வருவார் என்று அவரது குடும்பத்தினரும், இரு மாநில அரசுகளும் எதிர்பார்த்து, எதிர்பார்த்து ஏமாந்ததுதான் மிச்சம். நக்கீரன் கோபால் சளைக்காமல் காட்டிற்குள் சென்று வந்து கொண்டிருக்கிறார், வீரப்பன் கோரிக்கைகளை ஏற்றுக் கொள்வதாக இரு அரசுகளும் பதறி அடித்துக்கொண்டு அறிவிக்கின்றன. ஊஹூம், பயனில்லையே. தடாகைதிகளை விடுதலை செய்யக்கூடாது என உச்சநீதிமன்றம் பிடிவாதம் பிடிக்கிறது. சட்டத்திற்கும் நீதிமன்றங்களுக்கும் பயந்தவரில்லையே வீரப்பன். தான் கோரியபடி கர்நாடக சிறைகளிலுள்ள 51 தடா கைதிகளையும், தமிழகச் சிறைகளில் உள்ள ஐந்து தமிழ்தீவிரவாதிகளையும் விடுதலை செய்யாவிட்டால் ராஜ்குமாரை விடுதலை செய்யப் போவதில்லை என்பதில் வீரப்பன் குழுவினர் உறுதியாகயிருப்பது போலத்தான் தெரிகிறது.

இந்நிலையில் விடுதலைப்புலிகளின் தீவிர ஆதரவாளரான நெடுமாறன் உருவில் ஒரு புதிய பிரச்சனை கிளம்பியிருக்கிறது. அவரை இன்னொரு தூதுவராக வீரப்பன் தெரிவு செய்ய, ஆஹா, புலிகள் சாம்ராஜ்யம் உருவாகிறது, இந்திய இறையாண்மைக்கு ஆபத்து என்று புதிதாக ஓலங்கள் துவங்கிவிட்டன. உச்சநீதிமன்றமே அத்தகைய விமர்சனங்களை ஏற்றுக் கொள்வதுபோல பேசுகிறது. இந்தப்பின்னணியில் ராஜ்குமார் விடுதலை கேள்விக்குள்ளாகியிருக்கிறது.

இவர்களில் எவருக்கும் பெரிய அளவில் மக்கள் பலமில்லைதான். ஆயினும் புலி வருகிறது. வந்துவிட்டது என்று பூச்சாண்டி காட்டிகொண்டிருக்கும், தேசபக்த நாடகமாடும் ஜெயலலிதா போன்றவர்கள், விடுதலைப்புலிகளை .எதிர்ப்பதையே தங்கள் தலையாய கடமையாகக் கொண்டு புலம்பிக் கொண்டிருக்கும் பத்திரிகையாளர் சோ.ராமசாமி, ஆங்கில நாளேடு இந்துவின் ஆசிரியர் குழுவினர் என்று இன்னொரு சாரார், இவர்களையெல்லாம் அப்படியே நம்பும் மத்தியதர வர்க்கத்தினர், இத்தரப்பினரின் காரணமாக, தமிழ்தீவிரவாதம் பற்றிய ஒரு பிரமை, தேவையில்லாத ஓர் அச்சம் இந்தியாவெங்கும் ஏற்பட்டிருக்கிறது. இந்தச் சூழலில்தான் நெடுமாறனை தூதுவராக வீரப்பன் அழைக்க, மீண்டும் ராஜ்குமார் விஷயத்தில் ஒரு குழப்பம்.

நான்குமுறை நக்கீரன் கோபால் காட்டிற்குள் சென்று வெறுங்கையுடன் திரும்ப, ஒரு கட்டத்தில் ராஜ்குமாருடன் கடத்தப்பட்ட அவரது உதவியாளர் நாகப்பா நாட்டிற்கு திரும்ப, நாடகத்தில் ஒரு புதிய திருப்பம்

நாகப்பா "நான் தப்பி ஓடி வந்தேன்!" என்கிறார். ஒரு பேட்டியில் வீரப்பனைத் தாக்கிவிட்டு தப்பினேன் என்று கூட கூறினார். காட்டு வழி அவருக்குத் தெரியாது. அவர் தப்பியிருக்கவே முடியாது. வீரப்பனே மேலும் பணம் வேண்டும் என்ற கோரிக்கையை ராஜ்குமார் குடும்பத்தினருக்கு தெரிவிக்கவே நாகப்பாவை விடுதலை செய்திருக்க வேண்டும் என்று சிலர் நினைக்கின்றனர்.

நாகப்பா தப்பிவிட்டார். வீரப்பன் கோபமுற்றிருக்கிறார். வேறுவழியின்றி நான் திரும்பிவிட்டேன் என்று கோபால் அறிவித்தார். இந்த சந்தர்ப்பத்தில்தான் திடீரென்று தனக்கு கசட் ஒன்றினை வீரப்பன் அனுப்பியிருப்பதாக தமிழர் தேசிய இயக்கத்தலைவர் நெடுமாறன் அறிக்கைவிட்டார். அந்தக்கசட்டில் அடித்தட்டு மக்கள் பல்வேறு வழிகளில் நசுக்கப்படும்போது திரும்பிக்கூட பார்க்காது இருக்கும் நீதிமன்றங்கள், அப்பாவி கிராம மக்கள் விடுதலையாகவேண்டும் என்று குரல் எழும்போது மட்டும், சட்டவிதிகளைப் பற்றி பேசுவது எங்ஙனம் என்று கடுமையாக வீரப்பன் கூறியிருக்கிறார். விடுதலைப்புலிகள் தலைவர் பிரபாகரனுக்கும் நெடுமாறனுக்கும் தனது வணக்கத்தினையும் மரியாதையினையும் வீரப்பன் அந்த கசட்டில் தெரிவித்திருந்தார். வீரப்பன் விஷயத்தில் தனக்குத்தான் ஒட்டு மொத்தக் குத்தகை என்று படம் காட்டிக் கொண்டிருந்த நக்கீரன் குழுவினருக்கு பெரும் அதிர்ச்சி. இந்தக் கசட் விவகாரம் அவர்களுக்குத் தெரிவே தெரியாது.

அதிர்ச்சி அத்துடன் நிற்கவில்லை. அடுத்த கட்டம் நெடுமாறன், திண்டிவனம் பகுதியினைச் சேர்ந்த ஓய்வுபெற்ற பேராசிரியர் ப.கல்யாணி, பாண்டிச்சேரி மக்கள் சிவில் உரிமைக்கழக செயலாளர் சுகுமாரன் ஆகியோரை தன்னுடன் பேச அனுப்புமாறு இருமாநில அரசுகளையும் இன்னுமொரு கசட் மூலமாகக் கேட்டு கொண்டார் வீரப்பன்.



கல்யாணி திண்டிவனம் பகுதியில் பல்வேறு மக்களுக்கான போராட்டங்களுக்கு தலைமையேற்றவர், அப்பழுக்கற்ற மக்கள் தொண்டர். நெடுமாறன் சரி, கல்யாணியை ஏன் வீரப்பன் தேர்ந்தெடுக்கவேண்டும்? சுகுமாரனுக்கு தமிழ் தீவிரவாத அமைப்புக்களுடன் நெருங்கிய தொடர்பு இருப்பதாகவே நம்பப்படுகிறது. அவரும் கல்யாணியும் நெருங்கிய நண்பர்கள். எனவேதான் கல்யாணியும் அழைக்கப்பட்டிருக்கிறார்.

வீரப்பன் தமிழினவாதத்தை முழுவதுமாக ஏற்றுக்கொண்டு விட்டார் என்ற கணிப்பை மெய்ப்பிப்பது போலவே அமைந்தது இந்த புதிய அழைப்பு கிருஷ்ணாவிற்கு சற்று தர்மசங்கடம்தான். நெடுமாறன் புலி ஆதரவாளராயிற்றே? ஆயினும் என்ன செய்வது? ராஜ்குமாரை எப்படியும் விடுதலையாகிவிடவேண்டும் என்று தவித்துக்கொண்டிருக்கும் அவரும் சரி, கருணாநிதியும் சரி வேறு வழியில்லாமல், வீரப்பன் கோரியவாறே மூவரையயும் அனுப்பிவைத்தனர். சற்று முனகிக் கொண்டே கோபாலும் அவர்களுடன் சென்றார். இதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட வயதான நெடுமாறனால் கோபால் போல் அடிக்கடி காட்டிற்கு பிக்னிக் செய்யமுடியாது அதை அடுத்து அவர் பிசினஸ் செய்பவர் அல்ல, மற்ற இருவரும் விளம்பரத்திற்கு அறவே ஆசைப் படாதவர்கள். எனவே வீரப்பன் குழுவினரிட மிருந்து ராஜ்குமாரை விடுதலை செய்து விடுவோம் என்ற உத்தரவாதம் வராமல் அவர்கள் காட்டிற்குள் செல்லமாட்டார்கள் என்று கூறப்பட்டது.



நெடுமாறன்

உச்சநீதிமன்றம் கைதிகளை விடுவிக்க ஒத்துக்கொள்ளாவிட்டாலும் புதிய தூதுவர்கள் வீரப்பனையும், தமிழ்நாடு விடுதலைப் படையினரையும் வழிக்குக் கொண்டு வரமுடியும். எனவே இம்முறை ராஜ்குமார் விடுதலை நிச்சயம் என்று பரவலாக நம்பப் பட்டது. அவர்கள் காட்டிற்குள் சென்ற இரண்டாம் நாளே ராஜ்குமார் விடுதலையாகிவிட்டார் என்று வதந்திகள் காட்டுத்தீ போல பரவின. ஆனால் வெளிவந்ததென்னவோ ராஜ்குமாருடன் பிணைக் கைதியாக இருந்த அவரது மருமகன் கோவிந்தராஜ்தான். வெளியே வந்த பிறகு தங்களது பேச்சு வார்த்தைகளின் விளைவாகவே கோவிந்தராஜ் விடுவிக்கப்பட்டதாக நெடுமாறன் அறிவித்தார். ஆனால் எந்தக் கேள்விக்கும் பதிலளிக்க மறுத்துவிட்டார். தங்களது முயற்சி தொடரும் என்று மட்டும் தெரிவித்தார்.

இன்னொரு புறம் உச்சநீதிமன்றம் வீராவேசமாக தமிழக கர்நாடக அரசுகளை மீண்டும் சாடியது. இத்தனை நாள் நீங்கள் எப்படி வீரப்பனை பிடிக்காமல் இருந்தீர்கள்? இப்போது பாருங்கள், விடுதலைப்புலிகளுக்கும் வீரப்பனுக்கும் ஒரு புதிய கூட்டணி உருவாகியிருக்கிறது. அது நாட்டின் இறையாண்மைக்கே சவாலல்லவா? தடா கைதிகளை விடுதலை செய்தால் அவர்கள் காட்டிற்குள் சென்று மீண்டும் வீரப்பன் குழுவில் ஐக்கியமாகிவிட்டால் என்ன செய்வது? அவர்களை விடுதலை செய்த பிறகும் வீரப்பன் ராஜ்குமாரை விட்டுவிடுவார், புதிய கோரிக்கைகள் வைக்கமாட்டார் என்பதற்கு என்ன உத்தரவாதம்? வீரப்பனைப் பிடிக்க ராஜ்குமாரை விடுவிக்க நீங்கள் என்ன திட்டம் வைத்திருக்கிறீர்கள்? கர்நாடக தமிழர்களை பாதுகாக்கமுடியவில்லை என்றால் நீங்கள் எதற்கு ஆட்சியிலிருக்க வேண்டும்? என்றெல்லாம் முழக்கங்கள்.

அடிப்படையில் கர்நாடக சிறையிலிருக்கும் 51 பேரும் குற்ற மற்றவர்களாயிருக்கக் கூடும் என்ற சிந்தனையே அந்த நீதிபதிகளுக்கு வரவில்லை. எட்டாண்டுகளாக விசாரணையின்றி சிறையில் வாடும் அவர்களது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டிருக்கின்றனது என்ற வாதத்தை அவர்கள் கணக்கிலே எடுத்துக் கொள்ளவில்லை.

இவர்கள் ஆட்சிநடத்தி வீரப்பனைப் பிடித்து விடமுடியுமா என்ன? சில நீதிபதிகள் தங்களுக்கு எல்லாம் தெரியும் என்ற ரீதியில் நடந்து கொள்கிறார்கள். அதுவும் மத்திய அரசு பலவீனமாக இருக்கும் போது இந்த நீதிபதிகள் கொந்தளித்தொழுவார்கள். மிரட்டுவார்கள். இந்திரா காந்தி போன்ற வலிமையான தலைவர்கள் ஆட்சியில் இருந்த தால் பெட்டிப்பாம்பாய் அடங்கிவிடுவார்கள். வழக்கு தீபாவளிக்குப் பிறகே உச்சநீதி மன்றத்தின் முன் வரும், இந் நிலையில் மேலும் குட்டையைக் குழப்பியவர் காங்கிரஸ் தலைவர் சோனியா காந்தி, கர்நாடக மாநிலத்திலுள்ள ரெம்ச்சூரில் ஒரு நிகழ்ச்சிக்காக வந்திருந்த அவரிடம் செய்தியாளர்கள் வழக்கம் போல விடுதலைப்புலி ஆதரவாளர் ஒருவரை எப்படி அரசுத்தூதுவராக அனுப்பலாம் என்று கேட்க, நெடுமாறனை வீரப்பனிடம் அனுப்ப முடிவெடுத்ததே கருணாநிதிதான், கர்நாடக முதல்வாருக்கும் அதற்கும் சம்பந்தமில்லை என்று கூறிவிட்டார். கிருஷ்ணா அப்படித்தான் காதில் ஓதியதையே சோனியாகாந்தி செய்தியாளர்கள் வினாவிற்கு பதிலாகக் கூறியிருக்கிறார்.

அதற்கு முதல்நாள்தான் நெடுமாறனும் மற்ற மூவரும் நாங்கள் நடத்திய பேச்சு வார்த்தைகள் குறித்து கிருஷ்ணாவிடமும் மற்றவர்களிடமும் விளக்கவிருப்பதாக அறிவித்திருந்தனர். எல்.ரீ.ரீ.ஈ. பிரச்சனை வந்தவுடன் கிருஷ்ணா ஜகா வாங்கத் துவங்கினார். தூதுக் குழுவினர் பெங்களூர் வந்தாலும் முதல்வர் அவர்களை சந்திக்கமாட்டார் என்று செய்திகள் வந்தன தாங்கள் அவமானப்படுத்தப் பட்டதாகக் கருதிய அவர்கள் தங்கள் பெங்ளூர் பயணத்திட்டத்தையே கைவிட்டனர். அவர்கள் மீண்டும் காட்டிற்குள் செல்வார்களா என்பதே கேள்விக்குறியாகியது.

உச்ச நீதிமன்றம் தடா கைதிகளை விடுதலை செய்ய மறுத்தாலும், கர்நாடக, தமிழ்நாடு அரசுகள் பல்வேறு வழிகளில் அக்கைதிகள் மீதான வழக்கு விசாரணையினை துரிதப்படுத்தி அவர்களை விடுதலை பெற வழிவகைகள் செய்யமுடியும், அப்படிச் செய்வோம் என்ற உத்தரவாதத்தைப் பெறவே தூதுவர்கள் பெங்களூருக்குச் செல்லவிருந்ததாகக் கூறப்படுகிறது. பயணம் ரத்தாக அடுத்து என்ன என்ற கவலை பரவத் தொடங்கியது.

இந்நிலையில் ராஜ்குமாரின் மூன்று மகன்களும் சென்னைக்கு ஓடோடி வந்து கருணாநிதியை தூதுவர்களையும் சந்தித்து தங்களது தந்தை விடுதலைக்கு தொடர்ந்து முயற்சிக்குமாறு கேட்டுக் கொண்டனர். விடுதலைப்புலி ஆதரவாள ராகயிருந்ததால் எங்களுக்கென்ன? எங்களுக்கு வேண்டியதெல்லாம் எங்கள் தந்தையின் விடுதலை. யார் மூலம் அது நடந்தாலும் சரி, அதை நாங்கள் வரவேற்போமென்றனர் அவர்கள். தூதுவர்கள் சினம் சற்று தணிந்திருப்பது போன்றே தோன்றுகின்றது. நெடுமாறனைச் சந்தித்த கர்நாடகத் திரைப்படத்துறையினர் தீபாவளிக்குள்ளேயே ராஜ்குமார் விடுதலையாகிவிடுவார் என்று அவர் தங்களுக்கு நம்பிக்கையூட்டியிருப்ப தாகக் கூறினர்.

### கானகன்

என்ன சொல்லி தூதுவர்கள் வீரப்பனை சம்மதிக்கவைப்பார்கள் என்பது புதிராகத்தான் இருக்கிறது. ராஜ்குமாருக்கு இப்போது வயது 72, 80 நாட்களுக்கும் மேலாக அவர் காட்டிலிருக்கிறார். காட்டில் நிலவும் வெப்ப தட்பத்தாலும், சரியான உணவு இல்லாததாலும், மன உளைச்சலின் காரணமாகவும் அவரது உடல் நலம் குன்றி, அவருக்கு ஏதாவது ஆகிவிட்டால்? எல்லோரும் வயிற்றில் நெருப்பைக் கட்டிக் கொண்டிருக்கிறார்கள். கர்நாடகத்திலுள்ள 18 லட்சத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் எந்நேரமும் பயந்து நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். ராஜ்குமார் திரும்பிவந்தால் கூட, அவரது ரசிகர்கள் தங்களை தாக்கக்கூடும் என்று அஞ்சுகிறார்கள் அவர்கள். தமிழகத்திலும் லட்சக் கணக்கில் கன்னடர்கள் இருக்கிறார்கள். பல வர்த்தக நிறுவனங்கள் நடத்துகிறார்கள்.

கர்நாடகத்தமிழர்கள் தாக்கப்பட்டால் தமிழகத்தில் உள்ள கன்னடர்களும் தாக்கப்படக்கூடும். ஒரு வேளை அப்படி ஒரு கலவரம், இரத்தக் களறி தான் தங்களது தனித்தமிழ்நாட்டு கோரிக்கைக்கு வலு சேர்க்கும் என்று வீரப்பனும் தமிழ்தீவிரவாதிகளும் நம்புகிறார்களோ?

## கென்னடி ஜீனியரின் காதல் விவகாரம்...?



ஜனாதிபதி ஜோன் எ.்.ப். கென்னடி-ஜக்குலின் தம்பதிக்குப் பிறந்த இளைய மகன் ஜோன் கென்னடி ஜீனியர், தந்தையைப் போல் பிரபலமடைவார் என்று ஆரூடம் கணிக்கப்பட்டிருந்தது. ஆனால் 1998ம் ஆண்டு யூலை 16ம் திகதியன்று தனது மனைவி கரோலின் மற்றும் அவளது சகோதரி லோரன் ஆகியோரையும் அழைத்துக் கொண்டு தன்னுடைய விமானத்தில் பறந்து கொண்டிருந்த போது விபத்தில் சிக்கி மரணமானார் உடன் சென்ற இருவரும் கூட இவ்விபத்தில் கொல்லப்பட்டனர்.

1996ம் ஆண்டு கரோலினை கென்னடி ஜூனியர் மணந்தார். ஒரே ஒரு வருடம் தான் இவர்கள் மகிழ்ச்சியாக வாழ்க்கை நடத்தினர். பின்னர் இருவரும் எப்பொழுதும் சண்டைபிடித்துக் கொண்டு பிளவு பட்ட மனதுடன் வாழத்தலைப்பட்டனர்.

மணமுடித்து இருவருடங்களிலேயே மனக்கசப்பு ஏற்பட்ட மையினால் கணவன்-மனைவி என்ற பேரிலேயே வாழ்ந்து வந்தனரேயன்றி தாம்பத்திய உறவு இருக்கவில்லை. கென்னடி ஒரு குழந்தைக்குத் தகப்பனாக வேண்டும் என ஆசைப் பட்டார். ஆனால் கரோலின் குழந்தை பெறுவதை வெறுத்தாள்.

தனது மனைவியின் போக்குக்கு என்ன காரணம் என்பதை அறிந்த ஜோன், தன் மனைவி ஒரு தன்னினச் சேர்க்கையில் மகிழ்ச்சி காண்பவள் என்பதை அறிந்து கதிகைத்தார்.

இக்காலகட்டத்தில் தான் சிவில் ஹில் என்ற 34 வயது அழகியை ஜோன் கண்டு அவளிடம் தன் மனதைப் பறி கொடுத்தார். 1998ம் ஆண்டு ஆரம்பத்திலிருந்து ஜோன் விபத்தில் சிக்கி மரணமடையும் காலம் வரை சிவில்-ஜோன் கென்னடி உறவு வளர்ந்தது. கொலறடோமியிலுள்ள அஸ்பென் நகரின் ஓர் ஆடை அலங்காரக் கடையில் தான் சிவிலை ஜோன் முதன் முதலில் கண்டார். தனது மனைவி கரோலின் அதே சாயலைக் கொண்டிருந்த போதும், கரோலினைப் போலல்லாது ஜோனை அதிகமாக நேசித்தாள்.

சிவிலுக்கு ஹண்டலிப்ரன் என்ற ஒரு காதலனும் இருந்தான் அவன் வாடகைக்கு எடுத்திருந்த ஒரு வீட்டையே சிவில் தன்னுடைய புதிய காதலன் ஜோன் கென்னடியுடன் உல்லாசமாகக் களிப்பதற்கு உபயோகித்து வந்தாள்.

சிவிலை அவளுடைய வேலைத்தளத்திலிருந்து அழைத்துச் செல்வதற்காக அவ்விடம் வரும் போதெல்லாம், தன்னை எவரும் அடையாளம் காணாதபடி தனது தலையிலுள்ள தொப்பியின் முன்பகுதியை கீழே இறக்கி முகத்தை மறைத்துக் கொள்வார்.

சிவில், ஜோன் கென்னடி மரணமடைந்தமையினால் மிகவும் கவலைப் பட்டாள். ஜோன் கென்னடியின் நெருக்கம் கிடைத்ததும் தனது பழைய காதலரின் உறவைத் துண்டித்தவள், இப்பொழுது 'அரசனை நம்பி புருசனைக் கை விட்ட' நிலையில் உள்ளாள்.

# அலசுவது - இராஜதந்திரி

# ஓராண்டு!

தினமுரசு, முதலாவது இதழ் வெளிவந்த தினம் இன்றுங்கூடப் பசுமையானதாக இருக்கின்றது.

ஒரு சிறு பிள்ளைபோல எல்லையில்லா மகிழ்ச்சியில் அந்த முதலாவது தினமுரசு இதழைத்தூக்கிப் பிடித்தவராக ஆசிரியர் நடராஜா அற்புதராஜா ஓர் ஆனந்தத்தாண்டவமே ஆடியிருந்தார்.

அன்றிலிருந்து தினமுரசுவின் ஒவ்வொரு இதழும் வாசக நெஞ்சங்களை வாரி அணைக்கும் காந்தசக்தியாக இலங்கையின் தமிழ்ப்பத்திரிகை உலகில் ஒப்பாரும், மிக்காருமற்ற ஒரு பத்திரிகையாகவே உருமாறியிருந்தது.

சிறுவயது முதலே கவிதை, கட்டுரை என்பவற்றில் அற்புதமான ஆற்றலைக் கொண்டவராக காலஞ்சென்ற ஆசிரியர் நடராஜா அற்புதராஜா விளங்கியிருந்தார். வாசிப்புப் பழக்கத்தையும் அதன் மூலம் தாம் கிரகித்து மனதுக்குப் பிடித்தவற்றை எழுத்துவடிவில் கொண்டு வருவதை ஒரு பொழுதுபோக்காகவே கொண்டிருந்த அற்புதனின் அபார எழுத்தாற்றலுக்கு தினமுரசு களம் அமைத்திருந்தது.

இலக்கிய விடயங்களாக இருக்கலாம்; அல்லது அரசியல் சமாச்சாரங்களாகலாம். அற்புதனின் கைவண்ணம் அபரிமிதமாகவே அவர் கையாண்ட விடயங்களில் வெளிப்பட்டதைக் காணமுடிந்தது.

இலங்கையின் தமிழ்ப்பத்திரிகை வரலாற்றை எடுத்து நோக்கினால் பல தமிழ்ப்பத்திரிகைகள், பல்வேறு முன்னணிப் பத்திரிகையாளர்களது கைவண்ணத்தோடு பன்நெடுங்காலமாகவே வெளிவந்தவண்ணமுள்ளன.

ஆனால் தினமுரசு பத்திரிகை தனியொரு நடராஜா அற்புதராஜாவின் கைவண்ணத்தில் ஒரு புயலாகவே வீசி ஏனைய பத்திரிகைகளை ஓரங்கட்டித் தனது தனிச்சிறப்பை நிலைநாட்டியிருந்தது.

தினமுரசுப் பத்திரிகையையும் வளர்த்து அதனூடாகத் தம்மையும் ஒரு சிறந்த பத்திரிகை ஆசிரியராக வளர்த்துக் கொண்ட நடராஜா அற்புதராஜா, இவ்வுலகைவிட்டுப் பிரிந்து ஓராண்டு நிறைவெய்துகின்றது.

ஏழு ஆண்டுகாலத்தில் தினமுரசு பத்திரிகையை இலங்கையில் மட்டுமல்ல உலகில் தமிழ் மக்கள் வாழுகின்ற அனைத்துப் பகுதிகளிலுமே ஒரு முன்னணிப்பத்திரிகையாக அற்புதன் வலம் வரவைத்திருந்தார்.

லண்டன் மாநகராக இருக்கலாம்; சிட்னி, ஒஸ்லோ, பாரிஸ், டொரன்டோ, பெர்லின் என்று தமிழ் மக்கள் உலகநாடுகளில் செறிந்து வாழுகின்ற நகரங்கள் அனைத்திலுமே தினமுரசு, தமிழ் வாசகர்களின் மனங்கவர்ந்த இதழாகவே வெளிவருவதற்கு அற்புதனின் ஆற்றலே அத்திபாரமிட்டிருந்தது.

அற்புதன் கையாளுகின்ற எந்தவொரு விடயமும் சொற்சுவை, பொருட்சுவை நிரம்பியதாக மட்டும் இருக்கவில்லை. தீர்க்கதரிசனம் மிக்கவையாகவும் அமைந்திருந்தன.

கடந்தகால நிகழ்வுகளை அலசி ஆராய்ந்ததோடு நிகழ்காலத்தையும் பகுத்தறிந்து எதிர்காலம் குறித்தும் கணிப்பீடுகள், மதிப்பீடுகளை வெளிப்படுத்துபவையாகவே அற்புதன் கையாண்ட விடயங்கள் விளங்கியிருந்தன.

தமிழ் வாசகர்கள் தினமுரசு இதழைத் தமது வாழ்க்கையின் ஓர் உற்ற துணையாகக் கருதி அதனோடு ஒன்றுகலந்திருந்த வேளையிலேயே அற்புதனின் இன்னுயிர் பறிபோயிருந்தது.

இலங்கையில் தற்போது செய்தி ஊடகத் துறை பெரிதும் வளர்ச்சிகண்டுள்ள நிலையில் பத்திரிகைத்துறை சார்ந்தவர்களது எண்ணிக்கையும் அதிகரித்ததாகவே இருக்கின்றது.

இருப்பினும் ஊடகத்துறையின் பாதுகாப்பு, அதன் தனித்துவம் என்பவை அச்சுறுத்தல்களுக்குள்ளாகிப் பத்திரிகைத்துறை சார்ந்தவர்களது வாழ்க்கையும் நெருக்கடிக்குரியதாக மாறி வருவதற்கு ஓர் எடுத்துக்காட்டாகவே அற்புதனின் திடீர் மறைவு காணப்படுகின்றது.

1988ம் ஆண்டு இலங்கையில் பிரபல ஆங்கிலப் பத்திரிகையாளரான ரிச்சார்ட் டி சொய்ஸா கொல்லப்பட்டிருந்தார். அன்றிலிருந்து இன்றுவரை இலங்கையில் சுமார் 31 பத்திரிகையாளர்கள் கொலை செய்யப் பட்டுள்ளனர் எனக் கணிப்பிடப்பட்டுள்ளது.

ஜனநாயகத்தின் உயிரோட்டமாக இருப்பது கருத்துச்சுதந்திரமாகும். இச்சுதந்திரத்தை வெளிப்படுத்தும் பத்திரிகையாளர்கள் கண்மூடித்தனமாக, ஈவிரக்கமற்ற முறையில் கொலை செய்யப்படுவது, ஜனநாயக விழுமியங்களையே குழிதோண்டிப் புதைப்பதாகவே இருக்கின்றது.

அமரர் நடராஜா அற்புதராஜாவின் வாழ்க்கை ஒரு குறுகிய காலப்பகுதியைக் கொண்டதாக இருந்த போதிலும் நிறையவே அனுபவங்களை உள்ளடக்கியதாகவே விளங்கியிருந்தது.

வடக்கே யாழ்ப்பாணக்குடாநாட்டில் தீவிரவாதப் போராட்டம் ஆரம்பித்த காலப்பகுதியில் தம்மையும் தீவிரவாத அரசியலில் அற்புதன் இணைத்துக்கொண்டார். வெறுமனே ஆயுதமேந்திய ஒரு போராளியாக மட்டும் அவர் இருக்கவில்லை.

தெளிவான அரசியல் சிந்தனையோடு நடத்தப்படுகின்ற ஆயுதப் போராட்டமே அர்த்தம் நிறைந்ததாகவும், தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை வென்றெடுக்கக் கூடியதாகவுமிருக்கமுடியும் என அற்புதன் எண்ணியிருந்தார்.

குறுகிய கண்ணோட்டங்கள், பிற்போக்கான எண்ணங்கள் என்பவற்றை நிராகரித்த அற்புதன், வாளின் கூர்மையைவிட பேனாவின் கூர்மையே வலிமையானது என்பதை உணர்ந்திருந்தார்.

இதன்காரணமாகவே ஜனநாயக வழிக்குத் திரும்பியதோடு தம்மையும் ஒரு முழுநேரப்பத்திரிகையாளராக அற்புதன் மாற்றியிருந்தார்.

தினமுரசு பத்திரிகையை ஆரம்பித்த காலம் முதல் கடந்தகால அரசியல் வரலாறுகளை வாசகர்கள் முன்பாகக் கொண்டுவந்ததோடு, ஒவ்வொரு அரசியல், இராணுவ விடயங்களையும் மிக நுணுக்கமாகவும் ஆணித்தரமாகவும் அற்புதன் அலசி ஆராய்ந்திருந்தார்.

அவரது துணிச்சலான போக்கு ஏனைய தமிழ் பத்திரிகையாளர்களுக்கும் ஒளிவு, மறைவின்றி அரசியல், இராணுவ விடயங்களைக் கையாள வழியமைத்திருந்தது.

தினமுரசு பத்திரிகையை எடுத்துக் கொண்டால் அதனை ஒரு முழுமையான பத்திரிகையாகவே அற்புதன் வடிவமைத்திருந்தார்.



வெறுமனே அரசியல், இராணுவ விடயங்களை மட்டுமல்ல. சிறுவர், பெண்கள், வயோதிபர் என அனைத்துத்தரப்பினருக்கும் ஏற்ற விதத்தில் ஜனரஞ்சக விடயங்களைத் தாங்கியதாகவே தினமுரசு வெளிவரவேண்டுமென்பதில் அற்புதன் முனைப்பாக இருந்தார்.

எனவே ஒரு தீவிரவாத அரசியலாளராக இருந்து, பின்னர் ஜனநாயக அரசியலில் ஈடுபட்டு, பத்தரிகைச்சுதந்திரத்தையும் உயர்ந்த தரத்தில் பேணிவந்த வேளையிலேயே அற்புதன் கடந்த ஆண்டு இதேகாலப் பகுதியில் பட்டப்பகல்வேளை படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

அரசியல்வாதிகளை நோக்கி மட்டுமல்ல பத்திரிகையாளர்களை இலக்குவைத்தும் துப்பாக்கிகள் திரும்பியுள்ளமை துர்ப்பாக்கியமானதாகவே இருக்கின்றது.

சர்வதே சரீதியாகக்கூட பத்திரிகையாளர்கள் படுகொலை செய்யப்பட்டுவரக் காணப்படுகின்றனர்.

அற்புதன் படுகொலை செய்யப்பட்டு ஓராண்டு பூர்த்தியான நிலையில் நடந்து முடிந்த தேர்தல் காலத்தின்போது கிழக்கிலங்கையில் ஒரு மூத்தபத்திரிகையாளராகத் திகழ்ந்த செழியன் பேரின்பநாயகம் சுட்டுக்கொல்லப்பட்டிருந்தார்.

இதன்பின்னர் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் பத்திரிகையாளர் மயில்வாகனம் நிமலராஜன் அவரது இல்லத்தில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டிருந்தார்.

வெளி உலகத்துக்கு யாழ்ப்பாணத்துடனான தொலைத்தொடர்பு வசதிகள் கடந்த ஒரு சில வருடங்களாக மீளவும் ஏற்படுத்தப்பட்ட காலம் முதல் பி.பி.ஸியின் தமிழ்ச் சேவை, மற்றும் சிங்களச்சேவை என்பவற்றுக்கு நிமலராஜன் நிறையவே பங்களிப்புச் செய்து வந்தார்.

அரசியல், இராணுவ விடயங்களை மட்டுமல்ல யாழ்குடாநாட்டில் இடம்பெறும் அடிப்படை மனிதஉரிமை மீறல்கள் குறித்த சமாச்சாரங்கள் பலவற்றையும் நிமலராஜன் வெளி உலகுக்குத் தெரிவித்து வந்தார்.

பி.பி.ஸியின் தமிழ்ச்சேவையில் மட்டுமல்லாது; சிங்களச்சேவையான சந்தேசயவிலும் நிமலராஜனின் செய்திகள் வெளியாகிவந்தன.

இவைதவிர தென்னிலங்கையில் இருந்து வெளிவருகின்ற ராவய, யுக்திய போன்ற சிங்களப்பத்திரிகைகளுக்கும் நிமலராஜன் பங்களிப்புச் செய்து வந்தார்.

சிங்களத்திலும் அவர் தேர்ச்சி பெற்றிருந்தமையால் தமது பேச்சு மூலமாகவும், எழுத்து மூலமாகவும் தென்னிலங்கையில் இருக்கும் சிங்கள மக்கள் மத்தியிலும் நிமலராஜன் வடபகுதி நிலபரங்கள் பற்றி எடுத்துக் கூறிவந்தார்.

வடக்கே ஜனநாயக விழுமியங்கள் பலவும் வலுவிழந்த நிலையில் அங்கே பத்திரிகைத் துறைக்கும் அச்சுறுத்தல்கள் இருப்பதையே நிமலராஜனின் மரணம் எடுத்துக்காட்டுகின்றது.

1981ம் ஆண்டு யாழ்ப்பாணப் பொதுசன நூலகம் எரிக்கப்பட்ட அதே இரவிலேயே யாழ்ப்பாணம் ஈழநாடு பத்திரிகைக் காரியாலயமும் தீக்கிரையாக்கப்பட்டு அழிக்கப்பட்டிருந்தது.

இதன் பின்னர் 1987ம் ஆண்டில் இந்திய அமைதிப்படை யாழ்ப்பாணத்தில் காலடி எடுத்து வைத்த தருணத்தில் ஈழநாடு அலுவலகம் மீளவும் தாக்கப்பட்டிருந்தது. அத்துடன் யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் வேறு சிலபத்திரிகைக் காரியாலயங்களும் தாக்கப்பட்டிருந்தன. எனவே வடக்கு-கிழக்கில் இடம்பெற்றுவரும் யுத்தசூழலில் பத்திரிகையாளர் மீதான அச்சுறுத்தல்களும் தொடர்ந்து இருந்துவருவதையே அவதானிக்க முடிகின்றது.

ஒரு தரப்பினருக்குரியவனாகவோ அல்லது ஒரு பக்கஞ்சார்ந்தவனாகவோ ஒருபோதும் ஒரு பத்திரிகையாளன் இருந்துவிட முடியாது.

எம்போதுமே நடுநிலையாக, பக்கஞ்சாராது நீதி, நியாயங்களை எடுத்துக் கூறுவதே பத்திரிகையாளனின் பணியாகின்றது.

எனவே ஜனநாயக மரபுகளின் அடிநாதமாக இருக்கும் பத்திரிகையாளர்கள் மீது கைவைப்பதென்பது ஜனநாயகத்தையே வெட்டிவீழ்த்துவதாகவே இருக்கின்றது.

ஒரு பத்திரிகையாளனின் அபார சக்திக்கு எடுத்துக்காட்டாகவே அமரத்துவமடைந்த நடராஜா அற்புதராஜா ஆரம்பித்து வைத்த தினமுரசு பத்திரிகை விளங்குகின்றது.

இந்நிலையில் பத்திரிகா தர்மம் என்ற அபார சக்தியை மதிப்பளித்துப் பாதுகாப்பதன் மூலமே ஜனநாயகத்தையும் அதனூடாக மனுதர்மத்தையும் பேணிப்பாதுகாக்கமுடியும்.

## அதிரடி அய்யாத்துரை



**நடந்து முடிந்த** தேர்தலில் கண்டி, குருநாகல் பிரதேசங்களில் தேர்தல் பிரசாரங்களுக்கா இராணுவ வாகனங்கள் கூட தாராளமாகப் பாவிக்கப்பட்டதாம். ஜெனரல்களும் இத் தொகுதிகளில் போட்டியிட்டதால், இராணுவ வாகனங்களும் விரிவாகப் பாவிக்கப்பட்டனவாம். யுத்தகளத்தில் மட்டுமல்ல, தேர்தல் களத்திலும் இராணுவ வாகனங்கள் பாவிக்கப்பட்ட நிலையில் தேர்தல்களில் கூட யுத்தத்தின் வாடை சிறிது வீசியிருந்ததையும் காணமுடிந்தது.

**இத்தடவை சிங்களத்** திரைப்படவிருது விழா ஜனாதிபதி இல்லத்தில் வைத்தே நடந்திருந்தது. வழமையாக பண்டாரநாயக்கா சர்வதேச மகாநாட்டு மண்டபத்திலேயே இவ்விழா அதன் ஆரம்பகாலம் தொட்டு நடைபெற்று வந்தது. ஆனால் இத்தடவை தனது வீட்டுக்குள்ளேயே விழாவை நடத்திக்கொண்டார் ஜனாதிபதி. பத்திரிகையாளர்களுக்கும் அனுமதி இல்லை. விருது பெறுபவர்கள் மட்டுமே அழைக்கப்பட்டு, ஆட்டமோ, ஆர்ப்பாட்டமோ இன்றி விருதுகள் வழங்கப்பட்டன. கலகலப்பான விழாக்கள் கூட காலஞ்செய்த கோலத்தினால் முடங்கிப் போயிருக்கின்றன.

**முதலை வடிவில் வானில்** பறக்கும் எம்.ஐ. 24 ரக ராட்சத ஹெலிகப்டர் ஒன்று வடக்கே நாகர் கோயில் பகுதியில் சுட்டு வீழ்த்தப்பட்டுள்ளது. புலிகள் புதிய ஆயுதமொன்றைப்பாவித்து தாக்கியுள்ளார்கள் என்று படைவட்டாரம் கூறுகிறது. விமானப்படை ஒரு மாத காலத்தில் இரு ஹெலிகாப்டர்களை இழந்திருக்கிறது. கடந்த மாதம் அமைச்சர் அஷ்ரப் பயணஞ் செய்த ஹெலிகாப்டர் மலையில் மோதி நொருங்கியது. தற்போது நாகர் கோயிலில் மற்றொரு ஹெலி சுடப்பட்டு எரிந்து நாசமாகியுள்ளது.

**பெண்கள் உலகக்கிண்ண** கிரிக்கெட் போட்டியில் இலங்கை அணியும் பங்குபற்றுகிறது. நியூஸிலாந்தில் நடக்கவிருக்கும் இப் போட்டியில் இலங்கை அணியின் உதவிக் கப்டனாக தமிழ்ப் பெண்ணொருத்தியே நியமிக்கப்பட்டுள்ளார். சுதர்ஷி சிவானந்தன் என்பவரே அப்பெண். முத்தையா முரளிதரன் இலங்கை அணிக்கு மாடாக உழைத்தும் உதவிக்கப்டன் பதவிக்கு புதுமுகங்களையே போடுகிறார்கள். பெண்கள் அணிக்கு எடுத்த எடுப்பில் தமிழ்ப் மங்கை ஒருத்தியை உப கப்டனாக்கியிருக்கிறார்கள்.

**இலங்கையில் குடும்ப ஆட்சி** அரசியலில் நன்றாகவே புகுந்து விளையாடுகிறது. அக்கா ஜனாதிபதி, தம்பியார் அநுரா பாராளுமன்றத்தின் சபாநாயகர். தாயும், தந்தையும் பிரதமர்களாக இருந்தவர்கள். புதிய பரிமாணங்களோடு தொடருகிறது பண்டார நாயக்கா குடும்ப அரசியல்.

# கைமாறிப்போன கோட்

**உலகப்புகழ் பெற்ற எழுத்தாளர் ரோல்ட் டோல் எழுதிய சிறுகதையின் தமிழ் வடிவம்.**

'எட்டு வருஷமா என் கணவருக்கு நான் துரோகம் பண்ணிட்டுதான் இருக்கேன். பிலடெல் :.பியாவில் இருக்கற என் அத்தை வீட்டுக்கு வர்றேன்னு சொல்லிட்டு வாரம் தவறாம சனிக்கிழமையானா இங்க உள்ள கர்னலை சந்திச்சு, அவரோட ஜாலியா இருக்கறது மனசுக்கு உறுத்தலாதான் இருக்கு. ஆனா என்ன பண்ணறது? என் கணவர் ஒரு பல் டாக்டர். காலைலேர்ந்து இரவு வரைக்கும் நோயாளிகள், ஆஸ்பத் திரி இப்படியே அவர் வாழ்க்கை. அவரோட ரசனையும் என்னோட ரசனையும் சுத்தமா ஒத்துப் போகல. ஆனா கர்னல் என்னோட ஒவ்வொரு விஷயத்தையும் ரசிக்கிறார். பாராட்டுறார்.' என்று தனக்குள் யோசித்துக் கொண்டிருந்தாள் பெட்சி.

இரண்டு நாட்களாக கர்னலுடன் உல்லாசமாகக் கழித்துவிட்டு, பிலடெல் :.பியா ரயில்வே ஸ்டேஷனிலிருந்து தனது கணவர் ஊரான நியூயோர்க்குக்குச் செல்ல ரயில்வே ஸ்டேஷனில் காத்திருந்தாள், பெட்சி. ரயிலில் ஏற முற்பட்ட பொழுது அந்த கர்னலின் வேலையாள் ஒருவன் அவசரமாக இவளை நோக்கி ஓடிவந்தான்.

"கர்னல் உங்ககிட்ட இந்த பார்சலைக் கொடுக்கச் சொன்னாரு," என்று கூறிவிட்டு வந்த வேகத்தில் திரும்பிப் போனான். அதற்குள் ரயில் வந்தது.

பெட்சி தனது இருக்கையில் ஏறி அமர்ந்து கொண்டாள். யாருமில்லாத அந்த கூபேக்குள் சென்றவுடன், கர்னல் கொடுத்த பார்சலில் என்ன இருக்கிறது என்ற ஆர்வத்துடன் அதைப் பிரித்தாள். உள்ளே ஒரு மின்ட் கோட். உலகின் பெரும் பணக்காரர்கள் மட்டுமே அணியக் கூடிய கோட் அது. விலை கிட்டத் தட்ட ஐநூறு டொலராவது இருக்கும். பெட்சி எல்லையில்லா மகிழ்ச்சியில் திளைத்தாள். உடனடியாக அந்த கோட்டை அணிந்தும் மகிழ்ந்தாள். அந்த கர்னலின் வள்ளல் தன்மையை எண்ணி எண்ணிப் பூரிப் படைந்தாள். ஆனால் அந்த மகிழ்ச்சி பத்து நிமிடங்களே நீடித்தது. காரணம் அந்த பார்சலில் கர்னல் ஒரு கடிதத்தையும் வைத்திருந்தார்.

'டியர் பெட்சி. உன்னுடன் வாழ்ந்த நாட்களை நான் என்றென்றும் மறக்க மாட்டேன். ஆனால் இனி நமக்குள் எந்தத் தொடர்பும் வேண்டாம். உன்னைப் பிரிய மனமில்லாமல் ஏங்கும் நான், கடைசியாக அளிக்கும் இந்த சின்னப் பரிசை நீ பெற்றுக் கொள்ள வேண்டும்,

என்று சுருக்கமாக அந்த கடிதத்தில் கர்னல் எழுதியிருந்தார். 'எப்படி அந்த கர்னலால் என் தொடர்பை துண்டித்துக் கொள்ள முடிந்தது? என்னால் அவரை மறக்க முடியுமா?' என்று தனக்குள் கேள்விக் கணைகளை தொடுத்துக் கொண்டாள் பெட்சி. ரயில் வேகமாக இவள் கணவர் குடியிருக்கும் நியூயோர்க்கை நோக்கி பறந்து கொண்டிருந்தது. இப்பொழுதுதான் இன்னொரு பிரச்சனை தனக்கு காத்துக் கொண்டிருக்கிறது என்பதே பெட்சிக்கு புரிந்தது. இந்த விலையுயர்ந்த கோட்டை தனது கணவரிடம் காட்டினால் யார் கொடுத்தார்? ஏன் கொடுத்தார்? என்ற கேள்வியெல்லாம் எழும்பும்.

அத்தைக்கு இந்தளவுக்கு வசதி இல்லையென்பது பெட்சியின் கணவருக்கு தெரியும். என்ன செய்வது, எப்படி சமாளிப்பது என்று யோசிப்பதற்குள் நியூயோர்க் ஸ்டேஷன் வந்துவிட்டது. ஆனால் இந்த இடைப்பட்ட நேரத்தில் ஒரு தீர்மானத்துக்கு வந்தாள் பெட்சி. டாக்சி பிடித்தாள். நேராக ஒரு வட்டிக்கடைக்குள் சென்றாள்.

"சார்! நான் என் மணிப்பர்ஸை தொலைத்து விட்டேன். இன்று ஞாயிற்றுக் கிழமை என்பதால் பேங்க்கும் விடுமுறை. அதனால் தயவு செய்து இந்த கோட்டை வைத்து ஒரு ஐம்பது டாலர் எனக்கு பணம் தாருங்கள்," என்று அந்த கடைக்காரரிடம கேட்டாள் பெட்சி.

"ஓ.கே. உங்க பேர் அட்ரஸ் சொல்லுங்க மேடம்!"

"பேர் அட்ரஸெல்லாம் ஒண்ணும் வேணாங்க. இத வச்சி அம்பது டாலர் கொடுங்க. ஒரு சின்ன ரெசிப்ட் குடுங்க நான் நாளைக்கே வந்து பணத்தை கொடுத்துட்டு கோட்டை வாங்கிட்டு போறேன்." என்று அவனிடம் கூறிவிட்டு வீடு வந்து சேர்ந்தாள் பெட்சி.

"சாரி டார்லிங்! டிரெயின் லேட்டாச்சு. அதான் நேரமாயிடுச்சு" என்று கணவரிடம் கூறிவிட்டு அவசர அவசரமாக லஞ்ச் ரெடி செய்தாள் பெட்சி. பிறகு தற்செயலாக ஏதோ ஞாபகத்திற்கு வந்தது போல் தனது கோட் பையிலிருந்து ஒரு பேப்பரைவெளியே எடுத்து,

"டார்லிங் இன்னைக்கு கார்ல வரும்போது இந்த ரெசிப்ட் எனக்கு கிடைச்சது. இது என்ன ரெசிப்ட்?" என்று ஒன்றும் அறியாதவள் போல் அந்த வட்டிக்கடை ரெசிப்டை கணவனிடம் நீட்டினாள் பெட்சி.

"ஐயோ.... இது வட்டிக்கடை ரெசிப்ட். அட்ரஸ் கூட இதுல போட்டிருக்கே. ஆனா பொருளை அடமானம் வச்சவங்க இதை மிஸ் பண்ணியிருக்காங்க. இதுல அவங்களோட பேரு விலாசம் இருந்தாக்கூட பரவாயில்லை. அதுவும் இல்லை. என்ன பொருள்னும் இதுல குறிப்பிடலயே. ஆனா உனக்கு ஒரு அதிர்ஷ்டம். இந்த ரெசிப்டையும் அதில போட்டிருக்கிற அம்பது டாலரையும் கடையில் கொடுத்தா அந்த பொருள் உனக்கு சொந்தமாயிடும் தெரியுமா?" அப்பாவித் தனமாக சொன்னான் ஜான் ஹேமர்.

"அப்படீங்களா? ஆனா அது என்ன பெரிய பொருளா இருக்கப் போகுது?"

"அதில்லம்மா அந்த பொருள் குறைந்த பட்சம் ஐநூறு டாலர் பெறுமானம் இருந்தாத்தான் ஐம்பது டாலர் கடன் கொடுப்பாங்க அதனால கண்டிப்பா அது ஒரு நல்ல பொருளாத்தான் இருக்கும். வேணும்னா நானும் உங்கூட வர்றேன். நம்ம ரெண்டு பேரும் போயிட்டு இந்த பொருளை மீட்டுட்டு வருவோம். அது ஆம்பளை சம்பந்தப்பட்ட பொருளா இருந்தா நான் வச்சுக்கறேன். பொம்பளை சம்பந்தப் பட்டதுன்னா உங்கிட்ட கொடுத்துடறேன். ஓ.கேவா?" ஜான் ஹேமர் வெகுளித்தனமாக மீண்டும் பேசினான்.

"ஐயோ ஹாஸ்பிட்டலுக்கு போறவழியில தானே இந்தக் கடை இருக்கு நீங்களே போய் வாங்கிட்டு வந்துடுங்க. நான் என்னத் துக்கு?" என்று சாதுர்யமாக அந்தக் கடைக்கு போவதை தவிர்த்தாள் பெட்சி.

மறுநாள் ஜான் ஹேமர் ஹாஸ்பிட்டலிலிருந்து பெட்சிக்கு :.போன் செய்தான்.

"டார்லிங்! நாம நெனைச்சதைவிட அது பெரிய கிப்ட்தான். நமக்கு அதிர்ஷ்டவசமா கிறிஸ்துமஸுக்காக ஏதோ ஒரு இளிச்ச வாயன் குடுத்திருக்கான். நீ உடனே புறப்பட்டு இங்கே ஹாஸ்பிடலுக்கு வா. உனக்கு அதை மாட்டி அழகு பார்க்கணும்." என்று ஜான் ஹேமர் கூற, அடுத்த கணமே காரில் ஏறி ஹாஸ்பிடல் பறந்தாள் பெட்சி. தனது கணவனை ஏமாற்றிய தனது சாதுர்யத்தை எண்ணி மகிழ்ந்து தன்னைத்தானே பாராட்டியபடியே ஹாஸ்பிடலுக்குள் நுழைந்தாள்.

"பெட்சி முட்டாள்தனமா இந்த மோதிரத்தை அம்பது டாலருக்கு வச்சிருக்கான். ஆனா நம்மள பொறுத்தவரைக்கும் இது ரொம்ப லக்கி. இந்தா டார்லிங்" என்று பெட்சியின் கையைப் பிடித்து ஒரு மோதிரத்தை மாட்டிவிட்டார் ஜான் ஹேமர்.

பெட்சிக்கு இடி விழுந்தது, போல் ஆனது. ஆனால் கணவரிடம் எப்படி கேள்வி கேட்பது. அந்த மின்ட் கோட்விவகாரத்தை எப்படிச் சொல்வது?

"சரிங்க. நான் புறப்படறேன்!" என்று கூறிவிட்டு அந்த வட்டிக் கடைக்காரனை கொலை பண்ணனும் என்று மனதுக்குள் பேசியபடி வாசலுக்கு வந்தாள் பெட்சி. அங்கு அவளுக்கு ஒரு பேரதிர்ச்சி காத்திருந்தது.

ஜான் ஹேமரிடம் பல நாட்களாக பணிபுரிந்து வரும் அவனுடைய செகரட்டரி ஸ்டெல்லா அந்த ஐநூறு டொலர் பெறுமானமுள்ள அந்த மின்ட் கோட்டை அணிந்து தேவதைபோல் நடந்து வந்தாள். ●



## இன்னொரு டெண்டுல்கர்

கடந்த உலகக்கோப்பை கிரிக்கெட் போட்டிகள் இங்கிலாந்தில் நடந்த போது இந்த அணியின் சச்சின் டெண்டுல்கரைப் போல இருக்கும் ஒருவர், இந்தியா விளையாடிய போட்டிகளில் எல்லாம் வந்து காட்சியளித்தார் அல்லவா?

அந்தப் போலி டெண்டுல்கரின் அசல் பெயர் வினோத் கெய்க்வாட். சச்சின் டெண்டுல்கர் போலவே தோற்றமளிக்கும் வினோத்தை வைத்து சில நிறுவனங்கள் விளம்பரப்படங்கள் எடுத்திருக்கின்றன.

சச்சினை வைத்து பெரும் தொகை செலவளித்து விளம்பரம் செய்ய முடியாதவர்கள் குறைந்த செலவில் வினோத்தை வைத்து விளம்பரம் செய்கின்றனர்.

இப்போது வினோத்தை வைத்து



இரண்டு இந்திப்படங்கள் தயாரிக்கப் பேச்சு வார்த்தைகள் நடந்து வருகின்றன.

## பெரிய பிரச்சனை



இங்கிலாந்தில் இருந்து வெளியாகும் 'ஸ்லிம்மிங்' என்ற பத்திரிகை சமீபத்தில் ஒரு புதுமையான ஆய்வை நடத்தியது. உடல் எடை அதிகமாகவும், பெரிய மார்பகங்களைக் கொண்ட 2000 பெண்களிடம் இந்த ஆய்வை நடத்தியது.

இந்த ஆய்வில், "நீங்கள் குண்டாக இருப்பதால் என்னென்ன பிரச்சனைகள் ஏற்படுகின்றன? வெளியிடங்களுக்குச் செல்லும் போது எப்படிப்பட்ட தொந்தரவுகளைச் சந்திக்கிறீர்கள்?" போன்ற பல கேள்விகள் கேட்கப்பட்டன.

இந்த 2000 குண்டுப் பெண்களிடம் நடத்திய ஆய்வின் மூலம் அவர்களது மனக்குமுறல்கள் இதுதான்.

"நாங்கள் குண்டாக இருப்பதால் உடல் நலம் அடிக்கடி பாதிக்கப்படுகிறது. வெளியில் போகும் போது எங்களைப் பலர் வேடிக்கையாகப் பார்ப்பது அதை விடக் கொடுமையாக இருக்கிறது.

பொது இடங்களில் சாப்பிடக் கூட எங்களுக்கு கூச்சமாக இருக்கிறது. காரணம் அங்கு எங்களைக் கூர்ந்து வேடிக்கை பார்க்கிறார்கள். இப்படிப் பல விஷயங்கள் இருக்கின்றன. நாங்கள் சந்தோஷப்பட்டுக் கொள்ளும் ஒரே விடயம் எங்களை மாதிரியுள்ள பல பெண்மணிகள் பிரபலமானவர்களாக இருப்பதுதான்!"

என்று தமது கருத்துக்களைத் தெரிவித்து இருக்கிறார்கள்.

குண்டுப் பெண்கள் பலர் ஒல்லியாக மாற உடற்பயிற்சி செய்வதும், உணவுக் கட்டுப்பாட்டில் இருப்பதும் இந்த ஆய்வு மூலம் தெரிய வந்துள்ளது.' ▭

## வீரப்பனும் விளம்பரமும்

வியாபாரத்தை பெருக்க விளம்பரம் செய்வார்கள். விளம்பரங்களில் பல புதிய புதிய உத்திகளைப் புகுத்திவரும் வேளையில் உங்கள் புருவங்களை உயர்த்தும் விளம்பரச் செய்தி இது.

கன்னட நடிகர் ராஜ்குமார், சந்தனக் கடத்தல் வீரப்பனால் கடத்தப்பட்டது இந்தியாவில் பரபரப்பாக பேசப்படும் விடயங்களில் ஒன்று. வீரப்பனைப் பற்றிப் பரவலாகப் பேசப்படும் இந்நேரத்தில் வீரப்பனை வைத்தே விளம்பரம் செய்திருக்கிறார் ஒரு வியாபாரி.

கேரள மாநிலத்தின் பத்தனம் திட்டா என்ற ஊரில் உள்ள ஒரு நகை வியாபாரி, தனது கடைக்கு முன்னால் வீரப்பனது கட் அவுட் ஒன்றைப் பெரிதாக வைத்துள்ளார். அதில் வீரப்பன் கழுத்தில் தங்கச் சங்கிலி, கையில் பிரெஸ்லேட் எல்லாம் அணிந்திருப்பதுபோல் அமைத்துள்ளார்.

அந்த பக்கத்தால் போவோர் வருவோர் எல்லாம் ஒரு நிமிஷம் நின்று அந்தக் கட் அவுட்டைப் பார்க்கத் தவறுவதேயில்லை



யாம். அதனால் அந்த நகைக்கடை பிரபலமாகி, வாடிக்கையாளர் கூட்டம் பெருகியுள்ளதாம்.

இப்போது அதை அகற்றச் சொல்லி காட்டிலாகா சம்பந்தப்பட்ட நிறுவனம் ஒன்று பொலிஸில் புகார் செய்திருக்கிறது. ▭

## நிஜமான நிழல்



கணினியில் விளையாட்டுப்பகுதிக்கு லாரா குரோஃப்ட் என்ற பெண்ணை உருவாக்கியிருப்பதை அறிந்திருப்பீர்கள். 376வது முரசின் கடைசிப் பக்கத்தில் இதைப் பற்றி விரிவாக எழுதப்பட்டுள்ளது.

இந்தப் பெண் செய்யும் சாகசங்களால் பெரிய அளவில் பேசப்பட்டு வருகிறார். கம்பியூட்டர் கிரஃபிக்ஸ் மூலம் உருவாக்கப்பட்டிருக்கும் இந்தப் பெண்ணைப் போல ஒரு மொடலை உருவாக்கியிருக்கிறார்கள்.

கம்பியூட்டர் கிரஃபிக்ஸ் மூலம் உருவாக்கப்பட்ட லாரா குரோஃப்டிற்கு இருக்கும் மவுசைக் கண்டதும் லாரா கிரோஃப் டைப் போன்ற நிஜ அழகியை பொது நிகழ்ச்சிகளில் இடம்பெறச் செய்திருக்கிறார்கள்.

கம்பியூட்டர் விளையாட்டின் மூலம் ஒரு பெண் பிரபலமாகியிருப்பது இதுதான் முதல் முறை. ■

## சலூனில் மாடு

தென்னமெரிக்க நாடான கொலம்பியாவில் அன்சிஸார் என்பவர் ஒரு சலூன் வைத்திருக்கிறார். அந்த சலூனில் ஒரு மாட்டையும் வைத்திருக்கிறார்.

'சலூனில் மாடா? எதற்கு?' என்கிறீர்களா?

மாடு தலையில் நக்கினால் முடி நன்கு வளருமாம். அத்துடன் நல்லதொரு மஸாஜ் செய்தது போலவும் இருக்கிறதாம். இதற்காகத்தான் மாட்டை வைத்திருக்கிறாராம் அன்சிஸார்.

மாடு தலையில் நக்கும்போது இரத்த ஓட்டம் நன்றாகப் பாய்ந்து முடிவளருமாம். இதனால் இப்போது அந்த சலூனுக்கு மொட்டைத் தலைகள் முட்டி மோதிக் கொண்டிருக்கிறார்கள்.



# தகவல் பெட்டி

## மாதிரி விமானங்கள்



↑ கனடாவிலுள்ள ஒண்டாறியோ விமானவியல் வரலாற்றுச் சங்கம் ஆரம்பகால விமானங்களின் மாதிரிகளைத் தயாரித்து அவைபற்றிய விவரங்களையும் ஆவணப்படுத்தி வருகின்றது.

முதலாவது உலகப் போர் நடந்த காலத்தில் 1917ம் ஆண்டில் பயன்படுத்தப்பட்ட ஃபோகர் டி-1 விமானத்தின் மாதிரியை படத்தில் பார்க்கிறீர்கள்.

முதலாவது உலகப்போரில் பயன்படுத்தப்பட்ட இதனைப் போன்ற வேறு பல விமானங்களின் மாதிரிகளைத் தயாரித்து அண்மையில் வேடிக்கைப் பயணங்கள் இந்தச் சபையினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

டொரண்டோ பல்கலைக்கழகத்தின் விமான ஓட்டியாகவும், விமானவியல் தொழினுட்பவியலாளராகவும் பயிற்சி பெற்ற 22 வயது டானியா டொர் ஃபோகர் விமான மாதிரியை ஒழுங்குபடுத்தி பறப்பதற்கு ஆயத்தமாகிறார்.



## தாகம் தீர்க்கும் நாரை

← ஜப்பானில் இம்முறை இயற்கை உபாதைகள் சற்று அதிகம் என்று தகவல்கள் கூறுகின்றன. தலைநகரான டோக்கியோவில் 34.5, சென்ரிகிரேற் வெப்பம்வரை உயர்ந்துள்ளது. இந்த வெப்பத்தைத் தாங்கமுடியாத காகமொன்று தனது தாகத்தைத் தணிக்க எத்தகைய முயற்சியை எடுக்கிறது என்பதைக் காட்டுகிறது இப்படம்.

பெலிக்கன் நாரையின் அலகுகளிலிருந்து வெளியேறும் நீரைப் பருகி காகம் தன் தாகத்தைத் தீர்க்கிறது.

பெலிக்கன் பறவை அதனுடைய அலகின்மீது ஒரு காகம் வந்து ஏறி அதன் அலகினால் ஒழுகும் தண்ணீர் பருக எவ்வாறு இடம் கொடுத்தது என்ற கேள்வி வாசகர்களிடம் உருவாவதை நாம் உணர்கிறோம். படத்தில் காணப்படும் பெலிக்கன் நாரை உயிருள்ள ஒன்றல்ல. டோக்கியோ நகரிலுள்ள ஹிபியா பூங்காவில் வைக்கப் பட்டுள்ள நீர் சுரந்தடிக்கும் பொம்மை பெலிக்கன்தான்.


## போரின் கொடுமை

↓ இனங்களுக்கிடையிலான மோதல்கள் உலகின் பல நாடுகளில் தொடர்ந்து கொண்டே இருக்கின்றன. இந்த மோதல்களால் எண்ணற்ற உயிர்கள் மடிந்து போகின்றன. கைகால்களை இழந்து ஊனமுறுவோரின் எண்ணிக்கையும் கணக்கிலடங்காது.

தமது நாட்டிலும் இத்தகைய கொடுமைகள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே போகின்றன. எத்தியோப்பியா மற்றும் எரித்தியா ஆகிய இரு நாடுகளுக்குமிடையிலுள்ள சேறும் சகதியும் நிறைந்த எதற்குமே லாயக்கற்ற பிரதேசத்தை தமதுடமையாக்கிக் கொள்ள இரு நாடுகளும் தத்தமது இராணுவங்களை ஏவி விட்டுள்ளன. இந்தக் கொடுமைக்கு ஆளாகிய கணக்கற்ற குழந்தைகளுள் ஒன்று தான் படத்தில் காணப்படுகிறது. இதனுடைய இடது கை துண்டிக்கப் பட்டிருக்கிறது.

யூனிசெப் நிறுவனம் வழங்கிய உணவை இக்குழந்தை உண்பதற்கு ஆயத்தமாகும் போது அதே நிறுவனம் எடுத்த படம் தான் இது.

பட உதவி: அகமட் நியாஸ்-கொரியா.




## கரணமடித்து சாகசம்

↓ ஒரு சாதனையை நிலைநாட்ட வேண்டும் என்ற எண்ணம் ஒருவரிடம் உதயமாகுமானால் அவர் தன்னுயிரை ஒரு பொருட்டாகக் கருதமாட்டார்.

கலிபோர்னியாவிலுள்ள ஒரு மலையுச்சியின் மீது சைக்கிளில் ஓடி வந்து கரணமடித்து கீழே தாவும் போட்டியில் 15 வயதான ஜோனதன் கிறிர் என்ற இளைஞன் இந்தப் போட்டியில் அந்தரத்தில் கரணமடித்து தலைகீழாகத் தரையில் தாவுவதையே இவ்விரு படங்களும் காட்டுகின்றன.

பாவம் கிறிர் இந்தப் போட்டியில் அவருக்கு வெற்றி கிடைக்கவில்லை. தரையில் வந்து விழும் போது ஏற்பட்ட மோதலில் அவருடைய ஒரு தோள் மூட்டு விலகிக் கொண்டது; உயிர்த் தப்பிவிட்டார்.

(படஉதவி : எம். நியாஸ்-கட்டார்.)



# விஜயகாந்தின் செண்டிமெண்ட்

'வானத்தைப்போல', 'வல்லரசு' வெற்றிக்குப் பின் 'சிம்மாசனம்' பெரிதாக ஓடவில்லை. இதனால் அடுத்த படத்திற்கு 'வ' வரிசையில் 'வாஞ்சிநாதன்' என்று பெயரிட்டுள்ளார் விஜயகாந்த்.

இப்படத்தின் படப்பிடிப்பு ஆரம்பமாகும்போதே இந்தப் படத்தின் வெளியீட்டு உரிமை விற்றுத் தீர்ந்து விட்டது. விஜயகாந்த் மட்டுமன்றி இப்படத்தை இயக்கும் மலையாள இயக்குநர் ஷாஜி கைலாஷும் இந்த எதிர்பார்ப்பிற்கு ஒரு காரணம்.

'வாஞ்சிநாதன்' என 'வா'வரிசையில் பெயர் வைத்த விஜயகாந்த் எண் ஜோதிடம் பார்த்து இப்படத்தின் பெயருக்குள் 'ச்' என்ற ஓர் எழுத்தைச் கூடச் சேர்த்து 'வாஞ்ச்சிநாதன்' எனப் படவிளம்பரங்களில் வரும்படி அமைத்துள்ளனர்.

# கவர்ச்சி கவுண்டச்சி

இப்போது அதிக படங்களைக் கைவசம் வைத்திருக்கும் ஒரே நடிகர் சத்யராஜ்தான். 'என்னம்மா கண்ணு' பட வெற்றிதான் இதற்குக் காரணம் என்று சொல்லத் தேவையில்லை.

இந்த ஏகப்பட்ட படங்களில் ஒன்று தான் 'குங்குமப் பொட்டுக் கவுண்டர்' படம் முழுவதும் சத்யராஜ் மார்க் நக்கலும் நையாண்டியும் தான். மழைக்குக் கூட பள்ளிக் கூடத்தில் ஒதுங்காத சத்யராஜ் தன் மகனை பெரிய பள்ளிக் கூடத்தில் சேர்க்கப்படாதபாடு படுவதுதான் கதை.

இதில் கவுண்டர் சத்யராஜிற்கு ரம்பா ஜோடி. அதாவது கவுண்டச்சி. கவுண்டச்சியை கவர்ச்சியாகப் பார்க்க முடியாதாம். ஆனால் கனவுக் காட்சிகளில் கவுண்டச்சி கவர்ச்சி கண்காட்சி நடத்தியுள்ளாராம்.

# சூர்யாவுக்கு நிபந்தனை

'சேது' பாலா அடுத்து இயக்கும் 'நந்தா' படத்தில் சூர்யா நாயகனாக நடிக்கிறார். 'நந்தா'வில் நடிப்பதற்கு சூர்யாவின் தோற்றத்தில் பல மாற்றங்களைச் செய்யப்போகிறாராம் இயக்குநர் பாலா.

இதனால் எக்காரணம் கொண்டும் இதன் படப்பிடிப்பு முடியும் வரை வெளியே தலைகாட்டக்கூடாது. வேறு எந்தப் படங்களிலும் நடிக்கக் கூடாது. புகைப்படங்கள் எடுத்துக்கொள்ளக் கூடாது என்றும் சூர்யாவுக்கு நிபந்தனை விதித்திருக்கிறாராம் பாலா.

# சேரனின் அடுத்த படம்

'வெற்றிக்கொடி கட்டு' படம் அதிக செலவில் தயாராகி விட்டதாகத் தயாரிப்பாளர் கூற, தான் அதை விடக் குறைந்த செலவில் தான் பட மெடுத்துக் காட்டுவதாகச் சவால் விட்டுள்ளார் சேரன்.

சொந்தப்படம் இயக்கும் வேலையில் ஈடுபட்ட சேரனுக்கு 'பார்த்தேன் ரசித்தேன்' படத்தைத் தயாரித்த செரின் மூவி நிறுவனத்திடம் இருந்தும் சரத்குமாரிடம் இருந்தும் அழைப்புகள் வந்துள்ளன. முதலில் எதை இயக்கப்போகிறார் சேரன்?

# பாபுகணேஷ் நடிக்கும் படம்

பெரிய திரை, சின்னத்திரை இரண்டிலும் நடித்து வரும் பாபுகணேஷ், 'நாகவி... படத்திற்குப்பின் 'இது முடிவதில்லை' என்ற படத்தில் நடித்து வருகிறார்.

பிரபல இயக்குநர் சேதுமாதவனிடம் பணியாற்றியவரும் தொலைக்காட்சித் தொடர்களை இயக்கியவருமான கே. அருந்தவராஜ் என்பவர் இப்படத்தை இயக்குகிறார்.



விக்ரம்-தேவயானி
படம்: விண்ணுக்கும் மண்ணுக்கும்



புதுமுகம் வேணு-ரோஜா
படம்: பொட்டு அம்மன்

# மினி சினி

* கரேஷ் கிருஷ்ணா இயக்கும் 'ஆளவந்தான்' படத்தில் கமல் அதிரடிப்படை வீரராகவும் அவருக்கு ஜோடியாக நடிக்கும் ரவீனா டாண்டன் தொலைக் காட்சி நிருபராகவும் நடிக்கின்றனர்.

* தமிழில் படவாய்ப்புக்களின்றி இருக்கும் அரவிந்தசாமி மலையாளப்படம் ஒன்றில் நடிக்கவுள்ளார். ஏற்கனவே ஸ்ரீதேவியுடன் இணைந்து மலையாளப்படம் ஒன்றில் நடித்துள்ள அரவிந்தசாமிக்கு இது இரண்டாவது படம்.

* ஆர்.சுந்தர்ராஜன் இயக்கிய 'வைதேகி காத்திருந்தாள்' படத்தில் விஜயகாந்திற்கு ஜோடியாக நடித்த பிரமிளா ஜோஷி இப்போது 'எங்களுக்கும் காலம் வரும்' படத்தில் மணிவண்ணனுக்கு ஜோடியாக நடித்து வருகிறார்.

* அப்பாஸ் முன்னணியில் இருந்தபோது 'மனசுக்குள் வரலாமா' என்ற படத்தைத் தொடங்கிபின்னர் 'நினைத்தாலே' என்று பெயர்மாற்றினார்கள். இப்போது அப்படத்தை கிடப்பில் போட்டுவிட்டார்கள்.

* தமிழில் பிஸியாக நடித்து வரும் ஜோதிகா நடிகையாக அறிமுகமானது இந்திப்படத்தில்தான். இவர் மறுபடி இந்திப் படமொன்றில் நடிக்கப் போகிறார். இதில் அமீர்கான் கதாநாயகனாக நடிக்கிறார்.

* விமல்ராஜ்-ஷகிலா நடித்த 'ராக்கிளிகள்' என்ற மலையாள 'பலான' படம் அங்கு வெற்றி பெற்றதைத் தொடர்ந்து, அதை 'காமாதுமா' என்ற பெயரில் தெலுங்கில் மொழி மாற்றம் செய்கின்றனர்.

* பாரதிராஜாவின் 'கடல்பூக்கள்' படத்தில் இருந்து வடிவேலு நீக்கப்பட்டிருக்கிறார். இதனால் இவருக்கு ஜோடியாக நடித்த ... ஜோடியாக நடித்த வைஷாலி ஆகியோர் நடித்த காட்சிகளும் வெட்டப்பட்டுவிட்டன.

* தேவயானிக்கு இப்போது இறங்கு முகம். புதிய படங்கள் எதுவும் வரவில்லை. எனவே புடவை தேவிலைதான், ஷாம்பூ போன்ற விளம்பரப் படங்களில் இவர் நடித்து வருகிறார்.

# பல முக மன்னன்

'பாரதி' படத்தில் அனாயாசமாக நடித்திருக்கும் ஷாஜி ஷிண்டே 'டாமன்' என்ற இந்திப் படத்தில் கொடியவனாக நடித்திருக்கிறார். இதில் மனைவியைக் கொடுமைப்படுத்தி உடலெங்கும் சிகரெட்டால் சுடும் ஒரு சேடிஸ்ட்டாக நடித்துள்ளார். இன்னொரு படத்தில் சாந்தமே உருவான பாதிரியாராக நடித்துள்ளார். நடிகர் திலகம் கூறியது போல் 'நடிப்பில் ஒரு நடிகனுக்குப் பல முகங்கள் தேவை' என்பது இவருக்குப் பொருந்தும்.

# முகப்பில்

சூர்யா-ஜோதிகா
படம்: உயிரிலே கலந்தது

# புதுமுகங்கள் நடிக்கும் 'பேச்சலர்ஸ்'

தெலுங்கில் தொடர்ந்து 3 வெற்றிப்படங்களைக் கொடுத்த சானா யாதிரெட்டி, அண்மையில் நான்காவதாக எடுத்தபடம் 'பேச்சலர்ஸ்'. முற்றிலும் புதுமுகங்கள் நடித்த இப்படம் வெற்றிகரமாக ஓடுகிறது.

இதைத் தொடர்ந்து இப்படம் தமிழ் பேசவுள்ளது. நான்கு கல்லூரி மாணவர்கள் பற்றிய கல்லூரிக்கதை இது.

இப்படத்தில் பாலு, கிட்டு, சில்வெஸ்டர், ஸ்மித், மான்யா, ஸ்னேகிதா, தனுஜா, சானா என 4 கதாநாயகர்கள் கதாநாயகிகள் நடித்துள்ளனர்.

இப்படத்தை சானா யாதிரெட்டி திரைக்கதை அமைத்து இயக்கியிருக்கிறார். வசனம்-பிரவீசங்கர், இசை-ஷசி ப்ரீதம்.

# நெப்போலியன் நடிக்கும் 'வீரர் அழகு முத்து'

நெப்போலியன்-சங்கீதா நடிக்க 'பரணி' என்ற படத்தை தயாரித்த ஆகாஷ் பிலிம்ஸ் நிறுவனம் இப்படத்தை கிடப்பில் போட்டுவிட்டு 'வீரர் அழகு முத்து' என்ற படத்தைத் தயாரிக்கிறது. இதிலும் நெப்போலியன்தான் ஹீரோ.

இப்படத்தில் வடிவேலு, செந்தில், வினுச்சக்கரவர்த்தி, பாண்டியன், சார்லி, ஜெயராஜ் ஆகியோர் நடிக்கின்றனர்.

ராஜ்பிரீத் ஒளிப்பதிவு செய்ய, ஆதித்யன் இசையமைக்க, கலைமணி கதை-வசனம் எழுதுகிறார். திரைக்கதை அமைத்து இப்படத்தை என்.கணேஷ்ராஜ் இயக்குகிறார்.


# விக்ரமின் நம்பிக்கை

'சேது' படத்தின் பின் விக்ரம் நடித்து முதலில் வெளிவரும் படம் அநேகமாக 'சாமுராய்'. 'சேது'வில் கிடைத்த பெயரைப் போல் இதிலும் நல்ல பெயர் கிடைக்கும் என்பது விக்ரமின் நம்பிக்கை.

எப்படி?

"முதலில் கதை கேட்ட போது நம்பிக்கை பிறந்தது. பின் படப்பிடிப்பில் பார்க்க முடிந்தது. எதிர்காலத்தில் ஷங்கர் போல் வருவார் இப்படத்தின் இயக்குநர் பாலாஜி" என்று தெரிவித்துள்ளார் விக்ரம்.

ஷங்கருக்கு இணையாக விக்ரமால் பாராட்டப்படும் புதிய இயக்குநர் பாலாஜி, இயக்குநர் ஷங்கரிடம் உதவியாளராக இருந்தவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது.



## வெட்டி ஓட்டிய படம்

பிரசாந்த்-ஷாலினி நடிக்கும் 'பிரியாத வரம் வேண்டும்' படம் வெளியிடுவதற்குத் தயாராகி விட்டது. இயக்குநர் விபத்து, ஷாலினி திருமணம் என ஏக்காலமாசிப் படப்பிடிப்புடன் முடங்கிய படம் ஒருபடி தொடங்கி முடிக்கப்பட்டது எப்படி?

திருமணத்திற்குப் பின் ஷாலினி நடிக்க மாட்டார் என அறிந்து மறுத்து விட, தயாரிப்பாளர் 'பிரியாத வரம் வேண்டும்' படத்தில் ஒரிஜினலான 'நிறம்' மலையாளப் படத்தில் (இதிலும் ஷாலினி தான் நடித்திருந்தார்) இருந்து ஷாலினி நடித்த காட்சிகள் வெட்டி ஒட்டி விட்டார்.

சில காட்சிகளில் ஷாலினி போல் உள்ள டூப்பை வைத்தும் படத்தை முடித்திருக்கிறார்கள்.

## விவேக் ஜோடியாக நடிக்க மறுப்பு

விசேகரிடம் உதவியாளராக இருந்த பாலாநபன் தனியாக வந்து இயக்கும் படம் 'எங்களுக்கும் காலம் வரும்'.

லிவிங்ஸ்டன்-கௌசல்யா ஜோடியாக நடிக்கும் இப்படத்தில் வினிதா, கஸ்தூரி ஆகியோரும் நடிக்கிறார்கள். இதில் நகைச்சுவை வேடத்தில் நடிக்கும் விவேக்கிற்கு ஜோடியாக நடிக்க சங்கவி, சுவாதி, விந்தியா, வினிதா ஆகியோரைக் கேட்க, அவர்கள் மறுத்துவிட்டனர்.

இப்போது விவேக் ஜோடியாக கஸ்தூரியை நடிக்க வைத்துள்ளனர்.

## ரோஜா-மும்தாஜ் போட்டி

சத்யராஜ் கதாநாயகனாக நடிக்கும் 'லூட்டி' படத்தில் ரோஜா-மும்தாஜ் என இரண்டு நாயகிகள். படவிளம்பரத்திற்காக இரண்டு நடிகைகளையும் படம் பிடித்தனர். முதலில் இருவரையும் தனித்தனியாகவும் பின்னர் இருவரையும் சேர்த்தும் படம் எடுத்தார்.

தனியாக எடுக்கும்போது முதலில் மும்தாஜை வைத்துக் கொஞ்சம் கவர்ச்சியாக படங்களை எடுத்தனர். பிறகு ரோஜாவைப் படம் எடுக்கும் போது 'மும்தாஜ் கவர்ச்சியாக போஸ் கொடுத்திருக்கிறார். அவரைவிட உங்களது படங்கள் நன்றாக வருகிறமாதிரி போஸ் கொடுங்கள்' என்று கேட்டுள்ளனர்.

இதைக் கேட்ட ரோஜா, 'உங்கள் விருப்பப்படி படம் எடுத்துக் கொள்ளுங்கள்' என்று தாராளம் காட்டியுள்ளார்.

## லிவிங்ஸ்டனின் புதிய படம்

'சொல்லாமலே' படத்தில் நாயகனாக நடித்த லிவிங்ஸ்டன் தற்போது நாயகனாக நடித்து வரும் படம் 'சொல்லாமலே யார் பார்த்தது'. இதில் லிவிங்ஸ்டனுடன் ஆர்.சுந்தர்ராஜன், அனுமோகன், குமரிமுத்து, தாமு, அபிநா, ஸ்ரீவித்யா, கோவை சரளா ஆகியோர் நடிக்கின்றனர்.

கிச்சாஸ் ஒளிப்பதிவு செய்ய, தேவா இசையமைக்கிறார். கதை-திரைக்கதை அமைத்து இயக்குகிறார் புதியவரான ஆர்.ராம்குமார்.

## பிரபுதேவாவுக்கு 'கலர்' தேடல்

'என்னம்மாக் கண்ணு' படத்தை இயக்கிய ஷக்தி சிதம்பரம் இயக்கும் படமொன்றில் பிரபுதேவா கதாநாயகனாக நடிக்கிறார். இப்படத்திற்குக் 'கலர் ஃபுல்' என்று பெயரிடப்பட்டுள்ளது.

இதில் பிரபுதேவாவுக்கு ஜோடியாக நடிக்க 'கலர்' தேடி வருகிறார் தயாரிப்பாளர் திருப்பூர் செல்வராஜ். சத்யராஜ் நடிக்கும் 'மிஸ்டர் நாரதர்' படத்தை இயக்கி வரும் ஷக்தி சிதம்பரம், மறுபுறம் பிரபுதேவாவை வைத்து 'கலர் ஃபுல்' படத்தை இயக்குவதில் பிஸியாக இருக்கிறார்.





இஷாக்-அபிதா-சாப்ளின் பாலு-ராகுல்
படம்: பூவே பெண் பூவே



ரம்பா
படம்: அன்புடன்

## திரையுலக மறுபக்கம் 172

## பெரிய இயக்குநரால் வருத்தப்படும் நடிகர்

தமிழ்நாட்டிலிருந்து **மயன்**

**அ**ந்த 'இமய' இயக்குநரின் படத்தில் நடிப்பதற்கு பலரும் போட்டி போடுவார்கள். ஆனால் அவரது படத்தில் நடித்ததற்காக வருத்தப்பட்டுக் கொண்டிருக்கிறார் மூன்றெழுத்து முன்னணி நடிகர் ஒருவர்.

இந்தக் கறுப்பு நாயகனை வைத்து 'காதலைக் காலமெல்லாம் வாழ்த்திப்' படமெடுத்த தயாரிப்பாளர்தான் 'இமய' இயக்குநர் இயக்கும் படத்தின் தயாரிப்பாளர்.

'காதலை வாழ்த்திய' படத்தை அடுத்து 'கனவுகளைக் கலைக்க விரும்பாத' படத்தை இந்த நடிகரை வைத்து எடுத்தார் தயாரிப்பாளர். படம் படுதோல்வியடைந்தது.

இருப்பினும் இன்னொரு கறுப்பு நடிகருடன் இணைந்து இந்தக் கறுப்பு நடிகர் இதே தயாரிப்பாளருக்கு ஊதியத்தைக் குறைத்து ஒரு படத்தில் நடித்துக் கொடுத்தார். இந்தப்படம் 'வெற்றிக்கொடியை' எட்டிப் பிடித்தது.

மீண்டும் இந்தத் தயாரிப்பாளர் தயாரிக்க, 'இமய' இயக்குநர் அணுகியபோது மறுபேச்சின்றி நடிக்க ஒப்புக்கொண்டார். இந்தப்படத்தை முடித்துக் கொடுத்தால் இவ்வளவு பணம் என்றுதான் தயாரிப்பாளர் இயக்குநரிடமே ஒப்பந்தம் கிட்டத்தட்ட இப்படத்தின் தயாரிப்பாளரும் இயக்குநரும் ஒருவரே.

படம் தொடங்கும்போது மூன்றெழுத்து கறுப்பு நடிகருக்கு 15 லட்சங்கள் ஊதியமாகக் கொடுக்கப்பட்டது. அதற்குப் பின் அவருக்குப் பணம் கொடுக்கப்படவில்லை. உடனே அவர் தயாரிப்பாளரிடம் சென்று முறையிட்டார். அதற்குத் தயாரிப்பாளர்,

"தம்பி! இந்தப்படம் முழுவதும் முடிவடைந்ததும் அவருக்கு இயக்குநருக்கு முழுப்பணத்தையும் கொடுப்பது எனக்கும் இயக்குநருக்குமிடையிலான ஒப்பந்தமே தவிர, நடிகர்களுக்குச் சம்பளம் கொடுப்பதெல்லாம் இயக்குநர் தான்" என்று கூறினார்.

"இப்படிப் பொறுப்பில்லாமல் பேசுகிறீர்களே. உங்களுக்காகத்தானே படத்தில் நடிக்க ஒப்புக் கொண்டேன்" என்று நடிகர் குமுறினார்.

"அவர் பெரிய டைரக்டரப்பா... இதெல்லாம் நான் பேச முடியாது" என்று கையை விரித்து விட்டார் அந்தத் தயாரிப்பாளர்.

நொந்து போன நடிகர், தான் வாங்கும் சம்பளத்தில் மூன்றில் ஒரு பகுதியைத்தான் 'இமய' இயக்குநர் கொடுத்திருப்பதாக நடிகர் சங்கத்தில் புகார் செய்துள்ளார். 'இமய' இயக்குநர் படத்தில் நடித்தவர்களிடையே அதிக சம்பளம் வாங்கியவர் இந்த நடிகர்தான் என்று இயக்குநர் தரப்பு கமெண்ட் அடித்து வருகிறது.

இப்படத்தில் மூன்றெழுத்து நடிகர் நடித்துக் கொடுத்து விட்டாரே தவிர இன்னமும் பின்னணி பேசி முடிக்கவில்லை. பணம் கொடுத்தால் பின்னணி பேசுவதாக நடிகர் கூறியிருக்கிறார்.

நடிகர் சங்கத்திற்கு புகார் கொடுத்துள்ள நடிகர் ஒரு நல்ல முடிவுக்காக எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறார்.

## சின்னப் பட வெற்றி

'சபாஷ்' சுமாராகப் போய்க் கொண்டிருக்கிறது. சுமாராகப் போன 'மாயி' சூடு பிடித்து வசூலில் தான் பறக்கிறது. சின்ன பட்ஜெட்டில் உருவான 'பட்ஜெட் பத்மநாபன்' வெற்றிவாகை சூடியுள்ளது.

'பட்ஜெட் பத்மநாபன்' பட வெற்றிக்குப் பின் சின்ன பட்ஜெட் படங்களுக்கு வரவேற்புக் கூடியுள்ளது. தயாரிக்கப்பட்டு பாதியிலே நிறுத்தப்பட்ட சின்ன பட்ஜெட் படங்கள் இப்போது தூசி தட்டப்படுகின்றன.

## காதோடு சொல்லுகிறோம்

**பி**ரபல நடிகை மற்றும் தயாரிப்பாளர் பெயர்களைக் கொண்ட நடிகையை 'நேரம்' என்றுபொருள்படும் தமிழ்ப்படத்தில் அறிமுகப்படுத்திய இயக்குநர் அடுத்து இயக்கும் படத்தில் நடிக்க நடிகையை அணுகினாராம். முதல்படத்தில் அந்த இயக்குநரால் பட்ட காயங்களை மறக்காத நடிகை உடனே மறுத்துவிட்டாராம்.

**தா**ஜ்மஹால் நாயகன் 'கடல்' படத்தில் நடிப்பதற்காக கரையோரப் பகுதி ஒன்றிற்குப் போனாராம். படப்பிடிப்பை வேடிக்கை பார்க்க வந்த கிராமத்து ரசிகைகளுடன் மணிக்கணக்கில் பேச, 'கடற்கரைக் கிராமத்துக் காரங்க கோபக்காரங்க அரிவாளை எடுத்துவாங்க கவனம்' என நடிகருக்கு எச்சரித்தாராம் படப்பிடிப்புக்குழுவைச் சேர்ந்த பெரியவர் ஒருவர்.

**மு**தலிடத்தில் இருக்கும் 'பிரகாசமான' நடிகையைப் பற்றித் தினம் ஒரு வதந்தியைக் கிளப்பிக் கொண்டிருக்கிறாராம் அவருடன் சண்டையிட்ட தேவநடிகை. இதைப் பார்த்த அந்த ஜோதியமான நடிகை தனக்கு வேண்டிய 'முதத்' நடிகர் ஒருவரிடம் கூறினாராம். நடிகரும் தேவநடிகையை அழைத்துக் கண்டித்துள்ளாராம்.

**ர**ஷ்ய நாட்டின் முன்னாள் தலைவர் ஒருவரது பெயரைக் கொண்ட படத்தைத் தயாரித்து நடித்து வருகிறார் பிரகாசமான நடிகர். படம் வெளியாக வேண்டுமானால் நகைச்சுவை 'வாணன்' நடிகர் சில நாட்கள் நடிக்க வேண்டுமாம். நடிகரை அழைக்க இன்றைக்கு, நாளைக்கு என்று இழுத்தடித்து வருகிறாராம்.

**தேன் கிண்ணம்**

## யாருக்கு மனநோய்?

சுடிதார் உடுத்து
சுந்தரமாய்
வந்து நின்று
சிரித்தாள்
சுந்தரி ஒருத்தி!
***
கொடி இடையாள்
அவள் கோலமது என்
உள்ளத்தை ஊடுருவி
நின்றது வருத்தி!
***
கவர்ச்சிக் கன்னி
அவள் என்னை
கடிவாளம் போட்டு
இழுத்தது போல்
இருந்தது!
முயற்சிகள் யாவும்
***
மறந்து!
முப்பத்திரெண்டும்
பளிச்சிட
முன்னே சென்று
வழிந்த போது,...
***
முண்டியடித்துக்
கொண்டு
வண்டி ஒன்று
வந்து
அவளருகில் நின்று
ஏற்றிச் சென்றது
அவளை!
***
அப்போது
நிமிர்ந்து
அவ் வெள்ளை
வண்டியைப் பார்த்தபோது
அதிலிருந்த வாசகம்
'மனநோய் மருத்துவமனை.'

அஜித்தா பத்மநாதன்-
வவுனியா.

## சுமை



வம்புக் கூடையை-உன்
தலை சுமக்க,
மட்டக் கம்பை-உன்
கை சுமக்க,
சணல் சாக்கை-உன்
இடை சுமக்க,
வறுமையின் நிறத்தை-உன்
முகம் சுமக்க.....
வாழ்க்கைச் செலவை-உன்
பட்டினி வயிறு சுமக்க,
தாய் நாட்டை
நீ சுமக்க
யாரும் இல்லை
உன்னைச் சுமக்க....!

மு.அலெக்ஸாண்டர்-
ஹய்ஃபொரஸ்ட்.

## சோதனைச் "சாவடி"

"மன்னம்பிட்டி வருது
மன்னம்பிட்டி வருது
ஒக்கம கட்டி...
எல்லோருமிறங்குங்க!"
கண்டக்டர்
தொண்டையடைக்க
கத்துவார்!
***
சனமெல்லாம்
கியூவில் நிற்கவென
வண்டியை விட்டு
முண்டியடித்துக் கொண்டு
ஓடுவர்....
***
ஆறு வயதுக்
குழந்தை என்றாலும் சரி,
அறுபது வயதுப்
பாட்டி என்றாலும் சரி,
இறங்காதவர்களும்
இறங்கி விடுவார்கள்
அவ்விடத்தில் மட்டும்....!
***
சட்டி, முட்டி
ஐஸ் பெட்டி
மீன் பெட்டி
எப் பெட்டியாயினும்
மன்னம் பிட்டி வந்தால்
தானாகவே இறங்கிவிடும்!!
***
பூட்ஸ்
அணிந்து வந்தால்
சொக்ஸையும்
கழற்றச் சொல்வார்கள்....
சூட்கேஸ்
கொண்டு வந்தால்
சும்மா திறந்து போட்டு(த்)
தருவார்கள்....
***
கெண்டைக்கால் முதல்
உச்சந்தலை வரை
தொட்டுத் தடவி
ஒரு வகை அரவணைப்பு....
***
எங்கள் கைகளை
மேலே உயர்த்தி விட்டு
தங்கள் கைகளை
விட்டுப் பார்ப்பார்கள்....
'ஜட்டிக்'குள்ளும்!
***
'அயன்' பண்ணிவைத்த
ஆடைகளையும்
வெளியிலெடுத்து
மீண்டுமொரு முறை
காயப் போடுவார்கள்!
எங்களையும்,
காய வைப்பார்கள்.....
***
கர்ப்பிணியென்றால்
வயிற்றையும்
தடவிப்பார்ப்பார்கள்
குழந்தையைச் சுமக்கின்றாளா?
குண்டைச் சுமக்கின்றாளா?
என்று.....
***
இதற்கிடையில்,....
வாகனத்தில்
குளிக்காமல் ஏறியவர்களும்
குளித்து விடுவார்கள்
வியர்வையால் அவ்விடத்தில்....
***
ஆண்களுக்கு
வேறாகவும்
பெண்களுக்கு
வேறாகவும்
சோதனை நடக்கும்!
சோனகன் என்றால்
சாதாரணம்
தமிழன் என்றால்
தீவிரம்.....
***
இறைவா....
எப்போது தீரும்
இந்தச் சோதனை!
சோதனை என்ற பெயரில்
சாவடிப்பதாலா
சோதனைச் 'சாவடி'யென்று
பெயர் வந்தது.....!

வாழைச்சேனை-ஷல்மானுல் ஹரீஸ்.

## "வெ(க)றுப்பு"

மாலை நேர மயக்கத்தில்
காதல் ஜோடி;
இவர்கள்....
முகம்காட்ட மறுப்பது
ஒரு...
கறுப்பு ஜூலை,

## தம்பதிகள்

கடலலை இசையுடன்
காதலித்தவளையே!
கைபிடித்த மகிழ்ச்சியில்
மாலைநேரத்தில் மயங்கும்
புதுமணத் தம்பதிகள்.

எம்.எல்.முஸம்மில்-
குவைத்.



## உனது பார்வை!

நம் ஊர்
ஆடித்திருவிழாவும்
வந்து போனது!
நானும் வந்திருந்தேன்.....
என்னை அறியாத
நீயும்தான்!
***
பட்டு உடுத்திய
பகட்டுக்காரிகளிலும்
பார்க்க
பச்சைத் தாவணி
போர்த்திய
பாவை-நீதான்
பேரழகி!
***
அத்தனை
கண்களும்
அம்மணவளில்
நிலைத்திருக்க-இந்த
பித்தன் மட்டும்
உன்னில்....
ஆலய முற்றத்தில்
தீ(மு)மிதிப்பு
இடம்பெற்றிட-அதில்
இவனும் ஒருவனாக....
பாதத்தில்
சேதமில்லை!
ரோஜா இதழ்களில்
பாதம் பட்டது-போன்று
அப்படியொரு
மென்மை-உனது
மனசு போலவே....!
***
பக்தர்களை கேட்டால்
அன்னையின்
அருள்தான் என்பர்
ஆனால்....
நானோ-அது
தீ(மு)க்கிடங்கை
வலம் வந்த-உனது
பக்தி பூர்வமான
பார்வை
என்பேன்!

என்.பி.சி.-உடப்பு.

## "சீதனம் இல்லா(த) வாழ்க்கை கேட்டேன்"

வாடாத பாவையர்களே!
வடுக்கள் எப்போதும்
அழுகையால் ஆறாது,
துன்பங்கள் எல்லாம்
தூற்றுவதால் குறையாது!
***
இதோ.... எதிர்காலம்....
உங்கள் உள்ளங்களை
ஊன்றித் துடையுங்கள்!
இதோ... காலத்தின் விரல்கள்
பிடியுங்கள், எழுங்கள்!
சரிசமமாய் நடவுங்கள்!
வாழ்க்கைப் பாதை விசாலமானது...
வாருங்கள் நடந்து போவோம்!
வெற்றிகளை எட்டிப்பிடிக்க....!
***
உங்களைப் போலவே நாங்களும்
மனிதர்கள்தான்...
பெற்றோரின் பிள்ளைகள்தான்....
என்றாலும்.... அற்பர்களின்
ஆலோசனை கேட்டு
சீதனம் கேட்க
நாங்கள் ஆயத்தமாயில்லை!
***
பொறுமையைக் கூட
போலி என்று சொல்லும்
பொய் நாக்கு இங்குண்டு!
பேசிப் பேசி வாய்களுக்குப் பூட்டும்
சிந்தனைக்குத் திரையும்
குத்தி விடுகிற அச்சுக்கட்டைகளும்
இங்கேதான்...!
***
இவர்களது வாய் வீச்சால்
வாழா வெட்டியாக இருந்து
வண்டுகளாய் வாழ்க்கையை
வரையறுத்துக் கொண்டதும்
நீங்கள்தானே...?
அவர்கள் அல்லவே...?
***
வாசம் வீசும் அயலவர்களது
வார்த்தைக் கோலங்களால்
அரிக்கப்பட்டிருப்பது-உங்கள்
வண்ணக் கனாக்களேயன்றி
நம்பிக்கை அல்லவே?
***
வாருங்கள்....!
சீதனம் என்ற சீர்கேட்டை-இக்
கலியுகக் காலத்தில் கண்ணீரால் கழுவி
கன்னிகள் கரை காண
காரிகைகளே கண்திறவுங்கள்!
கண்கட்டியிருந்தால் இருட்டு!
திறந்துவிட்டால்....?
***
சீதனத்துக்கெதிராய்-நீங்கள்
சீறி எழாததால் தான் சீட்டாடுகிறார்கள்.
சீதனம் கொடுக்க முன்
சீல் வைக்கப்படாத உங்கள் சிந்தனையை
சீர்தூக்கிப் பார்த்து சீதனமில்லா
சீரிய வாழ்க்கை அமையுங்கள்!!!

யாழ். ஏ.ஏ.எம்.அன்ஸிர்-
நீர்கொழும்பு.

## யார் இவர்?



முருகன் வேடத்தில் இருக்கும் இந்தச் சிறுவன், இன்று இளம் முன்னணி நடிகர்களில் ஒருவர். வாரிசு நடிகரான இவரது நிஜப்பெயரும் முருகனின் பெயர்தான்.

கண்டு பிடிக்க முடியாதவர்கள் 18ம் பக்கத்தைப் புரட்டிப் பாருங்கள்.

## நில்-கவனி-முன்னேறு

உழைப்பால் பெறமுடியாதது என்று எதுவுமேயில்லை. அது இல்லாமல் அடையப் பெற்றதும் எதுவுமில்லை. சாதாரண இராணுவ சிப்பாய் நெப்போலியன், கடுமையான உழைப்பை மேற்கொண்டதால்தான் பல வெற்றிகளை குவித்து சரித்திரத்தில் நிலைத்த பெயர் எடுக்க முடிந்தது.

ஜேம்ஸ் ஆலன் எழுதிய நூல்கள் உலகப் புகழ்பெற்றவை. அவர் கடுமையான உழைப்பிற்குச் சொந்தக்காரர்.



என்னை ஓய்வெடுத்துக் கொள்ளச் சொல்கிறார்கள். "நான் இந்த உடலை எடுத்திருப்பது ஓய்வெடுக்கத்தான் என்று அவர்கள் நினைத்து விட்டார்கள். இல்லை, நான் மிகக் கடுமையாக உழைக்கத் தான் உடலெடுத்திருக்கிறேன்; ஓய்வெடுக்க அல்ல. 'என்றாவது நான் ஓய்ந்துவிட்டேன் என்றால், அன்று நான் இறந்திருப்பேன்!" என்கிறார் அவர்.

இதைவிட உழைப்பின் பயனை எப்படிக் கூறுவது?

வெற்றியை அடைய ஒரே ஒரு குறுக்குப் பாதைதான் உள்ளது. அது கடுமையான உழைப்புதான்.

உழைப்பு என்பது கடவுள் நமக்குக் கொடுத்திருக்கும் செல்வங்களில் எல்லாம் மேலான செல்வமாகும்.

கடவுள் நமக்குக் கைகளையும் கால்களையும் உடலையும், உள்ளத்தையும்-ஏன் உயிரையும் கொடுத்திருப்பதே உழைக்கத் தான்.

சின்னஞ்சிறு எறும்பு இங்குமங்கும் ஊர்ந்து சென்று தனக்குத் தேவையான உணவைச் சேகரிக்கின்றது.

பறவைகள் தொலை தூரத்துக்கும் பறந்து சென்று புழு, பூச்சி முதலானவற்றைக் கண்டெடுத்து உண்கின்றன. நாய், பூனை, ஆடு, மாடு போன்ற பிராணிகளும் தங்களுக்குத் தேவையான உணவை நாடிப் பெறுகின்றன. இவைகளெல்லாம் தாங்கள் உயிர் வாழ்வதற்காகவே உழைக்கின்றன. ஆனால், நம்மால் மட்டும்தான் உழைத்து முன்னேற முடியும். அப்படி உழைத்துக் கிடைக்கும் செல்வத்தின் மூலம் நம்முடைய வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக் கொள்ள முடியும்.

உழைக்கும் ஆர்வமும் கடினமாக உழைக்கும் பழக்கமும் மட்டும் நம்மிடம் இருந்தால் போதும், நம்மிடம் செல்வம் இல்லாவிட்டாலும், போதிய வாய்ப்பு வசதிகள் நமக்குக் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை. நாம் விரும்பியதை நம்மால் பெற்றுவிட முடியும்.

'உழைப்பின் வாரா உறுதிகள் உளவோ?' என்கிறது முதுமொழி.

நம்முடைய உழைப்புதான் நம்முடைய அறிவையும், புத்திக் கூர்மையையும், ஆற்றலை யும் செயற்பாட்டுத் திறத்தினையும் மற்றர்கள் அறியும்படி வெளிச்சம் போட்டுக் காட்டு கிறது.


நாம் உழைக்காமல் இருந்தால், நம்முடைய சிறப்பை மற்றவர்கள் அறிந்து கொள்ள வாய்ப்பே இருக்காது.

நாம் தொடங்கிய எந்த ஒரு செயலையும் தொடர்ந்து செய்து முடிக்காத வாழ்க்கை வாழ்க்கையேயல்ல. அப்படிப் பட்ட வாழ்க்கையை இன்றைய உலகம் மதிக்காது, நாளைய உலகமும் பாராட்டாது.

நம்முடைய உழைப்பின் பரிசு தான், நம்முடைய உழைப்பின் விளைவாக நாம் புரியும் சாதனைதான் நமக்கு உண்மையான மகிழ்ச்சியையும், மன நிறைவையும் தரக்கூடியது.

உழைப்பே உண்மையான உயர்வு.

## பேனா நண்பர்கள்



பெயர்: ஏ.ஆர்.முஹமட்
வயது: 23
முகவரி: P.O.Box-60638,
Al-Khor,
Qatar.
பொழுது போக்கு:
பத்திரிகை, கிரிக்கெட்.



பெயர்: எம்.பாத்திமா
வயது: 20
முகவரி: P.O.Box-65044
Al-Man.Sov.Riya,
Kuwait.
பொழுது போக்கு:
வழமையானவை.

## இந்தவாரம் உங்கள் பலன்

**29.10.2000 முதல் 04.11.2000வரை**

**ஜோதிடர் 'கா்ணா'**

**மேடம் :**
நீசவக்கிரக பலன் என்பன சிக்கலாக அமையாது. எடுத்த விடயம் கைகூடும். திருமண சுப வாய்ப்புக்கள் வரும். தொழில் பணவசதி சிறப்புக்களைக் கொடுக்கும். மாமன் வழித் தொடர்பு தூர இட உறவினர் செய்திகள் வரும். மீன ராசிக்காரரால் உதவிகள் கிடைக்கும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 30, 02.

**இடபம் :**
நோய் மருத்துவச்செலவுகளைக் கொடுக்கும். கெட்டவர்களின் தொடர்பு அமையும். பணச்செலவுடன் சிக்கல்கள் வரும். எதிர்பார்த்த விடயம் தாமதமடையும். கல்வி, தொழில், பணக்கொடுக்கல் வாங்கல்கள் கவனம் தேவை. ரோகிணிக்காரர் நோய்களால் அவதியுறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : இள நீலம்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 29, 02.

**மிதுனம் :**
சனிகாலப்பார்வையும், கிரக அழுத்தமும் மனதில் நிம்மதியின்மையும் உண்டாக்கும். எதிர்பார்த்த தொழில் சிறப்புத்தராது. மனைவி வழியோகங்கள் ஓரளவு நன்மை தரும். பரீட்சைகள் வெற்றிதரும் வெளியோரின் உதவிகள் கிட்டும். திருவாதிரைக்காரர் நன்மைகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : நீலம்; எண்: 04.
அதிஷ்ட திகதிகள் : 02, 04.

**கடகம் :**
பெருமளவு குழப்பங்கள் தீரப் பெற்றாலும் குடும்பத்தில் பிள்ளைகளால் பிரச்சனைகள் வந்தபடி அமையும். தூர இடத்து நற்செய்திகள் வரப்பெறும். சொந்த பொருள், சொத்துக்கள் அமைவு என்பன. காணப்படும். ஆயிலிய நட்சத்திரர் மனச்சந்தோஷம் கொள்வார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்மஞ்சள்; எண்: 01.
அதிஷ்ட திகதிகள் : 01, 02.

**சிம்மம் :**
பயண முயற்சிகளில் தீவிர அக்கறைக் கொள்வார்கள். பணவருமானமும் திருமண விடயங்கள் சொந்தபந்த உறவினர்களின் வருகை. தெய்வ அனுகூலம். பிள்ளைகளின் மகிழ்ச்சியான செய்திகள். வாகன விடயம் கவனம் தேவை. துலா ராசிக்காரரால் நன்மைகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்.
அதிஷ்ட நிறம் : றோஸ்; எண்: 05.
அதிஷ்ட திகதிகள் : 30, 01.

**கன்னி :**
தொழிலிலும் குடும்பத்திலும் பெரும் நெருக் கடிகள் காணப்படும். எதிலும் முரண்பாடான நிலை தென்படும். உடலில் நோய்துன்பம் வரப்பெறும். உடன் பிறந்தோரால் கவலைகள் ஏற்படும். அத்தக்காரர் கவனமாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், ஞாயிறு.
அதிஷ்ட நிறம் : கருமை நிறம்; எண்: 07.
அதிஷ்ட திகதிகள் : 29, 02.

**துலாம் :**
ஏதேனும் மனதில் குழப்பமும் எதிரியாக உள்ளோர் மாற்றமன நிலை கொள்வார்கள். தொழில் உயர்வு அமையும். நெடுநாள் கொடுக்கல் வாங்கல்கள் பிரச்சனை இன்றிமுடிவுறும். பலரின் சிக்கல்கள் சிங்க, மகர, ராசிக்காரரால் தோற்றப்பெறும்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்.
அதிஷ்ட நிறம்: மரூண் வர்ணம்; எண்:06.
அதிஷ்ட திகதிகள் : 31, 03.

**விருச்சிகம் :**
கனவுகளின் பலன்கள் கிடைக்கப்பெறும். பணவசதிகள் பெருகப்பெறும். அரசபதவியில் உள்ளோர் உயர்வுகளைப் பெறுவார்கள். திருமண, காதல் பேச்சுகள் வெற்றியைக் கொடுக்கும். அனுஷ, கேட்டை நட்சத்திரர் பல வெற்றிகளை பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள் வெள்ளி.
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 29, 03.

**தனுசு :**
மனதில் நம்பிக்கை பிறக்கும். தெளிவான நிலை ஏற்படும் பணவரவும் செலவும் கொடுக்கும். உயர்ந்த இடத்து மதிப்பும். இரும்புபொன் தொழில் செய்வோர் நன்மைகளை பெற வாய்ப்பு உள்ளது. உயர்கல்வி பெரிய வளர்ச்சி நல்ல முடிவுகளைக் கொடுக்கும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், சனி.
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 02.
அதிஷ்ட திகதிகள் : 29, 02.

**மகரம் :**
உடல் நோய் துன்பம் குறைவு பெறும். பணச்செலவும், பிள்ளைகளால் சிற்சில சிக்கல்களும் ஏற்படும். வழக்கு, வெளியூர் பிரச்சனைகள் தெளிவு பெறும். கிரகபலன்படி திருவோண நட்சத்திரர் நன்மைகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : வெள்ளி, புதன் .
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 09.
அதிஷ்ட திகதிகள் : 29, 30.

**கும்பம்:**
எதிர்பார்த்த சில நன்மைகள் தொடருதும். கல்விபரீட்சைகள் வெற்றி பெறும். மனதில் உள்ள பிரச்சனைகள் சில மாற்றமடையும். பிரயாண அலைச்சல் களைப்பு ஏற்படலாம். இல்லறச் சிறப்பும் கணவரால் உதவிகளும் கிட்டும். சதய நட்சத்திர காரருக்கு பிரயாண வசதிகள் ஏற்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வெள்ளி.
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 03.
அதிஷ்ட திகதிகள் : 30, 03.

**மீனம் :**
மனக்கஷ்டம் மாறும். பெரியோர்களின் ஆசிர்வாதமும் கல்வி இடமாற்ற முயற்சிகள் காரிய வெற்றியுடன் மனதில் சந்தோஷம் ஏற்படும். வெளியூர் பயணம் தொடர்பான நிலைப்பாடுகள் இடம் பெறும்உத்திரட்டாதிக்காரர் நன்மைகளைப் பெறுவார்கள்.
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி .
அதிஷ்ட நிறம் : ஊதா; எண்: 06.
அதிஷ்ட திகதிகள் : 03, 04.

# லேடீஸ் ஸ்பெஷல்

லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல் லேடீஸ் ஸ்பெஷல்

## அம்மாவா? அப்பாவா?


'அம்மாவைப் பிடிக்குமா, அப்பாவைப் பிடிக்குமா?' என்று குழந்தைகளிடம் கேட்டபோது, 71 சதவீதமான குழந்தைகள் அம்மாவைப் பிடித்திருப்பதாகக் கூறுகின்றனர், என்கிறது ஓர் ஆய்வு.

பெற்றோர்கள் மீதான விருப்பு, வெறுப்புகளை ஆராய்வதற்காக தெற்காசியாவில் எடுத்த ஆய்வில், அதிகளவான குழந்தைகள் அப்பாக்களைக் குறை சொல்கின்றன.

3 முதல் 13 வயது வரையிலான குழந்தைகளுக்கு அப்பாவை விட அம்மாவையே அதிகம் பிடிக்கிறதாம். இப்புதிய ஆய்வில் 43 சதவீதமான குழந்தைகள் அம்மாவையும் அப்பாவையும் பிடித்திருக்கிறது என்று கூறினாலும், இதில் 38 சதவீதமானவை உண்மையில் அம்மாவை ஆதரிப்பவை என்று துணைக் கேள்வியின் மூலம் கண்டறியப் பட்டுள்ளன.

ஆய்வு செய்த கையோடு இதற்கான காரணத்தையும் மன இயல் வல்லுனர்கள் ஆராய்ந்துள்ளனர்.

நிறைய அப்பாக்கள் பெரும் நேரம் வேலை நிமித்தமாய் குழந்தையைப் பிரிந்திருத்தல், ஆத்திரத்துடன் எரிந்து விழுதல்,



அன்பான அரவணைப்பின்மை ஆகிய குற்றங்கள் அவர்களை அறியாமல் செய்து கொண்டிருப்பதாகக் கூறுகிறார்கள் மன இயல் வல்லுனர்கள்.

புரிந்ததா அப்பாக்களே? உங்கள் குழந்தையைச் சற்றுக் கொஞ்சுங்களேன்!

## சின்னத் துளிகள்



அரிசி வடித்த கஞ்சி உடலுக்கு மிகவும் நல்லது. விட்டமின் சத்துக்கள் நிறைந்தது. இந்தக் கஞ்சியை வீணாக்காமல் உப்பு, பெருங்காயத்தூள் போட்டுக் கடுகு தாளித்து மோர் விட்டுக் கலக்கிச் சாப்பிடலாம். எண்ணெய் தேய்த்துக் குளிக்கும்போது, அரிசி வடித்த கஞ்சியில் சீயாக்காய் போட்டுக் கலந்து குளிக்கலாம். தலைபட்டுப்போல் பளபளப்பாகவும் மென்மையாகவும் மாறும்.

ஓரேஞ்ச் தோலைக் காயவைத்து, நன்கு பொடியாக்கி வைத்துக் கொள்ளவும். இதனுடன் கடலை மாவு கலந்து பாலில் குழைத்து உடல்முழுவதும் பூசி, பிறகு சுத்தமாகத் துடைத்து எடுக்கவும். இவ்வாறு மாதம் ஒரு முறையாவது செய்து வந்தால், தோலின் துளைகளில் உள்ள அழுக்குகள் நீங்கி, தோல் பளிச் என்றாகும்.

மென்மையான மாசு மருவற்ற சருமம் வேண்டுமா? ஒலிவ் எண்ணெய், கடுகு எண்ணெய், நல்லெண்ணெய் ஆகியவற்றைச் சம அளவில் கலந்து, இவற்றுடன் சிறிதளவு தரமான மஞ்சள்தூள் சேர்த்துக் குழைக்கவும். இந்தக் கலவையைக் கை, கால், முகம் ஆகிய பகுதிகளில் தடவிவைத்து ஊறிய பின் குளித்து விடவும்.

குழந்தைகளது உள்ளாடைகளை வெதுவெதுப்பான நீரில் மிதமான சலவைத்தூள் போட்டு நனைத்து வைக்க வேண்டும். பிறகு தோய்த்து முடிந்ததும் டெட்டோல் கலந்த நீரில் இந்தத் துணிகளை அலசி எடுத்து வெயிலில் காய வைக்க வேண்டும். பிறகு இந்தத் துணிகளை நன்றாக உதறிச் சுத்தமான இடத்தில் மடித்து வைக்கவேண்டும்.

## புகுந்த வீட்டில்...

எப்போதும், எந்த நிலையிலும் கணவனை விலகி நிற்காதீர்கள். கணவருக்கு எதிரான கருத்துக்களை மனதில் வைத்துக் கொண்டு இராதீர்கள்.

உங்கள் தாய்வீட்டுப் பெருமைகளைப் பெரிதுபடுத்தியும், கணவர் வீட்டு உற்றார் களைச் சிறுமைப்படுத்தியும் பேசாதீர்கள்.


உங்கள் வாழ்க்கையில் உங்கள் கணவருக்குத்தான் முதலிடம். அதன் பிறகு தான் மற்றவர்களுக்கு.

பணப்பற்றாக்குறையால் அவதிப்படும் கணவர்கள் தான் அதிகம். எனவே அவர்களைச் சிக்கன வழிக்கு ஊக்குவித்து நீங்களும் சிக்கனமாயிருத்தல் அவசியம்.

கணவர் கோபப்படும்போது அமைதியாக இருங்கள். அவரது பிழைகளை எடுத்துக் கூறித் திருத்துங்கள். நீங்களும் கோபப்பட்டால் அவ்வளவுதான். அது பிரச்சனையின் இருப்பிடமாகிவிடும்.


## பட்டுச் சேலை பரிசுத் திட்டம்.

**மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்**



★ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

★ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.

(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

★ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** IM

பெயர்:..........................

முகவரி:..........................

..........................

தொழில்:..........................

கையொப்பம்:..........................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 04-11-2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# வழங்குவது 60 புவனா

# மோனிக்கா என் மோனிக்கா

கிளின்ரனுக்கும் தனக்குமிடையிலுள்ள உறவுபற்றி ஜோர்டன் அவளைக் கேட்டதும், அவருக்கு எல்லா உண்மைகளும் தெரிந்திருக்க வேண்டும் என்று மோனிக்கா சந்தேகப்பட்டாள். எந்த உண்மையையும் ஜோர்டனிடமிருந்து மறைப்பதில் பயனில்லையென கருதினாள். அதற்கு மேல் அவர் வேறு ஒன்றும் கேட்கவில்லை. மோனிக்காவின் வேலை தொடர்பாக அவர் குறிப்பிட்டிருந்த மூன்று நிறுவனங்களுக்கும் எவ்வாறு விண்ணப்பம் செய்ய வேண்டும் என்றும் ஜோர்டன் மோனிக்காவுக்கு விளக்கமளித்தார்.

நவம்பர் 24ம் திகதியன்று லிண்டா ட்ரிப்பின் பிறந்தநாள் அன்றைய தினமே பவுலா ஜோன்ஸ் கிளின்ரனுக்கெதிராகத் தொடர்ந்திருந்த பாலியல் தொடர்பான வழக்கில் ஒரு சாட்சியாக லிண்டா நீதிமன்றம் வரவேண்டுமென்ற உத்தரவும் லிண்டா ட்ரிப்புக்கு வழங்கப் பட்டிருந்தது. இதனை மோனிக்காவிடம் அவர் கூறவில்லை.

லிண்டா ட்ரிப், மோனிக்காவுக்கும் கிளின்ரனுக்குமிடையிலுள்ள அந்தரங்க உறவுபற்றி தான் ஒரு போதும் எவரிடமும், எக்கருத்தையும் கூறப்போவதில்லை என்று மோனிக்காவிடம் பலதடவை கூறியிருந்தாள். ஆனால் லிண்டா தனக்கு துரோகம் செய்து விட்டதாக மோனிக்கா நம்பவே செய்தாள்.

தானளிக்கப் போகும் சாட்சியம் எவ்வாறமைய வேண்டும் என்பதைப்பற்றி தனது வழக்கறிஞரான கிர்போ பேஹ்ரே என்பவரிடம் கூறியிருப்பதாகவும் அவரிடம் கூட மோனிக்காவைப் பற்றி எதுவுமே கூறவில்லையென்று லிண்டா சொல்லியிருந்தாள்.

தனது வழக்கறிஞரான பேஹ்ரேக்கு ஒரு கிறிஸ்மஸ் பரிசு வாங்குவதற்காக தன்னுடன் கடைகளுக்கு வருமாறு லிண்டா மோனிக்காவை அழைத்துச் சென்றாள். அப்போது லிண்டா மோனிக்காவிடம் ஒரு குண்டைத் தூக்கி வீசினாள்.

கிளின்ரனுக்கும் மோனிக்காவுக்குமிடையிலான உறவு பற்றிய விவரங்களையெல்லாம் எழுதி அதனைச் சீல் வைத்து, தனது வழக்கறிஞரிடம் கொடுத்திருப்பதாகவும் லிண்டா மோனிக்காவிடம் சொன்னாள். தான் இறந்து போக நேரிட்டால் மட்டும் ஒட்டி சீல் வைக்கப்பட்ட அப்பத்திரங்களைப் பிரித்துப் பார்க்கலாம் என்ற ஒப்பந்தத்துடன் மட்டுமே அந்த ஆவணங்கள் பிரித்துப்பார்க்கப் பட வேண்டும் என்று வாக்குறுதி பெற்றதன் பின்னரே அதனை கொடுத்துள்ளதாகவும் சொன்னார்.

லிண்டா கூறிய இத்தகைய வார்த்தைகளைக் கேட்ட மோனிக்கா அச்சமடைந்தாள். இதற்கு என்ன பதில் கூறவேண்டுமென்பதை அவளால் ஊகிக்க முடியவில்லை. இதனைத் தொடர்ந்து பேசிய லிண்டா ட்ரிப், "சாட்சிக் கூண்டில் என்னை ஏற்றி நீதிமன்றத்தில் விசாரணை செய்தால், நான் உண்மைகளை மறைக்காமல் கூறிவிடுவேன்!" என்று லிண்டா கூறினார்.

தொடர்ந்து "பவுலா ஜோன்ஸின் வழக்கறிஞர்கள் என்னிடம் கேள்விகள் கேட்டால் சத்தியத்துக்கு சிறைத்தண்டனை அளித்து விடுவார்கள் அல்லவா?" என்று கேட்டாள். இவ்வாறு லிண்டா கூறிய வார்த்தைகள் மோனிக்காவுக்கு மென்மேலும் அச்சத்தை ஊட்டின.

டிசம்பர் 17ம் திகதியன்று அதிகாலை 2.30க்கு மோனிக்காவின் தொலைபேசி அழைத்தது. அதே தொலைபேசியில் இத்தகைய அகாலவேளையில் தனக்கு அழைப்பெடுக்கக் கூடிய ஒரே ஒரு நபர் கிளின்ரன் தான் என்பதை நொடிப்பொழுதில் உணர்ந்து கொண்டாள்.

வாஷிங்டனில் வெளியாகும் தினசரிப் பத்திரிகைகளில் ஜனாதிபதியினதும் முதல் பெண்மணியான ஹிலாரி கிளின்ரனதும் அன்றாட நிகழ்ச்சி விவரங்கள் பிரசுரமாகி இருக்கும்.

அதன் படி அன்றைய தினம் ஹிலாரி கிளின்ரன் வேறு எந்த இடத்துக்கும் செல்லாமல் வெள்ளை மாளிகையிலேயே தங்கியிருக்கிறாள் என்பதை மோனிக்கா அறிந்து வைத்திருந்தாள்.

ஹிலாரி கிளின்ரன் வாஷிங்டனிலிருக்கும் சந்தர்ப்பங்களில் இத்தகைய அகால வேளையில் கிளின்ரன் தனக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கவே மாட்டார். அப்படியிருக்கும் போது இந்த அழைப்பு எங்கிருந்து வருகிறது என்று பலமாக யோசித்தாள். ஒரு கண நேரத்தில் எப்படியும், இது எனது அன்புக்குரியவரிடமிருந்துதான் வருகிறது' என்ற துணிவுடன் தொலைபேசியை எடுத்தாள்.

"உன்னிடம் அவசரமான-முக்கியமான இரு விடயங்களைப்பற்றி கூற வேண்டியிருக்கிறது!" என்று கூறிய கிளின்ரன், "ஒரு துயரமான செய்தி பெட்டியின் சகோதரன் ஒரு மோட்டார் விபத்தில் சிக்கி மரணமடைந்து விட்டார்!" என்ற முதல் செய்தியைக் கேட்டதும் மோனிக்கா அதிர்ச்சியடைந்தாள். "பெட்டி கியூரி கடந்த வருடம்தான் தனது சகோதரியை இழந்தாள், அத்துடன் அவளுடைய தாயாரும் நோயுற்று மருத்துவமனையில் இருந்தாள். மோனிக்காவின் கண்களிலிருந்து கண்ணீர் மழையாகப் பொழிந்தது.

காலையில் முதல் வேலையாக பெட்டி கியூரியின் இல்லம் சென்று அவருக்கு ஆறுதல்

## நீதிமன்ற உத்தரவு



கூறுமாறு கிளின்ரன் மோனிக்காவிடம் சொனனார். சிறிது நேரம் இருவரும் பெட்டி கியூரியைப் பற்றி உரையாடினார்கள். இதனைத் தொடர்ந்து அடுத்த செய்தியை கிளின்ரன் அவளிடம் கூறினார்.

"பவுலா ஜோன்ஸின் வழக்கில் ஒரு சாட்சியாக உன்னுடைய பெயரையும் பார்த்தேன். இதனைக் கண்டதும் என் உள்ளம் உடைந்து சுக்கு நூறாகியது. என்றார்" உண்மையில் இதுபற்றி இரு வாரங்களுக்கு முன்னே கிளின்ரன் தெரிந்து வைத்திருக்கிறார். அவருடைய வழக்கறிஞர்கள் அவருக்கு அனுப்பிவைத்திருந்த தொலைநகலில் பவுலா ஜோன்ஸ் வழக்கில் மோனிக்காவும் ஒரு சாட்சி என்று பட்டியலில் போடப்பட்டிருந்தது.

டிசம்பர் 6ம் திகதியன்றே இத்தகவலை அறிந்திருந்த கிளின்ரன், அதுவரை மோனிக்காவிடம் எதுவும் கூறாதிருந்தார்.

கிளின்ரனிடமிருந்தே இந்த தகவல் வந்ததும் மோனிக்கா உண்மையில் பயந்து போனாள் அவ்வாறு தான் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டால் என்ன கூறவேண்டும் என்று அவரிடமே மோனிக்கா கேட்டாள்.

கிளின்ரன் "பட்டியலில் பெயர் இருந்தால் கட்டாயம் நீதிமன்றத்துக்கு வருமாறு அழைப்பாணை பிறப்பிக்கப்படும். ஆகவே நீ போய்த்தானாக வேண்டும்!" என்று கிளின்ரன் கூறிவிட்டார்.

பவுலா ஜோன்ஸின் வழக்குபற்றி பத்திரிகைகளில் வந்த செய்திகளை தான் படித்ததாகவும் இலட்சம் டொலர் தனக்கு கொடுத்தால் வழக்கை வாபஸ் வாங்கிவிடப் போவதாகவும் பளவுலா ஜோன்ஸ் கூறியிருப்பதாக தான் வாசித்ததாகச் சொன்னாள்.

கிளின்ரன் பவுலா ஜோன்ஸ் விவகாரத்தில் தான் குற்றமற்றவள் என்று கூறியிருந்த போதும், 1999 ஜனவரியில் அவருக்கு 850,000 டொலர் கொடுத்து வழக்கைத் தொடராமல் ஏற்பாடு செய்து விட்டார்.

இருவருக்குமிடையிலான தொலைபேசி உரையாடல் 40 நிமிடம் வரை நீடித்தது. இறுதியில் மோனிக்காவுக்கான கிறிஸ்மஸ் பரிசினை வெள்ளை மாளிகையில் வைத்து தன்னிடம் பெற்றுக் கொள்வதற்கு ஏற்பாடு செய்வதாகவும் பெட்டிகியூரியிடம் அடிக்கடி தொடர்பு கொள்ளுமாறு கிளின்ரன் மோனிக்காவிடம் கேட்டுக்கொண்டார்.

அப்போது மோனிக்கா "பாவம் பெட்டி, சகோதரனையிழந்து துயரில் மூழ்கியிருக்கும் அவரை இக்காலகட்டத்தில் ஏன் தொந்தரவு செய்ய வேண்டும்!" என்று கூறிய மோனிக்கா விம்மி விம்மியழுது தொலைபேசியை வைத்தாள்.

அடுத்தநாள் காலை பெட்டிகியூரி தொலைபேசி மூலம் தான் அங்கு வருவதாக கூறிவிட்டு, போய்ச் சேர்ந்தாள். அன்றிரவு முழுவதும் தூங்காமல் அழுதவண்ணமே கட்டிலில் புரண்டாள்.

லிண்டா வீடு சென்றதும் மோனிக்காவின் துயரம் பன்மடங்காகியது. பவுலா ஜோன்ஸின் வழக்கில் தன்னையும் ஒரு சாட்சியாக சேர்த்திருப்பது யாருடைய வேலையாக இருக்கும் என்பதை அறிந்து கொள்ள அவள் எத்தனித்தாள். தன்னுடைய வீட்டுத் தொலைபேசி பவுலா ஜோன்ஸின் வழக்கறிஞர்களால் ஒட்டுக்கேட்கப்படுகின்றதோ என்று பலவாறாக எண்ணினாள்.

அடுத்தநாள் டிசம்பர் 18ம் திகதி ஜோர்டனின் ஏற்பாட்டின்படி நியூயோர்க்கில் இரு நேர்முகப் பரீட்சைகளை மோனிக்கா எதிர்கொள்ள வேண்டியிருந்தது. எனவே 17ம் திகதி மாலை நியூயோர்க்கிலுள்ள தனது தாயாருக்கு தொலைபேசி அழைப்பெடுத்து, தான் அடுத்தநாள் நியூயோர்க் வரப் போவதாகவும் விமான நிலையத்தில் தன்னைச் சந்திக்குமாறும் தகவல் கொடுத்தாள். தனது தாயாருடன் அப்போது தான் எதிர் நோக்கும் பல சிக்கல்களை இட்டும் விவாதிப்பதற்கு வசதியாக விமானநிலையத்துக்கே வரும்படி தனது தாயாரைக் கேட்டாள்.

தனது தாயாரின் வீட்டுத் தொலைபேசியும் ஒட்டுக் கேட்கப்படலாம் என்ற சந்தேகமும் அவளுக்கிருந்தமையினால், விமானத்திலிருந்து வீடு செல்லும் வழியிலேயே தாயாரிடம் தனது பிரச்சனைகளையிட்டுக் கலந்துரையாட அவள் நாட்டங் கொண்டாள்.

(வருவாள்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**

**ஹெட்டிபொல வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான்

எம்.ஈ. தில்ஷாத் பேகம்,
போகல்ல வீதி, ஹெட்டிபொல.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.


அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# ஓராண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
16 ❀ 09 ❀ 1963

ஈசன் அடியில்
02 ❀ 11 ❀ 1999



## நடராஜா அற்புதராஜா (ரமேஷ்)

*தினமுரசு ஆசிரியரும், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரும்*

எழுதுகோலேந்தி எம் தமிழை வாழவைக்க
பழுதறியாப் பணிபுரிந்த பார் புகழும் அற்புதனே!
விழுதூன்றி வேர் பரப்ப விளைந்திட்ட வேளையுனை
புழு அரித்த மரம்போல வீழ்த்திவிட்டார்
-வீணர்கள்தான்!

மக்கள் படும் பெரும்பாட்டை முரசறைந்து
-வெளிக்காட்ட
தக்கதான ஓரேட்டை தரணிக்கே -தந்தவன் நீ
திக்கெல்லாம் உன் கருத்தைப் பார்த்தவர்கள்
-பாராட்ட
பக்கமெலாம் பைந்தமிழை பரபரப்புடன் -தந்தாய்!


பத்திரிகையுலகினிலே பார்த்தனென நீ புகுந்தாய்
பகைவரெலாம் பதைபதைக்க படைநடத்திப்
-போரிட்டாய்
உன்னெதிரே நின்று உறுதியுடன் போராட
உள்ளஉரமற்றவர்கள் ஒன்றிணைந்து சூழ்ச்சி
-செய்தார்.

எழுகோலால் உனை வீழ்த்த உரியவழி காணாமல்
புழுவே நிகர் புல்வர்கள் புறவழியால் புகுந்துன்னை
வீழ்த்த வழி கண்டார்கள்; விழுப்புண்தனை ஏற்றாய்;
வீர சொர்க்கம் ஏகிவிட்டாய் விண்ணவர்கள்தான்
-வாழ்த்த!

ஆண்டொன்று போனாலும் ஆறாத புண்களிலே
அருவியென குருதிவெள்ளம் குமுறுதையா
-குவலத்தில்
ஆருளரோ எம் துயரை உனைப்போல அரவணைத்து
ஆறுதலைத் தரவல்லார்? யாருமில்லை இப்புவியில்!

உனதெழுத்தின் வெப்பத்தால் வெதும்பித்
-தவித்தவர்கள்
உனை வீழ்த்தத் திட்டமிட்டார்; வெற்றியும்
-பெற்றுவிட்டார்
உன் தமிழை அடியொற்றி நீ வகுத்த பாதையிலே
உன் நினைவை நிலைநிறுத்த உத்தமனே
-வழிகாட்டு!

# ஓராண்டு நினைவஞ்சலி



அன்னை மடியில்: 05 ❀ 12 ❀ 1962 ஈசன் அடியில்: 02 ❀ 11 ❀ 1999

## தர்மராஜா அஜந்தகுமார் (ராஜன்)

**வீரப்போர் முரசறைந்து வீணர்களைச் சாடி நின்ற
பார்த்தனுக்குச் சாரதியாய் வாய்த்தவன் போலானாய்
பார்க்கும் போதெல்லாம் பசுமை நிறைசிரிப்பலையால்
பார்ப்பவரையெலாம் கவர்ந்தாய்
பண்புடனே பழகி நின்றாய்!**

கள்ளத்தனமெதுவும் கடுகளவுமில்லை என்ற உள்ளத்தைக் கொண்டு எமையெல்லாம் கவர்ந்தவனே! துள்ளித்திரியும் பாலகனைப்போல் என்றென்றும் வெள்ளம் போல் அன்பு கொட்டும் விழியிரண்டும் கொண்டவனே!
எழுது கோலேந்தி நின்று எத்தர்களையெல்லாம் வீழ்த்த பழுதறியாப் பணிபுரிந்த மைத்துனர்க்குச் சாரதியாய் உழைத்த பணிதொடர; தொடர்ந்து தான் போனாயோ விழுப்புண்தனைச் சுமந்து வீரசொர்க்கம் சென்றாயோ!

## விறு விறு தொடர்

19

அந்தப் பணக்கட்டை ஒரு பழைய செய்தித்தாள் போட்டு சுற்றினாள். அந்த அறையின் மூலையில் நிராகரிக்கப்பட்ட சில பழைய தலையணைகள் கிடந்தன.

அதை நோக்கிச் சென்றாள். கடைசித் தலையணை நடுவில் கிழிந்து போய்ப் பஞ்சு எட்டிப் பார்த்தது. அந்தக் கிழிசலை மேலும் பெரிது செய்து பணக்கட்டின் பார்சலை உள்ளே நுழைத்து பஞ்சுக்கு நடுவில் தள்ளி விட்டாள். முன் போல மற்ற தலையணைகளை அதன் மேல் போட்டாள்.

கண்ணாடி பார்த்து விலகியிருந்த ஸ்டிக்கர் பொட்டை சரியாக நடு நெற்றியில் வைத்துக் கொண்டாள்.

அந்த அறையின் கதவை மிகமிக மெதுவாக ஓசை வராமல் திறந்து, வெளியே வந்து மறுபடி மூடினாள்.

படிகள் இறங்கி கீழே வர... ஓரமாகப் படுத்திருந்த தாத்தா எழுந்து, "சுரேகாவா? என்ன வீட்டுக்குக் கிளம்பிட்டியா?" என்றார்.

"ஆமாம். மறுபடி வருவேன். அந்த ஆளுக்கு என்னை ரொம்பப் பிடிச்சிருக்கு. பகல்லயும் கூப்புடறான். இப்ப வந்துடுவேன்."

"சரி, சரி"

தாத்தா கொட்டாவியுடன் வாசல் பூட்டைத் திறந்து விட, வெளியே முக்கியத் தெருவுக்கு வந்து சுரேகா ஆட்டோவுக்காக காத்திருக்க....

ரஞ்சித் புரண்டு படுத்தான்.



**க**ல்யாண மண்டபத்தில் தனக்கு கீழே இயங்கும் சில போலீஸ் அதிகாரிகளிடம் குறிப்புகள் சொல்லிக் கொண்டிருந்த நியூட்டன் அருகில் வந்தான் பரத்.

"சார், புதுசா சில ஏற்பாடுகள் செய்யணும்னு நினைக்கிறேன்!" என்றான்.

"சொல்லுங்க பரத், என்ன செய்யணும்?"

"நாம ஏகப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகள் செஞ்சிருப்போம்னு அந்த ரஞ்சித் எதிர்பார்க்க மாட்டானான்னு சுசீலா கேட்ட கேள்வில ஒரு பாயிண்ட் இருக்கு சார்."

"ஸோ?"

"ரஞ்சித் மண்டபத்துக்குள்ளே வராம செயல் படறதுக்கு ஏதாச்சும் திட்டம் யோசிச்சிருந்தா அதையும் முறியடிக்கிறதுக்கு நாம தயாரா இருக்கணும்"

"அப்படி என்ன யூகிக்கிறீங்க?"

"கல்யாணம் முடிஞ்சதும் ஈவினிங் நாலுமணிக்கு ஆகாஷ் தீபிகாவோட கார்ல புறப்பட்டு ஏர்போர்ட் போறதா பிளான் இல்லையா?"

"ஆமாம்!."

"ஆகாஷ் மண்டபத்துக்கு வெளில வந்து கார்ல ஏறிப் புறப்படற இந்த சந்தர்ப்பத்துக்கும் முழு கவனம் கொடுத்தாகணும். ஏர்போர்ட் போய்ச் சேர்ந்து பிளேன்ல ஏறி, அது பறக்கற வரைக்கும் டைட் செக்யூரிட்டி தந்தாகணும்."

"இது ரொம்ப பெரிய ஏற்பாடு பரத்."

"எல்லா செலவுகளையும் ஏததுக்க இவங்க தயாரா இருக்காங்க சார். எங்கயாவது கோட்டை விட்டுடக் கூடாதுங்கறது என் கவலை."

"ஓ.கே. ஏற்பாடு பண்ணிடலாம்!"

"மண்டபத்தைச் சுத்தியும் உள்ள உயரமான கட்டிடங்கள் எல்லாத்தையும் கண்காணிக்கணும். சாத்தியம் இருக்கிறதா நாம நினைக்கிற கட்டிடங்கள்ல மஃப்டில நம்ம ஆளுங்களை நிறுத்தி வைக்கணும்."

நியூட்டன் பெருமூச்சு விட்டார்.

"அப்புறம்?"

"கல்யாணத்துக்கு வர்றவங்க அத்தனைப் பேரையும் மெட்டல் டிடெக்டர் ஃபிரேமுக்குள்ளே நுழைஞ்சி வரச் சொல்லணும். பரிசு கொடுக்க எடுத்துட்டு வர்ற பார்சல்களையும், லக்கேஜ்களையும் ஸ்கேன் பண்ணிதான் அனுமதிக்கணும்."

"இது வர்ற விருந்தாளிங்களை இன்சல்ட் பண்றதா இருக்காதா?"

"பெரிய பெரிய ஃபங்ஷன்ல இந்த மாதிரி ஏற்பாடுகளுக்கு மக்கள் பழகிட்டாங்க. 'முக்கியமான மினிஸ்டர் இந்த கல்யாணத்தில கலந்துக்கறதா இருக்கார், அதனால தான்'ன்னு தயவா சொல்லி புரிய வைக்கலாம்!" என்றான் பரத்.

நியூட்டன் கர்ச்சிப் எடுத்து தன் கழுத்து வியர்வையைத் துடைத்துக் கொண்டார். சிரித்தார்.

"என்ன சார் சிரிக்கிறீங்க?"

"சாதாரணமா ஒரு கல்யாணத்தை நடத்தறதையே பெரிய விஷயமா நினைச்சுத்தான்.

'கல்யாணம் பண்ணிப் பார்'ன்னு சொல்லுவாங்க! 'கொலை மிரட்டலை மீறி பாதுகாப்புக்கு நடுவில் ஒரு கல்யாணம் பண்ணிப் பார்!'ன்னு இந்த சவாலைக் குறிப்பிடணும்" என்றார் நியூட்டன்.

சுரேகா இன்னும் விடியாத அந்த அதிகாலையில் முக்கிய சாலையில் ஏதாவது ஒரு திசையிலிருந்து ஆட்டோ வருமா என்று தவிப்புடன் காத்திருந்தாள்.

கண் பார்வை எட்டின தூரம் வரை சாலைகளின் எல்லைகளில் கறுப்பு! மேலும் கறுப்பு! ஒரு வெளிச்சப் புள்ளியையும் காணவில்லை.

பஸ் நிறுத்தம் போக இன்னும் நீண்ட தூரம் நடக்க வேண்டும். இன்னும் ஒரு மணி நேரம் கழித்து தான் பஸ்கள் வரும்.

அந்த ஆள் போதை உறக்கத்தில் ஆழ்ந்து கிடக்கும் போதே போலிசைக் கூட்டி வந்து மாட்டி வைத்து விடுவதுதான் நல்லது.

ஆறுமணிக்கு அவன் வாட்ச்சில் அலாரம் செட் செய் திருக்கிறான். அது ஒலித்து, அவன் விழித்து விட்டால் பிறகு அவன் நடவடிக்கைகள் என்ன என்று நிச்சயமாய் சொல்ல முடியாது.

நான் எழுதி வைத்துவிட்டு வந்திருக்கும் அந்தக் குறிப்புச்சீட்டைப் பார்ப்பான். சமாதானமடைவான். சரி,ஆனால் அவன் எப்போது அங்கிருந்து புறப்படுவான் என்று சொல்ல முடியாதே....

சுரேகா அலைபாயும் மனதுடன் கைகளைப் பிசைந்தவாறு தவித்தாள்.

தூரத்தில் ஒரு வெளிச்சப் புள்ளி முளைத்து அது அவளை நோக்கிப் பெரிதாகிக் கொண்டே வர அது ஒரு ஆட்டோவாக இருக்க வேண்டும் என வேண்டிக் கொண்டாள்.

அருகில் வர... வர.... அது ஆட்டோ இல்லை என்று தெரிந்து கொண்டாள்.

அது ஒரு அம்பாசிடர் கார். ஆனால் அதில் ஒரு பக்க விளக்கு எரிய வில்லை.

ஆனால் அதை ஆட்டோ என்று புரிந்து கொண்டு, "ஆட்டோ!" என்று இவள் கை தட்டியதால் அதை ஓட்டிவந்த டிரைவர் சட்டென்று வேகம் குறைத்து, அவள் அருகில் வந்து கார் நின்றது.

"என்ன?" என்று எட்டிப்பார்த்த இளைஞனுக்கு முப்பது வயது இருக்கலாம். இந்தக் காரை ஓட்டி வந்த அவனைத் தவிர காரில் யாரும் இல்லை.

"இல்லை, நீங்க போங்க சார்! ஒரு லைட்டுதான் எரிஞ்சதால நான் ஆட்டோன்னு நினைச்சி கூப்புட்டுட்டேன்!" என்றாள் சுரேகா.

ஆனால் அவன் கரை நகர்த்தாமல், என்ஜினை அணைத்து விட்டு, "ஏய்? உனக்கு என்னை ஞாபகம் இருக்கா?" என்றான்.

"யாரு?" என்றாள் புரியாமல்.

"உன் பேரு.... இரு சொல்றேன்.... சுரேகாதானே?"

"கரெக்ட்டு நீங்க?"

அவன் புன்னகைத்து, "ஆறு மாதம் முன்னாடி நானும் என் ஃபிரெண்டு ஒருத்தனும் உன்னை மகாபலிபுரம் கூட்டிட்டுப் போனமே, மறந்துட்டியா? இதே கார்ல தானே போனோம். ஒருநாள் தங்கியிருந்துட்டு வந்தமே" என்றான்.

அவளுக்குப் புரிந்தது. ஆனாலும் அவனை நினைவுக்கு வரவில்லை. எத்தனையோ மகாபலிபுரம் பூரிப்புகள்! எத்தனையோ இளைஞர்கள்!

"இருக்கலாம்!" என்றாள்.

"இருக்கலாமா? சரி நீ மறந்தாலும் நான் மறக்கலை. ஏன் இப்படி ரோட்ல நிக்கிறே? யாரும் பார்ட்டி கிடைக்கலையா?"

"ச்சே! நான் அந்த அளவுக்கு சீஃப்பு இல்லை."

"சரி, எங்க போகணும்? வண்டில ஏறு!"

"ஒரு கல்யாண மண்டபத்துக்குப் போகணும். இறக்கி விடறீங்களா சார்?"

"ஏறு!"

முன் கதவைத் திறந்து வைக்க, சுரேகா ஏறியதும், காரை ஸ்டார்ட் செய்தான். கார் ஓடத் தொடங்கியதும்....

"சுரேகா, பக்கத்தில என் வீடு. வீட்ல யாரும் இல்லை. எல்லாரும் வெளியூர் போயிருக்காங்க. போகலாமா?" என்றான்.

"விடியப் போகுது சார்! நேரங் காலம் கிடையாதா?"

"இதுக்கெல்லாம் என்ன நேரம்? மனசு வேணும். பணம் வேணும். ரெண்டும் என்கிட்ட இருக்கு. என்ன சொல்றே?" என்று அவள் தொடையில் கைவைத்தான்.

"இப்ப நான் முக்கியமான வேலையா போயிட்டிருக்கேன் சார். அப்புறமா.... இன்னொரு நாளைக்கு."

"இப்போ விக்கல் எடுத்தா நாளைக்கா தண்ணி குடிப்பாங்க?" என்ற அவன் காரைத் திருப்பிய சாலையைப் பார்த்துப் பதறிய அவள். "என்ன இந்தப் பக்கம் போறீங்க? எனக்கு எத்திராஜ் ரோடு போகணும்!" என்றாள்.

"முதல்ல என் வீட்டுக்கு. அப்புறம் நானே உன்னை நீ போகவேண்டிய மண்டபத்துக்குக் கொண்டு போய் விடறேன். எதுவும் பேசக் கூடாது ஆமாம்!" என்றான் அவன் உத்தரவாக.

இந்த திடீர் சிக்கலில் இருந்து எப்படி மீள்வது, இவனை எப்படி சமாளிப்பது என்று தீவிரமாக யோசித்தபடி நகத்தைக் கடிக்கத் துவங்கினாள் சுரேகா.

(தொடர்ந்து வரும்)

மர்மக்கதை மன்னன் பட்டுக்கோட்டை பிரபாகர்

---

# ஒளிப்பதிவு அனுபவங்கள் 02

**திரைப்படங்களில் நடிக, நடிகையரை வைத்து இயக்குநர் அமைக்கும் காட்சிகளை திரையில் வடிவமைப்பவர் ஒளிப்பதிவாளர். தமிழ்த்திரைப் பட ஒளிப்பதிவாளர்களில் குறிப்பிடத்தக்க சிலரில் ஒளிப்பதிவாளர் வி.ராமமூர்த்தியும் ஒருவர். மக்கள் திலகம் எம்.ஜி.ஆர். நடித்த 23 படங்களை ஒளிப்பதிவு செய்திருக்கிறார் இவர்.**

**தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி என 5 மொழிகளில்-1951 முதல் 1991 வரை 40 வருடங்களில் - 96 படங்களுக்கு ஒளிப்பதிவு செய்துள்ளார். 76 வயதான ராமமூர்த்தியின் திரையுலக அனுபவங்களைத் தொகுத்துத்தருகிறார் எஸ்.விஜயன்.**

பந்துலுவின் தயாரிப்பில் மிக பிரமாண்டமான வண்ணத்தில், உருவான படம் 'கர்ணன்.' அரங்க அமைப்பில், காட்சி அமைப்பில் இதற்கு ஈடான பிரமாண்டமான படம் தமிழில் பின்னர் வந்ததில்லை என்றே கருதுகிறேன்.

படத்தில் குந்திதேவியாக வரும் எம்.வி.ராஜம்மாவும், அவரது மகன் கர்ணனாக வரும்சிவாஜியும்சந்தித்துக் கொள்ளும் ஓர் உணர்ச்சி மயமான, மிக நீளமான காட்சி ஒன்று உண்டு. அதை ஒரே வீட்டில், அதுவும் வட்ட வடிவமான ரவுண்ட் டிராலியில் (கமராவை நகர்த்துவதற்காகப் போடப்படும் தண்டவாளம் போன்ற அமைப்பு) இருந்தபடி படமாக்குவது என்று முடிவு செய்தோம்.

இன்றைக்கு ரவுண்ட் டிராலியில் படமாக்குவது சாதாரண விஷயமாகிவிட்டது. அன்றைக்கு ஏவி.எம்மில் மட்டுமே ரவுண்ட் டிராலி இருந்தது. 'வின்டன் டிராலி' எனப் படும் அதை படப்பிடிப்பு நடைபெற்றுக் கொண்டிருந்த வாகினி ஸ்டூடியோவுக்குக் கொண்டு வந்தோம்.



அன்றைக்கு வசனம் பேசுவதை நேரடியாக பதிவு செய்வதோடு சரி. நினைத்த மாத்திரத்தில் டப்பிங் எல்லாம் வைத்துக் கொள்ள மாட்டார்கள். அதனால் படமாக்கும் போது குறைபாடு ஏற்பட்டு 'ரீ டேக்' (மறுபடி படமாக்குவது) போனால் முதலிலிருந்து தொடங்க வேண்டும். அதுபோல் பிரச்சனை வரக்கூடாதென்பதற்காக முதல் நாளே பலமான முன்னேற்பாடுகளைச் செய்தோம். டிராலி சுற்றி வரும், அதனோடு வசனத்தை பதிவு செய்ய மைக்கும் சுற்றி வருவது போல் அமைத்தோம்.


ஒளியமைக்கும் போது (லைட்டிங்) பெரிய விளக்குகளில் அதிகம் சூடாகி விட்டால் அதிலிருந்து வித்தியாசமான ஒலி வரும். அதனால் விளக்குகள் சூடாகிவிடாமல் இருப்பதற்காகவும் சில பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்தோம். இதன் மூலம் தொழில்நுட்ப ஒத்திகை முதல் நாளே பார்த்துக் கொண்டோம்.

மறுநாள் சிவாஜியும், எம்.வி.ராஜம்மாவும் வந்தனர். ஆயிரம் அடி ஒரே ஷாட்டாக படமாக்க வேண்டியிருந்ததால், இருவரும் ஒருமுறை வசனம் பேசி ஒத்திகை பார்த்துக் கொண்டனர்.

படப்பிடிப்பு தொடங்கியது. எவ்வித பிரச்சனையும் இல்லாமல் இருவரும் சரியாக வசனம் பேசி நடித்து, முடித்து, இயக்குநர் பந்துலு "டேக் ஓகே" என்றபோது, பலத்த கைதட்டல் எழுந்தது. 950 அடி நீளம் ஒரு ஷாட்டாக படமாக்கப்பட்டது. தமிழ் சினிமாவின் சாதனைகளில் ஒன்று, இந்தக் காட்சியைப் பார்த்த இயக்குனர் ஸ்ரீதர் துள்ளிக் குதித்து சந்தோஷப்பட்டார்.

'கர்ணன்' படத்தின் இறுதிக்காட்சிகள் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் படமாக்கப்பட்டன. அங்கு இரவு ஏழு மணிக்குத்தான் சூரியன் மறையும். அதனால் காலையில் தொடங்கி இரவு ஏழு மணி வரையிலும் படப்பிடிப்பு நடத்தினோம். அந்தப் பகுதியில் குடிதண்ணீர் கஷ்டம் இருந்ததால் மிகுந்த சிரமப்பட்டுப் போனோம்.

படத்தில் பகவான் கிருஷ்ணனாக வரும் என்.டி.ராமராவ் அமைதியாக இருப்பார். படத்திற்காக தான் அணியும் உடைகள் கசங்குவதற்கு இடமளிக்க மாட்டார். ஆபரணங்கள் சேதாரமில்லாமல் இருக்கும்படி பார்த்துக் கொள்வார். திரவ உணவு மட்டும் தான் எடுத்துக் கொள்வார். புராண கதாபாத்திரங்களில் நடிப்பதென்றாலே மிகுந்த சிரமப்பட்டுக் கொள்வார். சிவாஜி நடிப்பதற்காக வந்துவிட்டால், அவரது கவனம் வேறெதிலும் செல்லாது. இயக்குநர் விரும்பும் வரையில், வகையில் ஒத்துழைப்புக் கொடுப்பார். ஒரு காட்சியில் தன் மீது படும் ஒளியின் அளவைக் கிரகித்துக்கொண்டு நடிக்



கும் நடிகர் அவர். விளக்கொளியில் சூடு எந்தளவு முகத்தில் பட வேண்டும் என்பதை உணர்ந்து, கேமராவின் அசைவுகளுக்கேற்ப தன் அசைவுகளை வைத்துக் கொள்பவர் அவர்.

அவுட்டோரிலும், இண்டோரிலும் அது போல் சூடு வாங்கிக் கொண்டு நடிக்கின்றவர்களை இன்றைக்கு நாம் காண முடியாது. இன்றைக்கு முகத்தை, உடலை உறுத்தாத அளவில் ஒளியமைப்பு செய்யப்படுகிறது. நடிப்பவர்களின் வசதிக்கேற்ப காட்சிகள் அமைக்கப்படுகின்றன.

**கா**ட்சிகள் அழகாக வரவேண்டும். தான் அழகாகத் தெரிய வேண்டும் என்பதற்காக எந்தச் சிரமத்திற்கும் தயாராக இருப்பார் எம்.ஜி.ஆர்.. அதற்கு ஓர் உதாரணம்.

லைட்டிங் (ஒளியமைப்பு) நடக்கும் போது நடிப்பவர்கள், பெரும் பாலும் உரிய இடத்தில் நின்று முகம் காட்ட மாட்டார்கள். லைட்டிங் மீட்டரில் ஒளி அளவைக் கணக்கிடும் உதவி ஒளிப்பதிவாளர், உதவி இயக்குநர் ஒருவரையோ, இன்னொரு உதவி ஒளிப்பதிவாளரையோ அவ்விடத்தில் நிற்கச் சொல்வர். ஆனால், எம்.ஜி.ஆர்., பெரும்பாலும் லைட்டிங் மீட்டருக்கு தானே நின்று முகம் காட்டுவார். அதில் கவுரவம் எல்லாம் பார்க்கமாட்டார்.

நான் ஒளிப்பதிவாளராக பணிபுரிந்த எம்.ஜி.ஆர். படங்களில் அவரது முகம் நன்றாக இல்லையென்றால் இரசிகர்கள் கடிதம் எழுதி தங்கள் மனக்குறையைத் தெரிவிப்பர். அல்லது நேரிலேயே விளக்கம் கேட்டு வந்து விடுவர். எம்.ஜி.ஆரது புதிய படங்கள் வெளிவரும் சமயங்களில் கோவிலுக்குச் சென்று வெற்றிக்குப் பிரார்த்தனைசெய்யும் அவரது இரசிகர்களில் சிலர், என் வீட்டுக்கு வந்து மாலையணிவித்து, வாழ்த்துத் தெரிவித்து செல்வர்.

நான் குடியிருக்கும் பகுதியிலுள்ள மார்க்கெட்டுக்கு எப்போது போனாலும் "எம்.ஜி.ஆர்., கேமராமேன்" என்று அடையாளம் கண்டு, பாதி விலையில் காய்கறிகள் மற்றும் எந்த பொருளையும் பாதி விலையில் தருவார். எம்.ஜி.ஆர்., என்ற பெயருக்குள்ள 'சக்தி' அளவிட முடியாதது. அதை அனுபவித்துப் பார்த்திருப்பவர்களுக்கே தெரியும்.

வெளியில்தான் இப்படி என்றால் எம்.ஜி.ஆர்., படங்களில் பணிபுரியும் யூனிட் ஆட்கள் படப்பிடிப்பின் கடைசி நாளில் எம்.ஜி.ஆருக்கு மாலையணிவித்து விருந்தளிப்பர். எம்.ஜி.ஆரும் பதில் மரியாதை செய்யத் தவறமாட்டார்.

-எஸ். விஜயன்-

[அடுத்தவாரமும் வரும்]

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி.... எஸ்.டி.சிவநாயகம் 26

# கலைவாணர் மது அருந்துவாரா?

நாடகக் குழுவினர் ஒரு பஸ் வண்டியில் அங்கு வந்திறங்கினார்கள். அவர்கள் தங்குவதற்கான அறைகள் மேல்மாடியில் இருந்தன. ஏனைய நடிகர்கள் மாடிப் படிக்கட்டுகளில் ஏறிச் சென்றதும், கடைசியாகக் கலைவாணர் ஏறினார். அவரின் பின்புறமாக அம்பலவாணரும் நானும் ஏறிக் கொண்டிருந்தோம். மேலேயிருந்து, எங்களைக் கண்ட வைத்திலிங்கம் வேகமாகக் கீழிறங்கிவந்தார். என்னருகில் வந்து, "நீர் எங்கே செல்கிறீர்?' உமக்கு இங்கு இடமில்லை!" என்று சற்று உரத்துக் கூறினார். எனக்கு மிகவும் அவமானமாகப் போய்விட்டது!

அந்தக் காட்சியைக் கவனித்த கலைவாணர் இரண்டொரு படிகள் கீழே இறங்கி வந்து என்னை அணைத்துக் கொண்டு மேலே சென்றார். வைத்திலிங்கத்தைப் பார்த்து சற்றுக் கடுமையாக, "அவரை நான்தான் வரச் சொன்னேன்!" என்று கூறினார்.


விமான நிலையத்தில் கலைவாணர் என்.எஸ்.கே. தனது குழுவினருடன் வந்திறங்கியபோது, திரு.அம்பலவாணரையும் என்னையும் வைத்திலிங்கம் புறக்கணித்த முறையினை கலைவாணர் அவதானித்துக் கொண்டார் என்பதை பின்னர் தான் நான் கண்டு கொண்டேன்.

கொழும்பிலுள்ள பல பத்திரிகையாளர்களை விமான நிலையத்திற்கு வருமாறு அழைத்திருந்த திரு.வைத்திலிங்கம், திரு.எஸ்.டி.சிவநாயகம் அவர்களையோ 'சுதந்திரன்' பத்திரிகையாளர்களையோ அழைத்ததாகத் தெரியவில்லை. இத்தனைக்கும் சுதந்திரன் பத்திரிகைக்கு விளம்பரங்கள் சேர்த்துத் தருபவராகவும் சில காலம் வைத்திலிங்கம் கடமை பார்த்தவர்.

சிற்றுண்டி, தேநீர் அருந்திய பின்னர் என்.எஸ்.கே. நாடக சபையின் நிர்வாகியை அழைத்து, எம்முடன் அமர்ந்து கொண்ட கலைவாணருடன் மேற்கொண்டு நடைபெறவிருக்கும் நடவடிக்கைகள் பற்றி உரையாடினோம். மட்டக்களப்பு, பதுளை ஆகிய இடங்களுக்கு நாடகங்கள் நடத்துவதற்காக செல்லவிருக்கும் வழிமுறைகளை ஆராய்ந்தோம்.

நாவலப்பிட்டியில் உள்ள திரையரங்கில் நாடகம் முடிவடைந்த பின்னர் கலைவாணர் குழுவினரை அழைத்துக் கொண்டு பதுளை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குச் செல்லும் பொறுப்பை நான் ஏற்றுக் கொண்டேன். பதுளை மற்றும் பதுல்லா என்ற நகரங்களும் ஒரே இடத் தைத் தான் குறிக்கின்றன என்பதை நான் விளக்கிய பின்னரே தான் கலைவாணருக்கு உண்மை தெரிந்தது. "இந்த உண்மை ஏற் கனவே தெரிந்திருந்தால் பதுளை சைவ மகாசபையினருக்கு நாடகத்தை ஏற்பாடு செய்ய நான் அனுமதித்திருக்க மாட்டேன்!" என்று கூறிய கலைவாணர், இத்தகைய குழப்பத்தை ஏற்படுத்தியமைக்காக திரு. வைத்திலிங்கத்தை எம்மருகே அழைத்து கடிந்து கொண்டார்.

கலைவாணர் குழுவினருடனான எனது இந்த உறவு பற்றி விரிவாக நான் குறிப்பிடுவதற்குக் காரணம் இருக்கிறது. அந்தப் பெருந்தகையாளருடன் நான் நெருக்கமாக உறவாடிய வாய்ப்பினைப் பெற்றமையினால், கலைவாணர் மறைந்த பின்னர் 1958ம் ஆண்டு நான் சென்னை சென்றபோது திரையுலகப் பிரமுகர்களான புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர்., ஔவை டி.கே. சண்முகம் ஆகியோருடன் மிக நெருக்கமாக உறவாடும் வாய்ப்பினைப் பெற்றேன். அந்த வாய்ப்பு எவ்வாறு எனக்கு ஏற்பட்டது என்பதற்கு கலைவாணர் அவர்களுடன் நான் பழகிய முறைதான் அடிகோலியது என்பதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன்.



பதுளை நகரில் பகுத்தறிவு இயக்கத்தைச் சேர்ந்த நாங்கள் பலர் முன்னதாகவே சென்று பூர்வாங்க ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்தோம். மட்டக்களப்பு மோர்சாப்பிட்டியைச் சேர்ந்த திரு.சின்னராசா அவர்கள் தான், பதுளையில் கலைவாணர் நாடகத்தை மேடையேற்றுவதற்குரிய செலவுக்காக, தனது வீடு வளவினை அடமானம் வைத்து பணம் வாங்கியிருந்தார். 'சட்டர்டே' கந்தசாமி, ஆரோக்கியநாதன், ஆனந்தராஜா, கலைஞர் குமார் ஆகியோரெல்லாம் பதுளையில் முகாமிட்டிருந்தோம். பதுளையிலுள்ள திராவிட முன்னேற்றக் கழகத்தின் இணைத் தலைவர் இரா. அதிமணி அவர்கள், திரு.எஸ்.பி.சாமி அவர்கள், திரு.தங்கராஜா அவர்கள் போன்ற பலர் எம்முடன் ஒத்துழைத்தனர்.



பதுளையிலுள்ள 'சான்சி ஸ்டுடியோ' நிறுவனத்தின் உரிமையாளர் திரு.ராஜரத்தினம் அவர்களும் எமக்கு உறுதுணை புரிந்தார். அவர் ஒரு செல்வந்தர். கலைவாணர் அவர்களை ஏற்றிக் கொண்டு வருவதற்கு அவருடைய விலையுயர்ந்த 'பியூக்' காரையே தந்திருந்தார். அவரே இந்த வண்டியைச் செலுத்தும் சாரதியாகவும் அமர்ந்து கொண்டார். அவருடைய விசாலமான இல்லத்திலேயே கலைவாணரும் மதுரம் அம்மையாரும் தங்குவதற்கான ஏற்பாடுகளும் செய்திருந்தோம்.

பதுளைப் பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த திரு.சுப்பையா அவர்களும் அவருடைய மனைவி திருமதி.கோகிலம் சுப்பையா அவர்களும் எங்களுக்குப் பூரண ஒத்துழைப்புத் தந்தனர். இவர்களுடைய ஒத்தாசையும் பதுளையிலுள்ள சில அரசாங்க அதிகாரிகளினது ஒத்தாசையும் இல்லாவிட்டால் அந்த நகரில் செல்வாக்குப் பெற்ற சைவ மகா சபையினருடன் நின்று பிடிக்க எங்களால் முடியாமல் போயிருக்கும்.

இக்காலகட்டத்தில் முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த அமரர் சாம் தம்பிமுத்து அவர்களும் எங்களுடன் வந்திணைந்து கொண்டார்.

குறிப்பிட்ட தினத்தன்றிரவு நாவலப்பிட்டி நகரில் நாடகம் முடிந்ததும், எங்கள் வண்டியில் கலைவாணர் அவர்களும் மதுரம் அம்மையாரும் பின்னிருக்கையில் அமர்ந்து கொண்டனர். நள்ளிரவு கடந்ததும் தலவாக்கலை வாடிவீட்டை வந்தடைந்தோம். அன்றிரவு அங்கு தங்கிவிட்டு காலையில், காலையுணவை முடிக்க மேசையில், கலைவாணர், மதுரம் ஆகிய இருவருடன் நாங்கள் இருவரும் அமர்ந்து கொண்டோம். அப்போது மோசையில் நான்கு பியர் போத்தல்கள் கொண்டு வந்து வைக்கப்பட்டனது. எனது முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்ட கலைவாணர், "என்ன தம்பி! இரவு நாடகத்தில் மதுவிலக்குப் பிரசாரத்தை மும்முரமாக நடத்திய இவன், காலையில் மதுப்போத்தலுடன் அமர்ந்து கொண்டானே, என்று பார்க்கிறீர்களா? மதுவை 'டச் கரேஜ்' என்று கூறுவார்களாம். எங்களைப் போன்றவர்கள் இரவு நேரத்தில் மேடையில் பல்லாயிரக்கணக்கான மக்கள் முன்தோன்றி நடிக்கும் போது எமது உணர்ச்சியெல்லாம் மிக வேகமாக வெளிப்படுகின்றன. இதனால் எங்களுடைய உள்ளமும் உடலும் சோர்வடைகின்றன. இதற்கு செயற்கை ரீதியில் உற்சாகம் புகட்ட வேண்டிய நிர்ப்பந்தம் எங்களுக்கு உண்டு. எனவே தான் போதை அதிகம் கொடுக்காத இந்த பியர் பானத்தை கொஞ்சமாக பயன்படுத்துகிறோம்," என்று கூறிய அவர், மேலும் சொன்னார். "எங்களுக்கு ஓரளவு வாழ்க்கை வசதி இருக்கிறது. அதனால் இந்தப் பானத்தை அருந்துவதற்காக சிறிதளவு பணம் செலவிடலாம். ஆனால் அன்றாட உணவைப் பெறமுடி யாத நிலையிலுள்ளவர்கள் மதுபானம் பாவிப்பதனால் ஏராளமான பொருளை அதற்கே செலவிடுகிறார்கள். தவிர அதற்கே அடிமையாகியும் விடுகிறார்கள். இதனால் அவர்களும் அவர்களை நம்பியிருக்கும் அவர்களுடைய குடும்பத்தினரும் உண்ண உணவின்றி துயரடைகிறார்கள். ஆகவே இவர்களுக்காகவாவது மதுவிலக்கு அவசியம்!" என்று ஒரு குட்டிப் பிரசங்கமே செய்தார்.

திரு.சான்சி ராஜரட்ணம் அவர்கள் வண்டியைச் செலுத்த, முன்னிருக்கையில் நான் அமர்ந்து கொண்டேன். பின்னிருக்கையில் கலைவாணர் அவர்களும் மதுரம் அம்மையார் அவர்களும் அமர்ந்து கொண்டனர்.



வளைந்து நெளிந்து பாம்புபோல் கிடந்த மலையகத்தின் பாதையிலே எங்கள் வண்டி சென்று கொண்டிருந்தது. ஆங்காங்கே நெடிதுயர்ந்த மரங்களும் குட்டையான பச்சைப் பட்டாடை போன்ற தேயிலைச் செடிகளும், தொலைவில் பனிபடர்ந்த மலைகளும், மெல்லிய குளிர் காற்றும் கலைவாணரை பெரிதும் கவர்ந்தன. இயற்கை எழிலை அனுபவித்துக் கொண்டு செல்லும் போது, பலதரப்பட்ட பொது விஷயங்களைப் பற்றியும் கலையுலகைப் பற்றியும் எங்களுக்கிடையே உரையாடல்கள் நிகழ்ந்தன.

## இரா.பத்மநாதன்

கலைவாணர், மதுரம் அம்மையாரை 'அப்பா' என்றுதான் அழைப்பார். மதுரம் அம்மையாரோ கலைவாணரை 'அம்மா' என்று அழைப்பார். இதனால் அவ்விருவரையும் நாங்களிருவரும் எவ்வாறு அழைக்க வேண்டும் என்று எங்களுக்குக் குழப்பமாகவே இருந்தது.

'இந்து நேசன்' பத்திரிகையின் ஆசிரியரான இலட்சுமிகாந்தன் அவர்களை கொலை செய்த குற்றவாளிகளுள் என்.எஸ்.கே.அவர்களும் ஒருவராகக் கணிக்கப்பட்டிருந்தார். அப்போது புகழேணியின் உச்சக் கொப்பிலிருந்த எம்.கே.தியாகராஜபாகவதர் அவர்களும் இதே குற்றச்சாட்டில் சிறைக்கு அனுப்பப்பட்டார்.

தமிழகத்தின் தலைசிறந்த கலைஞர்கள் மக்களனைவரினதும் ஏகோபித்த பாராட்டுக்களைப் பெற்றவர்கள் இத்தகைய இருவரும் சிறையில் வாடுவதா என்ற ஏக்கம் தமிழ் நாட்டில் பலதரப்பட்ட மக்களினதும் நெஞ்சங்களை வாட்டியது.

கலைவாணர் மற்றும் தியாகராஜ பாகவதர் ஆகிய இருவரது வழக்குகளையும் மீளப் பரிசீலணை செய்யுமாறு வேண்டுகோள்கள் விடுக்கப்பட்டன. தலைசிறந்த வக்கீல்களால் தீர்ப்பை எதிர்த்து அப்பீல் செய்யப்பட்டது. பேரறிஞர் அண்ணா ஒரேயிரவில் 'ஓர் இரவு' என்ற நாடகத்தை எழுதி முடித்தார். கலைவாணருடைய என்.எஸ்.கே. நாடகமன்றம் இந்நாடகத்தை தமிழ் நாட்டின் முக்கியமான நகரங்களில் அரங்கேற்றியது.

இந்த நாடகத்தின் மூலம் வசூலிக்கப்பட்ட நிதி அப்பீல் வழக்குக்காக செலவிடப்பட்டது. இரண்டரை வருடங்கள் கலைவாணரும் பாகவதரும் சிறையிலிருந்தனர். பின்னர் விடுதலை செய்யப்பட்டனர். தமிழ்நாடு அவர்கள் இருவரையும் மகிழ்ச்சியுடன் வரவேற்றது.

சிறையிலிருந்து மீண்டதும் கலைவாணர் 'பயித்தியக்காரன்' என்ற படத்தைத் தயாரித்தார். தனது சிறையனுபவங்களை வைத்து ஒரு பாடலும் இப்படத்தில் பாடுகிறார்.

**ஜெயிலுக்குப் போய்வந்த சிரேஷ்டர் மக்களைச்**
**சீர்திருத்துவாங்கோ, சிலர் திண்டாடித்**
**-திரிவாங்கோ-இதைத்**
**தெரிய வைத்ததோர் இரண்டரை வருஷத்தில்**
**-அறிவுக்குப் புரிந்ததுங்க**
**ஆனால் கொஞ்சம் சிரமமுமிருந்ததுங்க**

என்று அப்பாடல் தொடர்கிறது. திரைபடத்தில் கலைவாணர் இப்பாடலை எப்படிப் பாடினாரோ அதே போல் வண்டிக்குள்ளிருந்தவண்ணமே நானும் பாடிக் காட்டினேன். இதனால் அவர்கள் இருவரும் வெகுவாக என்னை பாராட்டினார்கள். **(இன்னும் வரும்)**

# கலை உலகில் கருணாநிதி 06

மருதநாட்டு இளவரசி' படம் உருவாகிக் கொண்டிருக்கும் போதே கருணாநிதிக்கு மார்டன் தியேட்டர்சிலிருந்தும் அழைப்பு வந்தது.

அப்போது கருணாநிதி திருவாரூரில் இருந்தார். தனது 'மந்திரிகுமாரி' நாடகத்தை நடத்தி வந்தார். இந்த நாடகம் வெற்றிகரமாக தேவி நாடக சபாவினரால் நடத்தப்படுவதைக் கண்ட கவிஞர் கா.மு. ஷெரீப்-அப்போது இவர் மார்டன் தியேட்டர்சில் பாடலாசிரியராக மாத சம்பளத்திற்கு பணியாற்றி வந்தார். மார்டன் தியேட்டர்ஸ் அதிபர் டி.ஆர்.சுந்தரத்திடம் 'மந்திரிகுமாரி' பற்றி சொல்ல, சுந்தரமும், கருணாநிதியை அழைத்து வரும்படி கா.மு.ஷெரீப்பிடம் சொன்னார்.

கா.மு.ஷெரீப், திருவாரூர் வந்து கருணாநிதியை சந்தித்து மார்டன் தியேட்டர்சுக்கு அழைத்துச் சென்றார். 'மந்திரிகுமாரி'யும் படமாக்கப்பட்டது.

ஆனால், கருணாநிதி அங்கே வேறொரு வகையில் மனப்புழுக்கத்திற்கு ஆளானார். அதனால், பாதிப்படத்தோடு கோபித்துக் கொண்டு ஊருக்கு கிளம்பினார். தேவி நாடக சபையினருக்கு கருணாநிதி எழுதிக் கொணடுத்த 'மந்திரிகுமாரி' நாடகம்-வெற்றிகரமாக பல ஊர்களில் ஒடியிருக்கிறது.

அப்போது புதுக்கோட்டையிலிருந்து வெளிவந்த இலக்கிய ஏடான, 'பொன்னி' இதழ், 'மந்திரிகுமாரி' நாடகம் பற்றி வெளியிட்டுள்ள விமர்சனம் இதோ:

'தோழர், மு.கருணாநிதி அவர்களின் நாடகம், 'மந்திகுமாரி!' இதனைப் பொன்னமராவதி நித்தியானந்த விலாஸில் தேவி நாடக சபையினர் தினசரி நாடகமாக நடத்தி வருகிறார்கள். பழந்தமிழ் நாட்டு வரலாற்று இலக்கியமாகிய குண்டலகேசியே இந்நாடகத்துக்கு ஆதாரமாகக் கொள்ளப்பட்டிருக்கிறது. கொள்ளைக் கூட்டத் தலைவன் பார்த்திபனும், தளபதியும் நன்கு நடிக்கின்றனர். "சுருக்கு சொற்புலவர் ஐராவதமும், சித்திர புத்தனாரும், கற்பகம் என்ற தோழிப் பெண்ணும் நகைச்சுவை விருந்தளிக்கின்றனர். உரையாடல் எண்ணி வியக்கும் முறையில், சிந்தனைக்கு வேலைதரும் வகையில் எழுதப்பட்டுள்ளது.

'பார்த்திபன்', 'கொள்ளையடிப்பதும் ஒரு கலையே!' என்று விளக்கும் பகுதி அருமையானது. சீன்களும், ஆடையணிகளும் மிகச் சிறப்பாக அமைந்திருக்கின்றன. இவ்வாறான வசனங்களை மக்கள் வரவேற்று மக்களின் அறியாமை இருளைப் போக்க வேண்டுமென்பது என் ஆசை."

-ஆ.பழ.குமரப்பன்.

இந்த நாடகத்திற்கு வசனம் எழுதும் கருணாநிதிக்கு இருபத்தி மூன்று வயதுதான். அப்போதே இவரது உரையாடல், தனித்துவமாக அடையாளம் காணப்பட்டு, பாராட்டப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க விஷயம் தான்.

இப்படி வெற்றி பெற்ற நாடகத்தை மார்டன் தியேட்டர்ஸ் சுந்தரம் வாங்கி படமாக்கத் தொடங்கியதும், படத்திற்கு வசனம் எழுதச் சென்ற கருணாநிதிக்கு அவமானம் நேர்ந்ததாகவும் சென்ற இதழில் குறிப்பிட்டேன் அல்லவா?



நடந்தது என்ன...?

'மந்திரிகுமாரி' படத்தில் உதவி இயக்குனராக பணிபுரிந்த டைரக்டர் கே.சோமு, (பின்னாளில் சம்பூர்ண ராமாயணம் உள்ளிட்ட பல படங்களை டைரக்ட் செய்து பிரபலமானவர்.) ஒரு கட்டுரையில் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

'மந்திரிகுமாரி'யில் கருணாநிதியின் வசனங்களை மொழி பெயர்த்து (ஆங்கிலத்தில்) அமெரிக்க டைரக்டர் எல்லிஸ் ஆர்.டங்கனுக்குக் கொடுக்க வேண்டியது உதவி டைரக்டராகிய என்னுடைய பொறுப்பு.

'வருக! வருக! வசந்த காலத்து இளந் தென்றலே வருக!' என்று எழுதி இருந்தார். அதை நான் ஆங்கிலத்தில் எழுத பட்டபாடு எனக்குத்தான் தெரியும்.

'அவர் எழுதிய வசனங்களை அப்படியே படம் பிடித்து விட்டோம். போட்டுப் பார்த்த போது யாருமே நிம்மதியாக உட்கார்ந்து பார்க்க முடியாது என்ற முடிவுக்கு வந்தோம். அவ்வளவு பரபரப்பாக இருந்தது. மிகவும் சிரமப்பட்டு படத்தை மெதுவாக போகச் செய்ய இரண்டு பாடல்கள், நகைச்சுவைக் காட்சிகள் சேர்த்தோம். அப்படியும் தான் வேகம் போதுமான அளவு குறையவில்லை.

'கருணாநிதியின் வசனங்களும், நகைச்சுவைக் காட்சிகளும், யுக்திகளும், அரசியலைத் தாக்காமல் தாக்கும் எழுத்தோவியங்களும் அவருக்கே உரித்தானது. அதை அந்த அமெரிக்க இயக்குநர் அன்றே உணர்ந்திருந்தார்.

'அவர் திறமைக்கும் ஆபத்து வந்தது. ஒரு நாள் விடியற்காலை சுமார் நான்கு மணி இருக்கும். பெரமனூரிலுள்ள (சேலம்) எனது சிறிய வாடகை வீட்டில் அன்று அபூர் வமாக ஒய்வாக படுத்திருந்தேன். திண் ணையில் யாரோ கதவைத் தட்டுவது போல் இருந்தது. காற்றாக இருக்கும் என்றுசும்மா இருந்தேன். மறுபடியும் தகவு அசைந்தது. எழுந்து சென்று கதவைத் திறந்தேன். கரு ணாநிதி கண்ணீருடன் நின்றார்!

'என்ன...? என்ன...?' என்று நான் துடித்தேன். கருணாநிதியோ அமைதியாகப் பேசினார்: 'சோமு சார்... என்னைக் காலை ரயிலுக்கு அனுப்பிவிடுங்கள்,' என்றார்.

'மிகவும் வற்புறுத்தி தொந்தரவு செய்து கேட்ட பின்னர் விவரமறிந்தேன். இவர் எழுத்தையெல்லாம் 'மார்டன் தியேட்டரில்' உள்ள ஒருவர், சிதைத்தும், குறைத்தும் டீ.ஆர்.எஸ்.சிடம் கொடுப்பதாகக் கூறி, அந்த வேதனையைத் தாங்க முடியாத கருணாநிதி, ஊருக்குச் சென்று விடுவதாக முடிவு செய்துவிட்டார்.

'பேசாமல் படுங்கள் என்று கொஞ்சம் தள்ளிப் படுத்தேன். என் ஜமக்காளமும் தலையணையும் அவருக்கு இடம் கொடுத்தன.

'எப்போது விடியும் என்று காத்திருந்தேன்.

'என் மனைவி அளித்த இட்லியும், சட்னியும் எங்களுக்குத் தெம்பூட்டின. நேராக, 'மார்டன் தியேட்டர்ஸ்' மானேஜர் எம்.ஏ. வேணுவிடம் சென்றேன். மூவருமாக அந்தக் காலை நேரததில் ஸ்டூடியோவுக்குச் சென்று டி.ஆர்.எஸ்.ஐச் சந்தித்தோம்.

'விளைவு?'

'அன்றிலிருந்து கருணாநிதியும் நானும் தினமும் வசனங்களுடன் டி.ஆர்.எஸ்.ஐ நேரில் சந்தித்துப் படித்துக் காண்பித்த பின், அவர் அனுமதியின் பேரில் மொழி

## ஆர்.சி.சம்பத்


பெயர்த்து டங்கனுக்குக் கொடுக்க ஏற்பாடாயிற்று.'

'மருதநாட்டு இளவரசி' படத்தில் தனக்கு வசனம் எழுத வாய்ப்பு வாங்கிக் கொடுத்த எம்.ஜி.ஆரே. மார்டன் தியேட்டர்ஸின் 'மந்திரிகுமாரி'யிலும் நடித்தால், தனக்கு மிகவும் ஒத்துழைப்பாக இருக்கும் என்று நினைத்தார் கருணாநிதி.

*(வருவார்)*

அத்தானின் மடலைப்படித்து முடித்தபோது, விழிகளில் இருந்து இரு சொட்டு கண்ணீர்த் துளிகள் கையிலிருந்த மடலில் வீழ்ந்து தெறித்தன. பிரிவு எத்தனை கொடியது என்பதை இப்போதுதான் புரிந்து கொண்டேன். மன ஆதங்கத்தையெல்லாம் பதில் மடலாய் வரைந்தனுப்ப முடிவெடுத்து பேப்பரையும் பேனாவையும் எடுத்தேன்.

# அத்தான்



## ஆரையம்பதி பூ.இதயரெத்தினம்

அன்புள்ள அத்தானுக்கு!

உங்கள் கலா எழுதும் அன்பு மடல் இது. நீங்கள் அனுப்பிய இனிய மடல் கண்டு இதயம் மகிழவில்லை. தாங்கொண்ணாத கவலையைத்தான் தந்தது உங்கள் மடல். என்னைப்பிரிந்து ஃபிரான்ஸ் போவதற்கு உங்களுக்கு எப்படி மனம் வந்தது என எண்ணிப்பார்க்கிறேன். பாழாய்ப் போன இந்தப் போர்தானே நம்மைப்பிரித்தது. சின்ன வயது முதல் நாம் ஒன்றாக சுற்றித்திரிந்த அந்த பசுமை நினைவுகள் என்னை வதைக்கின்றது. நீங்கள் விமானம் ஏறிய நாளன்று என்னால் சாப்பிடவே முடியவில்லை. ஒரே அழுகைதான். நாம் ஆட்டோ பிடித்து மண்டூர் போனதிலிருந்து கதிர்காமம் போய் மாணிக்ககங்கையில் நீராடியது வரை நீங்காத நினைவுகளாக மனத்திரையில் மறையாமல் இருக்கிறது. என். பிறந்த நாளை மறக்காமல் புத்தாடை தந்து வாழ்த்துச் சொல்லுவீர்களே அதை எப்படி மறப்பேன். நீங்கள் என்னைவிடவும் ஐந்து வயது கூடியவராக இருந்தும் நான் உங்களை "டேய்!" என்று கூடக் கூப்பிட்டிருக்கிறேன். அப்போதெல்லாம் நீங்கள் செல்லமாகக் கோபித்துக் கொண்டபோதுதானே 'அத்தான்' என்று கூப்பிட ஆரம்பித்தேன். என்னை விட்டு நீங்கள் எவ்வளவு தூரம் போனாலும் என் மாமி மகன் என்ற உறவை விட்டுக்கொடுக்க மாட்டேன்.

பரீட்சைக்கென்று பணம் வாங்கி பள்ளிக்குப் போவதாக வீட்டாரிடம் பொய் சொல்லி படம் பார்க்க என்னை சாந்தித் தியேட்டருக்கு அழைத்து போனது ஞாபகம் வருகிறது. இனிமேல் நாம் வாழ்வில் சந்தித்துக் கொள்வோமா என்பது சந்தேகமே. ஒரு கூட்டுக்கிளியாக இருந்த நாம் திசைமாறிய பறவைகளாகிவிட்டோம். என்ன செய்வது நம் விதி அப்படி அமைந்துவிட்டது. அத்தான் தொடர்ந்து எழுதமுடியவில்லை துயரம் நெஞ்சை அடைக்கிறது. விடை பெறுகிறேன்.

**அன்புடன்,**
**உங்கள் மச்சான்,**
**கலாதேவன்.**

# பதிவுத் திருமணம்

## கட்டாரிலிருந்து பூண்டுலோயா மெய்யன் நட்ராஜ்

சூரியன் கடலில் குளிக்கும் மாலைப் பொழுது. கடல் அழகைப் பற்றி காவ்யாவிடம் கவிதையில் புளுகிக்கொண்டிருந்தான் விவேக். அவனின் பொய்யில் மயங்கிக் கிடந்த காவ்யா பொழுது சாய்ந்து விட்டதால் வீட்டுக்குப் போக அவசரப் படுத்தினாள். "இன்னும் ஒரு பத்து நிமிசம் இருந்திட்டுப் போவோம் காவ்யா!"

"ம் ஹூம் என்னால் இயலாது இப்போதே ஆறுமணிக்கு மேலாகிடிச்சு. இதுக்கே வீட்டிலே திட்டு கிடைக்கும். இதுக்கு மேல நின்னுட்டு போனா அவ்வளவுதான். கூடிய சீக்கிரமே கல்யாணத்துக்கான வழியை பாருங்க, நான் வேணுமின்னா பிறகு விடிய விடிய இந்த பீச்சிலே உங்களோடு உட்கார்ந்துகிட்டு இருக்கேன்!" கூறிவிட்டு ஹேண்ட் பேக்கை மாட்டிக் கொண்டு புறப்பட்டு விட்டாள். அவளை பஸ்ஸேற்றி அனுப்பி வைத்து விட்டு நடந்து வந்த விவேக், அவள் கல்யாணம் என்ற வார்த்தையை உபயோகித்ததை கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தான். ஏ.எல். முடித்து நான்கு வருடங்களாகிறது. எத்தனையோ வேலைக்கு விண்ணப்பம் எழுதிப்போட்டு நேர்முக பரீட்சைகளுக்கும் போய் வந்தாச்சு. ஆனால் போகும் இடங்களில் எல்லாமே சிபாரிசிற்கும், லஞ்சத்திற்கும் வேலைகள் விற்பனையாகிப் போவதால் இவனது திறமைக்கு இருட்டடிப்புத்தான். இந்நிலையில் கல்யாணம், எண்ணிப்பார்க்கவே சிரமமாக இருந்தது. இருந்தாலும் ஏதேனும் ஒரு தொழில் கிடைக்காமலா போகப் போகிறது என்ற நம்பிக்கையோடு அன்றைய பத்திரிகையில் வெளிவந்த அரசாங்கப் பதிவாளர் பதவிக்கான விண்ணப்பத்தை எழுதி உடனடியாக அஞ்சல் செய்து விட்டு அவனும் வீட்டிற்குப் போனான்.

அடுத்த வாரம் காவ்யாவை வழமை போல் சந்தித்தபோதுதான் அவள் அந்தக் குண்டைத்தூக்கிப் போட்டாள்.

"எனக்கு வீட்டிலே மாப்பிள்ளை தேடுறாங்க. அவங்க பேசிக் கொள்வதைப் பார்த்தா சீக்கிரமே எவனோ என்னை பெண்பார்க்க வருவான் போலிருக்கு. விவேக் சீக்கிரம் ஒரு முடிவு எடுங்க. நீங்க என்ன செய்வீங்களோ எனக்குத் தெரியாது. அடுத்தவாரம் என்னை சந்திக்க வரும் போது நல்ல செய்தியா சொல்வீங்கண்ணு எதிர்பார்க்கிறேன்!" என்று திட்டவட்டமாகக் கூறிவிட்டுப் போனாள். விவேக்கிற்கு என்ன செய்வதென்றே தெரியவில்லை. சிலந்தி வலையில் சிக்கிக்கொண்ட பட்டாம் பூச்சியாய் அவன் மனது படபடக்கத் தொடங்கியது. மனக்குழப்பத்தோடு வீட்டிற்குச் சென்றான்.

மறுநாட்காலை தபால்காரனின் மணிச் சத்தம் அவன் வாசலில் கேட்டது. காவ்யாவின் கடிதம் வந்திருக்கும் என்று ஓடிப்போய் வாங்கினான். அது காவ்யாவின் கடிதம் அல்ல. உடைத்துப் பார்த்தான். அது அவன் அரசாங்க பதிவாளர் பதவிக்காக விண்ணப்பித்திருந்ததற்கான பதில். நேர்முகத் தேர்வுக்கு வரச்சொல்லி இருந்தது. 'கடவுளே... இந்த வேலையாவது எனக்கு கிடைக்கணும். இதில்தான் என்னுடைய வாழ்க்கையே இருக்கிறது!' என்று கடவுளை மன்றாடிக் கொண்டான். குறிப்பிட்ட தினத்தில் நேர்முகப் பரீட்சைக்குப் போனான். கடவுள் அவன் வேண்டுதலை நிராகரிக்கவில்லை.

சில நாட்களில் தொழில் பயிற்சிக்கான அழைப்பு வர அதை காவ்யாவோடு பகிர்ந்து சந்தோசப்பட்டுக் கொண்டு பயிற்சிக்குச் சென்றான்.

ஒரு ஆறு மாதத்தின் பின் நிரந்தர நியமனம் பெற்று நகரில் அமைந்திருக்கும் விவாகப் பதிவாளர் அலுவலகத்தில் விவாகப் பதிவாளர் பதவியில் அமரும் பாக்கியம் அவனுக்கு கிடைத்தது. எல்லோர்க்கும் வாய்க்காத வாய்ப்பு. ஓர் ஆணையும் பெண்ணையும் சட்டரீதியாக திருமணம் செய்துவைக்கும் வித்தியாசமான தொழில். அவனது வீட்டில் எல்லோரும் சந்தோசப்பட்டார்கள். அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட திருமணப் பதிவாளனாய் முதன் முதலாக அன்று தொழிலுக்குப் போகப் புறப்பட்டான். காலையிலேயே கோயிலுக்குச் சென்று பூஜை செய்து விட்டுத் திரும்பி இருந்தான் என்பதற்கு அடையாளமாக அவன் நெற்றியின் திருநீறு ஜொலித்தது. ஃபைல், பேனை மற்றும் இதர பொருட்களையும் எடுத்துக் கொண்டு "அம்மா அம்மா...!" என்று அம்மாவையும் அழைத்தான். "இதோ வந்துட்டன்!" என்றவாறு அப்பாவையும் அழைத்துக் கொண்டு அவன் முன் நிற்க இருவர் கால்களிலும் விழுந்து ஆசீர்வாதம் பெற்றுக் கொண்டு வெளியேறினான்.

அலுவலகத்தில் தனது ஆசனத்தில் அமர்ந்து கொண்டபோது மனசு இறக்கைக் கட்டிப் பறந்தது. வாழ்வில் முதன் முதலாக தொழில் செய்யப்போகும் ஆனந்தம் கூத்தாடியது. மறுபுறம் இதுவரை சந்திக்காத இருவரை மணவாழ்க்கையில் இணைக்கப் போகும் உன்னதமான தொழிலை எண்ணி ஓர் இனம் புரியாத பதற்றம் "யார் யார் முதலில் வரப்போகிறார்களோ? கடவுளே ஓடிப் போகின்ற ஜோடிகளாய் யாரும் வராமல், பெற்றோர்களால் நிச்சயிக்கப்பட்டு திருமணம் செய்து கொண்ட ஜோடிகளாய் வந்தால் நல்லது!" என்று மனதுக்குள் நினைத்துக் கொண்டான். சிறிது நேரத்தில் அங்கு வந்த அவனது உதவியாளர் "சார் இன்றைக்கு பத்து மணிக்கு பதிவு திருமணத்திற்கு ஒரு குடும்பம் வாரதா நேற்று வந்து சொல்லிட்டுப் போயிருக்காங்க. வேறுயாரும் வரவில்லை. திடீர்னு வேறுயாரும் வந்திட்டா அவங்களை இந்த திருமணத்தை நடத்தி முடிச்சப்புறம் பார்த்துக் கொள்ளுங்க. நேரம் சொல்லிட்டுப் போயிருக்காங்க. சரியான நேரத்துக்கு வருவாங்க. அந்த சமயத்திலே நீங்க வேறுயாரையும் கவனித்துக் கொண்டிருந்தா சங்கடப்படுவாங்க. முதல் நாள் அதுவுமா நீங்கள் தடுமாறிடக் கூடாதுன்னுதான்...." என்று அந்த விசயத்தை காதில் போட்டு வைத்தான். அவன் எதிர்பார்த்தது போலவே குடும்பத்தோடு ஒரு ஜோடி வருவதை எண்ணி சந்தோசப்பட்டவாறு "சரி சரி... நான் பார்த்துக்கிறேன்!" என்று உதவியாளரை அனுப்பி வைத்தான்.

அவன் போனதும் அவனுக்கு காவ்யாவின் நினைவு வந்தது 'ச்சே இந்த ஒரு மாதமாய் காவ்யாவை சந்திக்க முடியாமல் போய்விட்டதே! எப்படியாவது இந்த வார இறுதியில் காவ்யாவை சந்தித்து வேலை கிடைத்த விசயத்தைச் சொல்லவேண்டும். கூடிய சீக்கிரமே இதே அலுவலகத்தில் நானும் அவளும் சட்டப்படி கணவன் மனைவியாவோம் என்றும் அவளைச் சந்தோசப்படுத்த வேண்டும்' என எண்ணிக் கொண்டிருக்கும் போதே அன்றைய பதிவுத் திருமணத்திற்கான அந்த குடும்பத்தினர் வந்து சேர்ந்தனர். கூட்டத்தைப் பார்த்ததும் மேலும் படபடப்பு அதிகரிக்கத் தொடங்கியது. வந்தவர்களை அமரச் சொல்லிவிட்டு மணமக்களை தனக்கு முன்பாக வந்து அமரும்படி கேட்டான். அவர்களும் இவனுக்கு வணக்கம் சொல்லி ஆளுக்கொரு நாற்காலியில் அமர்ந்து கொண்டதும், பதிவுத் திருமண இடாப்பை எடுத்து இருவரின் பெயர் விலாசம், மற்றும் இதரத்தகவல்களையும் எழுதினான். முதன் முதலாக ஒரு பதிவுத் திருமணம் அவனால் நடத்தப்படுவதால் மிகவும் பதற்றப்பட்டு எழுதியதில் அழகான அவனது கையெழுத்தும் கூட கோணல் மாணலாகப்போனது. விவேக்கின் பதற்றத்தைக் கவனித்த ஒரு பெரியவர் "என்ன சார் ரொம்ப பதற்றமா இருக்கீங்க போலிருக்கே?" என்றதும் மற்றொருவர், "சார் புதுசு. இன்றைக்குத்தான் முதன் முதலா பதிவு திருணம் செய்து வைக்கிறார் அதுதான்...".

"ஓ.... அப்படியா! பயப்படாம நிதானமா எழுதுங்க எல்லாம் நல்லபடியா நடக்கும்!" என்று சொல்ல அந்த உற்சாகத்தில் ஒருவாறு எழுதி முடித்தான். பின்னர் மணமக்களின் கையொப்பத்தையும், சாட்சிக் கையொப்பத்தையும் வாங்கிக் கொண்டு அதிகாரியின் கையொப்பத்தை இவன் இட்டுவைத்தான். பின்னர் மணமக்களை எழுந்து மாலை அணிவிக்கச் செய்தான். அத்தோடு நில்லாமல்,

"மணவாழ்க்கைத் தோற்றில் தினம்நீந்தி
மகிழ்வென்னுங் கரைகாண இனிய
குணங்கொண்ட இளஞ்ஜோடி மனம்ரெண்டும்
குறைவில்லா அன்பாலே நித்தம்
இணைந்தன்புக் கவிபாடி கீழ்வானில்
எழுகின்றச் சுடராக வேண்டும்.

எழில் கொண்ட மலராக எந்நாளும்
இல்லறத்தை அழகாக்கிக் கொண்டு
பொழிபோன்று நறுமணத்தை சொரிகின்ற
புதுவாழ்க்கை பூங்கன்று நன்று
செழிக்கட்டும் வளமோடு என நாளும்
சிறப்போடு வாழ்த்துகின்றேனே!"

என யாரும் எதிர்பாராமல் இருந்த போது கவிதையில் வாழ்த்தி மணமக்களின் கரங்களை இணைத்து வைத்தான். அவ்வேளை அங்கே ஆனந்தமழை அடித்தது. அதன் பின்னர் சில நிமிடங்களில் அவர்கள் கலைந்து போனார்கள். அவர்கள் போனதும் பதிவுத்திருமண இடாப்பை திறந்து அன்று அங்கு நடந்ததெல்லாம் உண்மைதானா என்று பார்க்கிறான். அப்போது அதுவரை அடங்கிக் கொண்டிருந்த அவனது கண்ணீர்த் துளிகள் கசிந்து இடாப்பை நனைத்தது. அதில் மணமகள் பெயர் அழிந்து போனது. அழிந்தது அது மாத்திரம் அல்ல, அவனது காதலும் தான்! அங்கு நடந்தது. அவன் நடத்திவைத்தது. அவன் காதலி. காவ்யாவின் கல்யாணத்தைத்தானே!



# எல்லைக் கோடு



## அல்வையூர் காந்தி அருணாசலம்-கனடா

என்னை நீங்கள் ஞாபகம் வைச்சிருக்கிறியளோ, என்னவோ? என்ரை அப்பு, ஆத்தை எனக்கு வைச்ச பேர் மீனாட்சி. கண்ணை மூடி முழிக்க முந்தி வயசும் எழுபத்தெட்டு முடிஞ்சு போச்சு. என்ரை தோற்றத்தையும் வயசையும் பாத்திட்டு நாவூறு படுத்திப் போடாதேங்கோ மோனை. நாவூறு பொல்லாத சாமான்.

என்ரை மனுசன் நாலு வரியம் முந்திப் போய்ச் சேந்திட்டார். இல்லாட்டில் இன்னும் இளமையா, இவள் அந்தக் கால நடிகை ராஜகுமாரி இருக்கிறாளே அவளைப் போல இருப்பன். உங்களுக்குச் சொன்னாப் போலை என்ன-இவர் என்ரை மனுசனைத் தான் சொல்லுறன்-நெடுகச் சொல்லுவார், ஹி... ஹி.... என்ரை கண் சரியா அந்த ராஜகுமாரியின்ரை கண்ணைப் போல ஒரு வசியமான கண்ணெண்டு. அதெல்லாம் இப்ப என்னத்துக்கு, உம்..... அவரும் போய்ச் சேந்திட்டார்.

இப்ப நான் கனடாவிலை என்ரை இளையவனோடை இருக்கிறன். நேற்றுத்தான் இஞ்சை புது வீடு ஒண்டு வாங்கிக் குடி புகுந்தனாங்கள். கனடாவிலை முழுக்காசும் ஒண்டாக் குடுத்துத்தான் வீடு வாங்கோணும் எண்டில்லை. முதல் கொஞ்சத்தைக் கட்டிப் போட்டு மற்றதுக்குப் பொடியன் வங்கியிலை கடன் எடுத்திருக்கிறான். அதை மாதாமாதம் மோற்கேஜோ என்ன இழவோ, சொல்லுதுகள் அப்படிக் கட்டி கடனை அடைக்கலாமாம்.

ஆனால் ஒண்டு பொடியனும், மருமோளும் இனி ஓய்வு ஒழிச்சல் இல்லாமல் உழைச்சால் தான் கடன் துலையும். கொஞ்ச நஞ்சக் காலத்துக்கு எண்டு நினைக்கிறியளோ? பதினைஞ்சு, இருவது வரியம் செல்லுமாம். அம்மாடியோவ்? நான் அதுக்கிடையிலை இவரட்டைப் போய்ச் சேந்திடுவன்.

அந்தக் காலத்திலை அல்வாயிலை எனக்குப் பெரிய வீடு வளவு. உப்பிடி மாதம் மாதம் காசு கட்டிற விளையாட்டொண்டும் அங்கை இல்லைத் தானே? சுளையாக் காசைக் கொடுத்து என்ரை அப்பு வேண்டி எனக்குச் சீதனமாத் தந்தவர். வீடு வேண்டினது சின்னப் பிரச்சனை ஆனால் எங்களுக்கும் பின் வீட்டுக்காறருக்கும் இடையே நடந்த எல்லைப் பிரச்சனை இருக்கே, அது ஒரு பெரீ...ரீ...ரீ..ய கதை. கோர்ட்டு, கேசு எண்டு அலைஞ்ச அலைச்சல் சொல்லி மாளாது. சொன்னால் சிரிப்பியள்-இத்தனைக்கும் பின் வளவு ஆற்றை எண்டு நினைக்கிறியள்? என்ரை அப்புவின்ரை சொந்தச் சகோதரியின்ரை வீடு.

அப்புவும்-அவற்றை தங்கச்சி அது தான் என்ரை மாமி மாமாவும் சாகும் மட்டும் உந்த எல்லைப் பிரச்சனையாலை முகம் பாக்கிறதுமில்லை, கதைக்கிறதுமில்லை எண்டால் பாருங்கோவன். அட கனக்க என்னத்துக்கு?

என்ரை அப்பு சாகேக்கை ரெண்டு, மூண்டு நாள் அடக்கத்திலை கிடந்தவர் ஊராக்கள் பேசிச்சினமோ, இல்லாட்டில் மாமிக்குத் தான் மனம் கேக்கேல்லையோ தெரியேல்லை. மாமி வந்து எட்டிப் பாத்தவ. அட சொன்னால் நம்பமாட்டியள், உந்த அல்வாய் அம்மாளாணை நான் பொய் சொல்லேல்லை. கண் திறக்காமல் கிடந்த அப்பு திடீரெண்டு கண்ணை முழிச்சு மாமியை 'ஏன் வந்தனீ' எண்ட மாதிரி முறைச்சு ஒரு பார்வை பார்த்தார் அதோடை மாமி அழுது கொண்டு போனவ தான். பிறகு செத்த வீட்டுக்கும் வரல்லை.

ஒவ்வொரு வரியமும் வேலி அடைக்க வெளிக்கிட்டால் மாமா அலவாங்கு, கோடாலியோடை வந்து நிண்டு மறிச்சுப் போடுவார். அப்பு சத்தம் போட, ஊரிலை நாலு பெரியவை சத்தம் போட்டு வந்து சமாதானப்படுத்தப் பாப்பினம். சில வேளையிலை நாலுமுழத்தை வரிஞ்சு கட்டிக் கொண்டு அப்புவும் மாமாவும் கைகலப்புத் தொடங்கியிடுவினம். என்ன? அப்பு என்னைப் போலக் கொஞ்சம் நோஞ்சான் உடம்பு. ஒரு நாள் ஒரு தள்ளளிலை பொத்தெண்டு விழுந்து போனார். கல்லிலை தலைபட்டு ஓடின இரத்தத்தைப் பார்க்கோணும். கண்ணை மூடிக்கொண்டு நானும் அழ, ஆத்தையும் ஒப்பாரி வைக்கத் தொடங்கியிட்டா, மாமியும் கண்ணைக் கசக்கிக் கொண்டு வேலிக்கு மேலாலை எட்டிப் பாத்தா. பிடுங்கின வேலிப்பக்கத்தாலை உள்ளுக்கு வரப் பாக்க மாமா இழுத்துக் கொண்டு போட்டார்.


இதோடை பிரச்சனை முடிஞ்சு போச்சு எண்டே நினைக்கிறியள்? அப்பு உடனை வழக்குப் போட்டு, அது அஞ்சாறு வரியமா இழுபட்டு... ஐயோ, அது பெரிய கதை. வழி தெருவிலை மாமா, மாமி, மச்சாள் மாரைக் கண்டாலும் நானும் காணாத மாதிரிப் போடுவன், அவையும் முகத்தை நீட்டிக் கொண்டு வேற பக்கம் பாப்பினம். இப்ப எங்கடை நாட்டிலை சண்டை எண்டு வந்து இந்த எல்லைப் பிரச்சனை கொஞ்சம் குறைஞ்சிட்டுது, பாத்தியளே? எங்கடை குடும்பமும் கனடாவுக்கு வந்து, மாமா வீட்டாரும்-பழசுகள் போய் சேர மற்றதுகள் ஜேர்மனுக்கு வந்திட்டுதுகள். இந்த விடுமுறைக்கு கனடாவைச் சுத்திப் பாக்க எண்டு அந்த மாமாவின்ரை மோள்-அது தான் என்ரை மச்சாளும் பொடியளும் இஞ்சை வந்து ஒரு மாதமா எங்கடை வீட்டைதான் நிண்டவை.

கதையோடை கதையா மச்சாள் கேட்டா, "என்ன மச்சாள், உங்கடை வீட்டை இப்ப ஆரிருக்கினம்? எங்கடை அல்வாய் வீட்டிலை இடம் பெயர்ந்த அகதிகள் இருக்குதுகளாம்," எண்டு, நான் சொன்னன், "எங்கடை வீட்டையும் ஆரோ ஊர் பேர் தெரியாததுகள் தான் இருக்குதுகள். அதுக்கென்ன, ஆரெண்டாலும் இருக்கட்டன். சனம் இருந்தால் வீடு வளவைக் கூட்டிப் பெருக்கித் துப்பரவா எண்டாலும் வைச்சிருக்குங்கள். சாகேக்கை என்ன மச்சாள் இந்த மண்ணைக் கொண்டா போகப் போறம்? ஆரெண்டாலும் படுத்தெழும்பட்டன்." எண்டு நான் உப்பிடிச் சொல்லேக்கை மாமா அப்புவைத் தள்ளுறதும் அப்பு இரத்தம் ஓட மல்லாக்கா விழுந்து கிடந்ததும் திரைப்படம் பாத்த மாதிரி கண்ணுக்கை ஓடுது.

ஆனால் ஒண்டு சொல்லுறன். முந்தி மாதிரியே எங்கடை ஊர் இப்பவும் நல்ல நிலமையிலை இருந்து, நானும் மச்சாளும் அங்கை இருந்தமெண்டால் ரெண்டு பேரும் இப்படித் தத்துவம் பேச மாட்டம்-நாய்கடி, பூனைகடி எண்டு ஒருவருக்கொருவர் அடிச்சுப் பறிச்சுச் சண்டை பிடிச்சுக் கொண்டிருப்பம். ஊராக்கள் சமாதானம் பிடிப்பினம் எங்கட ஊரிலை நாங்கள் அடிபட்டு கோர்ட்டு-கேசு எண்டு இந்த எல்லைக்காகக் குரோதம் வளந்திருக்கும். கனக்க என்னத்துக்கு? ஒரு வயித்துக்கை கிடந்து உருண்டு பிரண்ட சகோதரங்களே இந்த மண்ணுக்காகச் சாகு மட்டும் முகம் பாக்கேல்லையாம், நாங்கள் எந்த மூலைக்கு? இப்ப இந்த மண்ணை என்ன போகேக்கை கொண்டா போகப்போறம்? எண்டு பெருந்தன்மையா கதைக்கிறமே, இந்தப் பரந்த குணம் வாறத்துக்கு எங்களுக்கு ஒரு யுத்தகளம் தேவைப்பட்டிருக்கு, பாத்தியளோ?

எங்கடை குடும்பக் கதையைச் சொல்லி உங்கடை நேரத்தை மினக்கடுத்திப் போட்டன். நேரமுள்ளநேரம் பிறகு சந்திப்பம் மோனை.

# இலக்கிய நயம்



# வாழ்வுக்குத் தேவையான கடமைகள்

**நா**ரில் பூ தொடுத்துக் கொண்டிருந்தாள் கமலி, நெளிந்தும் வளைந்தும் அவள் விரல்கள் புரியும் நாட்டியத்தைப் பார்த்திருந்தான் விஜயன்.

"வாடுவதற்குள் பூ எப்படியெல்லாம் தன்னை அழகுபடுத்திக் கொள்கிறது பார்த்தாயா கமலி?"

விரல்கள் நடம் புரிந்தபடி இருக்க விழிகளால் அவனை ஏறிட்டாள்.

"பூத்தது செடியில் சிரித்தது. உலகைப் பேரழகில் சிலிர்க்க வைத்தது. உதிர்த்த பிறகும் மாலையாகித் தன் ஒப்பற்ற அழகை உலகுக்குத் தருகிறது.... அழகாய் வாழ்ந்து அவனியை இன்புறுத்துகிறது, உன்னைப்போல்!"

"அழகு தவிர வேறு ஒன்றுமில்லையாக்கும் நான்?" பூத்தொடுப்பதை நிறுத்தி அவனைப் பார்த்தாள்.

"ஏய்! அழகாய் இருப்பதே ஒரு பெரும் சேவை இல்லையா? வயிற்றுக்கு உணவு எத்தனை அவசியமோ, அத்தனை அவசியம் மனது நிறைவதற்கும் அழகுக் காட்சிகளால்லவா? அழகே ஒரு பயன்தானே. நீ அழகாயிருக்கிறாய் என்பது, உனக்கு அறிவோ வேறு திறமைகளோ இல்லை என்றாகி விடுமா? ஆணுக்கும் பெண்ணுக்கும் திறமைகளில் வேறுபாடு இருந்தாலும் அவை ஏற்றத் தாழ்வான வேறுபாடுகள் என்று சொல்லமாட்டேன். ஆணாகிய என் பார்வையில், பெண்ணழகு என் மனசை நிறைத்து வாழ்வுக்கு இனிப்பூட்டுவதைச் சொன்னேன்....!"

"எல்லாம் பேச்சில்தானே இருக்கிறது. உலகம் எங்களை அழகுக்காக வர்ணிப்பதற்கப்பால் வேறு மதிப்புகள் எதையும் தருகிறதா? மேனி அழகெல்லாம் இதோ இந்தப் பூவைப் போல வாடிவிட்டால் குப்பைதானே?"

"அதற்காக? இளமையின் அழகு மனதிற்குள் பாய்ச்சும் இன்பத்தையெல்லாம் நிராகரித்துவிட வேண்டுமா கமலி? இதோ உன் மேனி அழகு, தங்கத்தின் பளபளப்பு எப்படி மனதைக் கவருமோ, அப்படிக் கவர்கிறது. நிலவொளியில் மினுங்குகிற கடலலை போல கருமையாய் நெளிகிற உன் கூந்தலில் இருந்து எழும் வாசனை, என்னை இந்த உலகத்திலிருந்து வேற்றுலகிற்கு கடத்திச்சென்று விடுகிறது. என்னை கொத்தி உண்கிற உன் கண்கள், மூங்கிலை ஒத்த உன் தோள்கள், தன் அசைவுகளால் மனதைப் பிசைகிற மயில் போன்ற உன் சாயல்.... எல்லாம் என்னை வேற்று நினைவின்றித் தேற்றி விண்ணவனாக்குவதை நான் வேண்டாம் என்று மறுப்பதா? இந்த அழகெல்லாம் ஒரு நாள் கெட்டுவிடும், மேனியை ஒருநாள் சுட்டுவிடுவார்கள் என்பதற்காக இந்த இளமையும் அழகும் தரும் வாழ்வின்பத்தை நான் இழந்துவிட வேண்டுமா?"

கமலி எழுந்து வந்தாள். அவனை மடியில் சாய்த்து தலையை வருடினாள். நெற்றியில் உதடுகளைப் பதித்தாள். ஆவேசம் கொண்டவளாக அவனை இறுக அணைத்தாள். மேலும் இறுக்க இறுக்க, மூச்சு முட்டுவதை விரும்பினாள்.

"இப்படியே இருந்துவிடுவது இன்பம்தான். ஆனால் மனித வாழ்வுக்கு வேறு கடமைகளும் உண்டல்லவா? உழைத்தல், உழைப்பினால் வரும் பலன்களை எடுத்து நம்மை அண்டியிருப்பவர்களுக்கும் தருதல், எம்மால் முடிந்தவரை பிறர் வாழ்வின் சுமைகளுக்கும், தோள் கொடுத்தல், துன்பம் நீக்குதல் என்று தருமங்கள் பல உண்டல்லவா? தருமத்தினால் பெறும் உள இன்பம் உயர்ந்ததல்லவா?"

அவள் கன்னங்களைக் கரங்களில் ஏந்திய விஜயன், விழிகளுக்குள்ளே ஊடுருவினான். அவள் உள்ளத்தைப் படித்தான். நெஞ்சோடு சேர்த்தணைத்து உச்சந்தலையில் தன் கன்னத்தைச் சாய்த்து உரைக்கலானான்.

"தருமம் செய்வதில் கிடைக்கும் மனமகிழ்வை அறிவேன் கண்ணே! பிறரை மகிழ்ச்சிப்படுத்துவதே தலையாய இன்பம் தரும் செயல் என்பதையும் உணர்ந்திருக்கிறேன். ஆனாலும்..... ஆனாலும்.... இப்போதும் எனக்கு அந்த மன நெகிழ்வே உள்ளது. உன் அழகும் அருகாமையும் தரும் உள்ளக் கிளர்ச்சி.... இதுவும் கூட எனக்கு உச்சபட்சமான இன்பம்தான் என்பதை மறைத்தால் நான் பொய்யன்."

கமலி சிணுங்கினாள். இன்பத்தில் முச்சிரைத்தாள்.

"மகிழ்ச்சி தான். என்றாலும் இதுவே வாழ்க்கைக்குப் போதுமா? நமக்குப் பிள்ளையும் இருக்கிறது. எங்காவது சென்று பொருள் தேட வேண்டாமா? கொஞ்சுவதால் பசி தீர்ந்து போய்விடுமா?"

"மைந்தன் பற்றி ஏன் உனக்கு மனக்கவலை? தன் தோழர்களுடன் வெளியே சென்று விளையாடும் வயது வந்து விட்டது. இனி நம்மிடமிருந்து மெல்ல மெல்ல விலகும் பருவம் அவனுக்கு, பிறக்கும் போது தொப்புள் கொடியை அறுத்தது போல,

தருவது

முழடில்யன்

மற்றுமொரு கண்ணுக்குத் தெரியாத இழை அறுந்துபடும் காலம் வந்துவிட்டது. நம்மேல் பாசம் மட்டுமே இனி அவனுக்கு இருக்கும். நம் நிழலுக்குள் பதுங்கியிருக்க வேண்டிய அவசியம் அவனுக்கில்லை. அவன் தன்னைப் பார்த்துக் கொள்ளும் பக்குவத்தை வளர்த்துக் கொள்வான். தங்கியிருத்தல் எனும் நிலை தாண்டி சுதந்திரமான அன்பு தான் இனி நமக்குள்....."

"சரி. நம்மைப் பார்த்துக் கொள்ள நாம் பொருள் தேட வேண்டாமா? முதுமைக் காலத்தில் நாம் மட்டும் ஏன் மைந்தரிடம் தங்கியிருக்க வேண்டும்?"

"ம்.... நம்மை நாமே பார்த்துக் கொள்ள வகை காணவேண்டும். அது ஒன்றும் சிரமமானதில்லை. வெளியே சென்று வினையாற்றிப் பொருள் சேர்க்கும் பெருழைப்பு இனி வேண்டாம். இங்கேயே நமது நிலத்தில் வேலை செய்து கிடைப்பதை உண்டு வாழலாம். உழைப்பதும், உன்னைப் பிரியாதிருப்பதும், உகந்த நூல்கள் கற்றுப் பொழுது கழிப்பதும் தான் இனி என் கடமைகள்."

"அதற்கு? என்ன முடிவு செய்துவைத்திருக்கிறீர்கள்?"

"உழைப்பைப் போட வீட்டுத் தோட்டம், அறிவைத் தேட புத்தகத் தோட்டம், எனக்கு உன்னிடம் பெருகும் காதலைக் கொண்டாட வீட்டுக் கூடம்... இதுதான் இனி என் வாழ்க்கை."

அவளை இறுகத் தழுவினான். அவளுக்கென்றேயான பிரத்தியேக வாசனையை மனம் நிறைத்து முகர்ந்தான். பெருமூச்சோடு சொன்னான்:

"எனக்குக் கடலைக் காட்டிலும் உன் காதல் பெரிது. உன்னைப் பிரியாதிருப்பதே என் வாழ்வு! என் தர்மம்!"

பொன்னும் மணியும் / போலும் யாழ நின்
நன்னா மேனியும் / நாறு இருங் கதுப்பும்
போதும் பணையும் / போலும் யாழநின்
மாதர் உண்கணும் / வனப்பின் தோளும்
இவைகாண் தோறும் / அகம்மலிந்து யானும்
அறம் நிலை பெற்றோர் /
அனையேன் அதன்தலை
பொலந்தொடிப் புதல்வனும் /
பொய்தல் கற்றனன்
வினையும் வேறுபுலத்து / இலனே நினையின்
யாதனின் பிரிவாம் மடந்தை
காதல் தானும் கடலினும் பெரிதே!

(நற்றிணை : 166)

# ஸ்போர்ட்ஸ்

## பயிற்சியாளராக விருப்பமில்லை!



**கி**ரிக்கெட் சூதாட்டத்தில் தன்னைச் சம்பந்தப்படுத்தியதால் கடந்த மாதம் இந்திய அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகினார் கபில்தேவ். தற்காலிகமாக அன் சுமன் கெய்க்வாட் பயிற்சியாளராக இருக்கிறார்.

அதன் பின் இந்திய கிரிக்கெட் அணியின் பயிற்சியாளராக நியூஸிலாந்து அணியின் முன்னாள் வீரர் ஜோன் ரைட் மற்றும் அவுஸ்திரேலியாவின் முன்னாள் வீரர்களான ஜெஃப் மார்ஷ் மற்றும் டீன் ஜோன்ஸ் ஆகியோரில் ஒருவரை நியமிக்கவிருப்பதாகத் தகவல்கள் வெளியாகின.


இவர்களில் அவுஸ்திரேலியாவின் ஜெஃப் மார்ஷை நியமிக்கத்தான் பலரும் விருப்பப்பட்டார்கள். காரணம் மார்ஷ் பயிற்சியாளராக இருந்த போது தான் அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணி கடந்த உலகக்கோப்பையைக் கைப்பற்றியது.

ஆனால் மார்ஷ் இந்திய அணிக்குப் பயிற்சியாளராக இருக்க விருப்பமில்லை எனத் தெரிவித்துள்ளார்.

"எனது குடும்பத்துடன் சந்தோஷமாக இருப்பதற்காகத்தான் அவுஸ்திரேலிய அணியின் பயிற்சியாளர் பதவியில் இருந்து விலகினேன். மறுபடியும் பயிற்சியாளராகி எனது குடும்பத்தை விட்டு விலகியிருக்க மனமில்லை!" என்று மார்ஷ் கூறியுள்ளார்.

தற்போது அவுஸ்திரேலிய அணியின் தேர்வுக்குழுவில் இருக்கும் ஜெஃப் மார்ஷ் 3 குழந்தைகளுக்குத் தந்தையாவார். இவர்களில் மூத்தவரான 17 வயது ஷோன் மார்ஷ் மேற்கு அவுஸ்திரேலிய அணியில் இடம்பெற்றுள்ளார். ஷோன் ஒரு சகலதுறை ஆட்டக்காரர் ஆவார்.

## வோவ் சகோதரர்களின் சேவை



**சே**வை செய்வது அவுஸ்திரேலிய அணியின் வோவ் இரட்டையர்களுக்கு இரத்தத்தில் ஊறியதென்றாகிவிட்டது.

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் இந்திய நகரான கல்கத்தாவில் உள்ள 'உதயான்' என்ற குழந்தைகள் இல்லத்துக்குப் பல வழிகளிலும் உதவி செய்தார் ஸ்டீவ் வோவ்.

இப்போது ஸ்டீவ் வோவின் சகோதரர் மார்க் வோவ் 'நிவேதிதா பவன்' என்ற தொண்டு நிறவனத்தின் பராமரிப்பில் உள்ள ஒரு சிறுமியைத் தத்தெடுத்துள்ளார்.

இந்தச் சிறுமியின் பெயர் அலோகா நாயக், 9 வயதான இந்தச் சிறுமி மார்க் வோவை புகைப்படத்தில் மட்டுமே பார்த்திருக்கிறாள்.

"ஸ்டீவ் அங்கிளைப் போல், மார்க் அங்கிளும் இங்கே எப்போ வருவாங்க!" என்று அலோகா கேட்டுக் கொண்டிருப்பதாக நிவேதிதா பவனைச் சேர்ந்த மேரி டீ ரோஸரியோ தெரிவித்துள்ளார்.

## இவர்தான் அவர்



சூர்யா

தவிர்க்க முடியாத காரணங்களால் 'பாப்பா முரசு' இந்த இதழில் இடம்பெறவில்லை. வரும் வாரம் முதல் தொடரும் என்பதை அறியத் தருகிறோம்

-ஆசிரியர்-

# சிந்தியா பதில்கள்

**சிந்தியா! உங்களது திருமணம் காதல் திருமணமா? அல்லது நிச்சயிக்கப்பட்ட திருமணமா?**

பெ.கோகிலன், மேபீல்ட்.

*காதலித்து நிச்சயிக்கப்பட்டது.*

**'பொறுத்தவன் பூமி ஆள்வான்'. இது உண்மையா?**

வீ.மணிராஜா, பசறை.

*ஆள்வதை விட்டுத் தள்ளுங்கள்! பூமியில் வாழவும் வாழவைக்கவும் பொறுத்தல், புத்தி சாலித்தனம் இரண்டும் மிகத் தேவை என்றுதான் இப்போது தோன்றுகிறது. 'பொறுத்தார் பூமியில் வாழ்வார்' என்று அதை மாற்றிக் கொள்ளுங்கள். 'பொங்கினார் காடுறைவார்' என்றுதான் அடுத்தவரி வருகிறதே!*

**சொல்லக் கூடாதது பெண்ணிடம் ரகசியம் என்கிறார்களே ஏன்?**

க.ரவி, லிங்கபுரம்.

*சொல்லி அவஸ்தைப்பட்டுக் கொள்ளத் தக்க அசிங்கங்களெல்லாம் ஆண்களிடம் தான் இருக்கிறது போலும்!*

**நமது நாட்டைப்போன்ற சிறிய ஒரு நாட்டுக்கு இத்தனை அமைச்சர்களும், பிரதி அமைச்சர்களும் தேவைதானா?**

எம்.மங்களகௌரி, கொழும்பு-12.

*ஆளுங்கட்சிக்கும் ஆதரவுக் கட்சிகளுக்குமாக மொத்தம் 116 எம்.பி.க்கள். அமைச்சுப் பதவி கிடைக்காமல் போன மீதி ஏழெட்டு எம்பிமாரைப்பற்றித்தான் என் கவலையெல்லாம்!*

**போகிறபோக்கில் உங்களை பாதுகாப்பு அமைச்சராக நியமித்தால்..... ஒரு வரியில் பதில் சொல்லுங்கள்?**

சுப்ரமணியம் சுதாஹரன், கொட்டகலை.

*வரிகள் விஷயத்தில் சுதந்திரம் இல்லையென்றால் அமைச்சுப் பொறுப்பே எனக்கு வேண்டாம்!*

**அன்பீன் சிந்தியா! ஒருசொல்? (அது முக்கியமானதும், அழுத்தமானதாகவும், சுவையானதாகவும் இருக்கவேண்டும்)**

எ.ஃப்.ரைஸா, கண்டி.

*நான்.*

**இவரைப்போல் வாழவேண்டும் என்று எவரையாவது பார்த்து ஏங்கியதுண்டா?**

மார்க்கண்டு வாணி, கிரான்.

*சே குவேரா, மார்ட்டின் லூதர்கிங், பாரதி மற்றும் சித்தர்களைப் போல எல்லாம் வாழ ஆசையுண்டு. ஆனாலும் என்ன செய்ய? நான் நானாகத்தானே இருக்க முடிகிறது! மு.மேத்தாவின் கவிதை என்று நினைக்கிறேன்! "விழிகள் நட்சத்திரங்களில் இருந்தாலும் விரல்கள் என்னவோ ஜன்னல் கம்பிகளோடு தான்!"*

**ஜெயமோகனின் 'பின்தொடரும் நிழலின் குரல்' நாவல் படித்தீர்களா?**

ஏ.ஆர்.இர்ஷாட், கொழும்பு-2.

*படித்தேன். மார்க்ஸியர்களினதும் கம்யூனிட்டுக்களினதும் முதுகுத் தண்டில் ஊசியைப் பாய்ச்சுகிறது நாவல். இது ஒரு பக்கமிருக்க, இலட்சியத்துக்காக சாவது பற்றி பேச்சு வரும்போது, நாவலில் ஒரு பாத்திரம் சொல்கிறது! "இலங்கை மான சீகமாக ஓர் ஐம்பது வருஷம் பின்னால் இருக்கிற தேசம். எனக்கு என்னமோ அதை ஒரு ஆபிரிக்க நாடாகத்தான் நினைக்கத் தோணுது.... சீக்கிரமே உகாண்டா, எத்தியோப்பியா மாதிரி ஆயிடும்...." 723 பக்க நாவலைப் படித்து முடித்தால் கவலையாகத் தானிருக்கிறது.*




**'பார்த்தேன் ரசித்தேனில்' வந்த சிம்ரானைப் பார்த்து ஜொள்ளு விடும் சிந்தியாவே! அப்படத்தில் பளிங்குச் சிலையாக, பேரழகுப் பெட்டகமாக வந்து நம் நெஞ்சையெல்லாம் அள்ளிக்கொண்ட லைலா உம் கண்ணில் படவில்லையா? உம்முடைய ரசனையும் நீரும்... உம்மை நாம் மன்னிக்க வேண்டுமானால், லைலா பற்றிச் சில வரிகளாவது எழுதும்?**

கு.விமலன், த.ரஜீவன், ஹற்றன்.

*பெண்ணை வெறும் அழகுப் பொம்மையாக மட்டுமே பார்த்து... சரி சரி எதுக்கு வம்பு? இதோ லைலா புராணம். சொந்தப் பெயரே லைலாதான். பிறந்த தினம் ஒக்டோபர் 24. அப்பா விஜய் ஏர்இந்தியாவில் பைலட்டாக இருக்கிறார். அம்மா ஜேனுக்கு வேலை லைலாவோடு படப்பிடிப்புக்கு கூட வருவது. லண்டனில் உள்ள நாட்டியப் பள்ளி ஒன்றில் ஐந்து வயதிலிருந்தே 'பாலே' நடனம் பயின்றிருக்கிறார் லைலா. பம்பரமாய் சுழன்று ஆடத் தெரிந்தவர். தனது வருமானத்தில் ஒரு குறிப்பிட்ட சதவிகிதத்தை அநாதைக் குழந்தைகளைப் பராமரிப்பதற்காகச் செலவிடுகிறார். பண்டிகைகளையோ தன் பிறந்த நாளையோ கொண்டாடுவதில்லை. கிரிக்கெட் பிடிக்காது. மோசமான பழக்கம் நகம் கடிப்பது. நல்ல பழக்கம் நேரத்தோடு படுத்து சீக்கிரமே எழுந்திருப்பது. பந்தா இல்லாத எளிமை. விமலனும், ரஜீவனும் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்கள் பெற விரும்பினால் இன்டர்நெற் முகவரி: www.laila.net. மன்னித்துவிட்டீர்களா, மஜ்னுவின் விரோதிகளே?*

**எலுமிச்சம் பழத்திற்கும் தேசிப்பழத்திற்கும் உள்ள வேறுபாடு என்ன?**

கே.எஸ்.சிவமதன், காடியனாறு.

*சிவனும், அவரது நெற்றிக் கண்ணுக்கு இரையான மதனும் எப்படி ஒன்றுபடுகிறார்கள் என்பதை நீங்கள் சொன்னால், பழ வேறுபாட்டை அதன்பிறகு சொல்கிறேன்!*

**சமாதானத்திற்கான நோபல் பரிசு யாருக்கு?**

க.கோகுலன், மட்டக்களப்பு.

*தென் கொரியத் தலைவர் 'கிம் டே யுங்'கிற்கு!*

**வாகனத்துக்கு சாரதி; விமானத்துக்கு பைலட்; கப்பலுக்கு மாலுமி; ரயில் ஓட்டுநர்களை எப்படி அழைப்பது?**

டி.ஏ.ஜீவன், கொழும்பு-13.

*உண்மையில் தெரியாமல் தான் கேட்கிறீர்களா? தரையில் ஓடுகிற வாகனங்களுக்கெல்லாம் ஓட்டுநர் சாரதிதான்! (விளையாட்டுக் கார்களையும், பெற்றோலுக்குப் பதிலாக குண்டு நிரப்பிய வாகனங்களையும் தவிர...)*

**சிந்தியாவுக்கு காதுகுத்தத் தெரியுமா?**

தி.விமலராணி, யாழ்ப்பாணம்.

*மன்னியுங்கள். நாட்டில் நடந்தேறும் கொலைகள் பற்றிய கேள்விகளுக்குப் பதிலளிப்பதில்லை!*

# மன்னாதி மன்னன்

29

சந்திரபுரியின் மன்னன் கந்த நாதனுக்கு காந்தருபனென்ற அழகான மகன் பிறந்தான். சகல கலைகளையும் பெற்ற இளவரசனுக்கு ஏற்ற மணமகள் கிடைக்க வில்லை. எனவே இளவரசன் காந்தருபனை ஓவியமாக வரைந் தெடுத்துக் கொண்டு அந்த நாட்டு அமைச்ச னொருவன் பல தேசங்களுக்கும் சென்று வந்தான். இளவரசனுக்கேற்ற மணப்பெண் கிடைக்காமையினால் அலைந்து திரிந்த அமைச்சன் தந்திரபுரியை வந்தடைந் தான். களைப்பு மிகுதியினால் அங்கிருந்த பூஞ் சோலையொன்றில் ஓய்வெடுத்துக் கொண் டிருந்தான்.

இது இவ்வாறிருக்கையில், மகேத்திர புரியை ஆட்சி செலுத்திய மகேந்திரநாதன் என்ற மன்னன் இருபத்தியொரு மனைவியரை மணந்தான். இவர்களில் ஒருத்திக்கே அழ கான பெண் குழந்தை பிறந்தது. அக்குழந் தைக்கு காந்தருபி என்று பெயரிட்டனர். இவள் பருவ வயதையடைந்ததும் அவளுக் கேற்ற ஒரு மணாளனைத் தேடி அவளுடைய உருவத்தை ஓவியமாக வரைந்து கொண்டு அந்த நாட்டு அமைச்சன் ஒருத்தன் பல தேசங்களுக்கும் சென்றான். அந்த அமைச் சருக்கும் தன் இளவரசிக்கேற்ற மணாளன் கிடைக்கவில்லை அந்த அமைச்சனும் ஓய் வெடுப்பதற்காக தந்திரபுரி பூஞ்சோலைக்குள் வந்து சேர்ந்தான்.

இரு நாட்டு அமைச்சர்களும் ஒருவருக் கொருவர் அறிமுகம் செய்து கொண்டு, தாங்கள் பல நாடுகளையும் சுற்றித் திரிந்த காரணத்தைப் பரிமாறிக்கொண்டனர். இரு அமைச்சர்களிடமுமிருந்த ஓவியங்களையும் பார்த்துக் கொண்டனர்.

இரு ஓவியங்களிலும் காந்தருபனும் காந்தருபியும் பொருத்தமுடையவர்களாக இருக்கின்றார்கள் என்பதைத் தீர்மானித்துக் கொண்டார்கள்.

இரு அமைச்சர்களும் தங்கள் தங்கள் நாடுகளுக்குச் சென்று தத்தமது அரசர் களிடம் விவரத்தைத் தெரிவித்தார்கள். இறுதியில் காந்தருபனுக்கும் காந்தருபிக்கும் திருமணத்தை நடத்துவதென்று முடிவு செய்தனர்.

திருமணத்துக்கான சுப முகூர்த்தத்தைத் தீர்மானித்துக் கொண்டு கந்தநாதன் சந்திர புரியிலிருந்து காந்தருபனையும் அழைத்துக் கொண்டு பரிவாரங்கள் சூழ மகேந்திரபுரி புறப்பட்டுச் சென்றான். அந்நாட்டு மன்னன் மகேந்திரநாதன் மணமகனையும் சம்பந்தியை யும் ஏனையோரையும் சிறப்பாக வரவேற்று உபசரித்தான். குறிப்பிட்ட தினத்தன்று காந்த ருபனுக்கும் காந்தருபிக்கும் திருமணம் சிறப் பாக நடைபெற்றது.

கந்தநாதனும் பரிவாரங்களும் சில நாட்கள் மகேந்திரபுரியில் தங்கியிருந்து விட்டு மணமக்களை அழைத்துக் கொண்டு சந்திரபுரியை வந்தடைந்தான்.

காந்தருபன்-காந்தருபி ஆகிய இரு வருடைய பேரழகைப் பற்றிக் கேள்விப்பட்ட பலநாட்டு மன்னர்களும் இளவரசர்களும் சந்திரபுரி வந்து, மணமக்களை ஆசீர்வதித் துச் சென்றனர். தம்பதியினரின் அழகில் சொக்கிய அவர்கள் கூறிய புகழ்வார்த்தைகள் மன்னன் கந்தநாதனை வேதனைக்குள்ளாக் கியது. தன்னுடைய மகனுக்கும் மருமகளுக் கும் கண்ணூறுபட்டுவிடும் என்று கருதிய மன்னன், ஏழடுக்கு மாளிகையொன்றை நிர்மாணித்து மணமக்களுக்கு வேண்டிய சகல சௌகரியங்களையும் ஏற்படுத்தி, ஏழாவது மாடியிலேயே அவர்கள் வாழவேண்டுமென்று ஏற்பாடு செய்தான். மணமக்கள் இருவரும் மகிழ்ச்சிகரமாக வாழ்ந்து வந்தனர்.

ஒருநாளிரவு கந்தர்வ லோகத்தைச் சேர்ந்த சப்த கன்னியர்கள் அந்த ஏழடுக்கு மாளிகையின் வனப்பைக் கண்டு, அதனுள்ளே சென்று பார்த்தனர். காந்தருபனின் அழகு கந்தர்வ லோகக் கன்னியர்கள் ஏழுபேரையும் மயக்கியது. அவர்கள் அங்கு வந்தது இரவு நேரமாகையினால், காந்தருபனும் காந்தருபி யும் சப்ரகூட மஞ்சத்தில் அயர்ந்து தூங்கிக் கொண்டிருந்தனர்.

ஏழு கன்னியர்களும் எப்படியாவது காந்த ருபனைத் தங்களுடன் அழைத்துச் செல் வதற்கு திட்டமிட்டனர். அதன்படி காந்தருபனை மயக்கநிலையிலேயே கந்தர்வலோகம் கொண்டு சென்றனர்.

தன்னருகில் தூங்கிக் கொண்டிருந்த கணவன் காந்தருபனைக் காணாமல் காந்தருபி தவித்துப் போனாள். தாங்கள் வசித்த மாட மாளிகையில் தேடியும் காணாதமையினால், மிகவும் கவலையடைந்தாள். அரண்மனை யெங்கும் காவலர்களை அனுப்பித் தேடியும் காந்தருபன் அகப்படவில்லை.

இந்தளவில் திரைச்சீலைக்குள் புகுந்து கொண்டு கதை சொன்ன வேதாளம் கதையைநிறுத்தி விட்டது. "எனக்கு இது வரைதான் இந்தக் கதை தெரியும். எஞ்சியுள்ள கதையை இங்கிருக்கும் சரவிளக்குத்தான் கூறமுடியும்?" என்று திரைச்சீலை சொன்னது.

விக்கிரமாதித்தன் வேதாளத்தை சர விளக்குக்குள் புகுந்து கொள்ளுமாறு ஏவி னான். அப்போது எஞ்சிய கதையை சர விளக்குக் கூறலாயிற்று.

## காணாமல்போன காந்தருபன்!

### சரவிளக்குக் கூறிய கதை

கந்தர்வலோகத்துக்கு தங்களுடன் அழைத்துச் சென்ற காந்தருபனை ஒரு நாளைக்கு ஒருவர் வீதம் கந்தர்வ கன்னியர் ஏழுபேரும் தம்முடன் வைத்திருந்தனர். இவர் கள் தங்களுக்குள்ளாகவே பேசி ஒரு முடி வுக்கு வந்தனர். காந்தருபனின் மனைவி காந்தருபியும் தங்களைப் போல் ஒரு பெண் தானே, என்பதனால் ஏழுநாட்களுக்குப் பின்னர் எட்டாவது நாளன்று இரவு காந்தருபனை அவனுடைய மனைவி காந்தருபியிடம் கொண்டு போய் விடுவதாக தீர்மானித்தனர். இதன்படி ஒவ்வொரு ஏழுநாட்கள் முடிந்ததும் காந்தருபனை சந்திரபுரிக்குக் கொண்டு வந்து காந்தருபியிடம் விட்டுவிட்டு சென்று விடுவர். அடுத்தநாட்காலையில் அவனை அழைத்துக்கொண்டு மீண்டும் கந்தர்வ லோகம் சென்று விடுவார்கள்.

காந்தருபியிடம் காந்தருபனைக் கொண்டு வந்து சேர்க்கும் போதும் மீண்டும் தம்முடன் அழைத்துச் செல்லும் போதும் காந்த ருபன் அறிவு மயங்கியநிலையிலேயே இருப் பான். அதேபோல் காந்தருபியும் தன் கணவன் அவளருகில் வரும்போதும் தூக்கத்திலேயே இருப்பாள்.

இவ்வாறு காலம் கடந்து சென்றது. இக்காலகட்டத்தில் காந்தருபி கர்ப்பமுற்றாள்.

அவளுடைய உடலில் ஏற்படும் மாற்றங் களைக் கண்டு காந்தருபியின் தோழிகள் திகைப்படைந்தனர். காந்தருபியின் வயிறும் நாளுக்குநாள் பருத்துக்கொண்டே வந்தது.

தோழிகள் காந்தருபியிடம், "உன் கணவன் உன்னிடம் வருவதில்லை. அவர் சென்ற இடமோ தெரியவில்லை. ஆனால் நீ கருவுற்று விட்டாய். உன் வயிற்றில் வளரும் குழந்தைக்கு தந்தை யார்?" என்று வினவத் தொடங்கினர். இதற்கான சரியான பதிலைக் கூற காந்தருபியால் முடியாமல் போனது. தான் தன் கணவனைத் தவிர வேறு எந்த ஆண்மகனையும் தீண்டவில்லையென்று சத்தியம் செய்தாள்.

ஏழடுக்கு மாளிகையில் வேறு எவருமே நுழைந்துவிடாமல் தக்க பாதுகாப்புகள் செய்யப்பட்டிருந்த போதும், கட்டுக் காவலை மீறி, உள்ளே நுழையும் கள்வன் யார்? என்ப தைக் கண்டு பிடித்தேயாக வேண்டும். இல்லா விட்டால் மன்னவன் தங்கள் அனைவருக்கும் மரண தண்டனை வழங்கிவிடுவான் என்று தோழிகள் பயந்தனர்.

மாளிகையைச் சுற்றி மணலைப்பரப்பி வைத்தனர். யாராவது மாளிகைக்குள் நுழைந் தால் அவர்களுடைய பாதச்சுவடு மணலில் பதிந்துவிடும். ஆகவே கள்ளத்தனமாக உள்ளே நுழையும் கயவனைப் பிடித்துவிடலாம் என்று கருதினார்கள்.

இத்தனை ஆயத்தங்கள் செய்தும் கூட எவரையும் கண்டுபிடிக்க முடியவில்லை. இத னால் காந்தருபியும் கவலையுற்றாள். தந்தை அறிந்தால் தன்னைக் கொன்றுவிடுவார் என்று அச்சமடைந்தாள்.

எட்டு மாதங்களாகிவிட்டன. இதற்கு மேலும் மன்னருக்குத் தெரியாமல் மூடி மறைத்தால், தங்கள் அனைவரையும் சிரச்சேதம் செய்துவிடுவார் என்று அஞ்சிய தோழிகள் ஒருவாறு மன்னரிடம் போய்ச் சொன்னார்கள். மன்னன் கந்தநாதன் கலக்க மடைந்தான். தனது மகன் காந்தருபன் எட்டுமாதங்களுக்கு முன்பே காணாமல் போய் விட்ட சங்கதியும் அப்போது தான் மன்னனுக் குத் தெரிந்தது. மருமகள் காந்தருபியை அழைத்து விசாரித்தார். அவள் தன் கணவனைத் தவிர வேறு எவருடனும் சேர்ந்ததேயில்லை என்றும் தன் வயிற்றில் வளரும்சிசுவிற் தந்தை யார் என்றும் தனக்கு தெரியாது என்றும் கூறிவிட்டாள்.



மன்னர் கந்தநாதன் தனது அமைச்சர் களை அழைத்து ஆலோசனை நடத்தினார். அவர்களும் பலவாறாக ஆராய்ந்து பார்த்தும் ஒரு முடிவுக்கும் வரமுடியவில்லை. அரச குடும்பத்தில் இவ்வாறு நடந்தால் அரச குமாரியை கானகத்தில் கொண்டுபோய் விட்டுவிடவேண்டும் என்று மனு நீதியில் கூறப் பட்டிருப்பதாக அமைச்சர்கள் சொன்னார்கள். மன்னரும் தலையாரியை அழைத்து ஒழுக்கம் தவறிய தனது மருமகள் காந்தருபியை கானகத்தில் கொண்டு சென்று விட்டுவிடு மாறு கட்டளையிட்டார். அதன்படி தலையாரி அன்று நள்ளிரவில் காந்தருபியை அழைத்துக் கொண்டு கானகத்தில் கொண்டு போய் விட்டுவிட்டு திரும்பி விட்டான்.

வனவிலங்குகள் அலைந்து திரிந்த அந்த கானகத்தில் விடப்பட்ட காந்தருபி செய்வ தறியாது பயந்து நடு நடுங்கினாள். கால் போன போக்கெல்லாம் நடந்து போனாள்.

அவள் சென்ற ஒற்றையடிப்பாதை ஒரு சுடுகாட்டில் கொண்டுபோய் அவளை விட்டது. அப்பொழுது அங்கே ஒரு பிணம் எரிந்து கொண்டிருப்பதையும் அதன் ஒரு புறத்தே தலைவிரி கோலமாக ஒரு பெண் அழுது புலம்பிக்கொண்டிருப்பதையும் கண் டாள். அப்பெண்ணைக் கண்டதும், அது ஒரு பேயாக இருக்க வேண்டுமென்று எண்ணினாள்.

*(மன்னன் வருவான்...)*

இராஜகுமாரன்

# சிரிக்க... சிந்திக்க...



**க**ம்பனி ஒன்றில் பலவருடங்களாக வேலை செய்யும் ஒருவனுக்கு ஊதிய உயர்வு கிடைக்கவில்லை. மிகவும் வேதனையுடன் முதலாளியிடம் சென்ற அவன்,

"எனக்கு சம்பள உயர்வு வேண்டும்!" என்று கேட்டான்.

"எதற்கு உனக்குச் சம்பள உயர்வு வேண்டும்?" என்று கேட்டார் முதலாளி.

"பதினைஞ்சு வருசமாக மூன்று பேர் செய்யும் வேலையை நான் ஒருவன் மட்டுமே செய்து கொண்டிருக்கிறேன்!" என்றான் அவன்.

அதற்கு அந்த முதலாளி,

"அப்படியா? அப்ப இவ்வளவு காலமும் வேலைசெய்யாமல் இருக்கும் அந்த மூன்று பேரும் யார் என்று சொல்லு. அவர்களை வேலையிலிருந்து நீக்கி விட்டு உனக்குச் சம்பள உயர்வு தருகிறேன்!" என்றார்.

★★



**ஒ**ருவர் மிகவும் சோர்வாக கொஞ்ச நாள் இருந்தார். அவரது மனைவி மன நோய் மருத்துவரிடம் அவரை அழைத்துச் சென்றார்.

அவரைத் தனியாக அழைத்த மருத்துவர் நன்கு பரிசோதித்துவிட்டு, அவரிடம்,

"உங்களுக்கு என்ன பிரச்சனை?" என்று கேட்டார்.

"இரண்டு மாதங்களுக்கு முன் எனது பாட்டி இறந்தார். இறக்கும் போது மூன்று இலட்சம் ரூபாய் எனக்கு எழுதி வைத்தார்."

"சந்தோஷம் தானே?"

"சந்தோஷம் தான். போன மாதம் என் மாமா இறந்தார். அவரும் இரண்டு இலட்சம் ரூபாய் எனக்கு எழுதி வைத்து விட்டுப் போனார்."

"பிறகென்ன கவலை?"

"இந்த மாதம் இன்னும் யாரும் இறக்கவில்லையே?" என்றார் அவர் மிகுந்த கவலையுடன்.

★★



**த**னது பெண்ணின் திருமணத்திற்காக நகைகள் செய்து வைத்திருந்தார் ஒருவர். திருடன் ஒருவன் அந்த நகைகளைத் திருடிக்கொண்டு ஓடப் பார்த்தான். அதைப் பார்த்து விட்ட பெண்ணின் தந்தை திருடனைத் தடுத்து,

"தம்பி! நீ கொள்ளை அடித்துக் கொண்டு போவதைப் பற்றி எனக்குக் கவலையில்லை. கூடவே என் மகளையும் அழைத்துக் கொண்டு போய்த் திருமணம் செய்!" என்றார்.

திருடனுக்குக் குழப்பமாக இருந்தது.

"ஆமாப்பா! ஒரு நாளைக்கு அவளுக்கு மாப்பிள்ளை என்று வரப்போகிறவனும் ராஜமரியாதையுடன் வந்து, இந்த நகைகளை எல்லாம் கொள்ளை அடித்துக் கொண்டு போகத்தானே போகிறான்!" என்றார் அவர்.

★★



**ம**ருத்துவமனையில் இருந்த நோயாளி ஒருவர் மருத்துவரை அழைத்தார். அவரிடம்,

"உண்மையைச் சொல்லுங்கள். நான் இன்னமும் எவ்வளவு காலம் உயிருடன் இருப்பேன்?" என்று கேட்டார்.

அதற்கு மருத்துவர், "இன்று இரவு வரை நீங்கள் உயிருடன் இருப்பது சந்தேகம்!" என்றார்.

உடனே நோயாளி,

"என் வழக்கறிஞரை உடனே வரவழையுங்கள்!" என்று மருத்துவரிடம் கூறினார்.

சிறிது நேரத்தில் வழக்கறிஞர் வந்ததும், நோயாளி தன் படுக்கையின் ஒரு புறம் மருத்துவரையும் மறுபுறம் வழக்கறிஞரையும் இருக்கும்படி கேட்டுக் கொண்டார்.


பின் படுக்கையில் சாய்ந்து கண்களை மூடிக்கொண்டு சில நிமிடங்கள் மௌனமாக இருந்தார்.

மருத்துவர் நோயாளியிடம்,

"என்ன சிந்திக்கிறீர்கள்?" என்று கேட்டார்.

"இயேசுநாதர் இறக்கும் போது, அவருடன் இரண்டு திருடர்களும் இருந்தார்கள். அதே வழியில் நானும் இறந்தால் என்ன என்று சிந்திக்கிறேன்!" என்றார் நோயாளி.





பெண்களின் அழகோ இரகசியம் அதை
எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன
கிளை:
105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230
3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
Website: www.lapik.com/arul
436331


## எண் விளையாட்டு



➳ குழந்தைகளின் அறிவு வளர்ச்சிக்குத் தூண்டுகோலாக அமைந்து அவர்கள் வைத்து விளையாடும் பொருட்கள், தன்னை உணர்தல், பிறருடன் தொடர்பாடுதல், எதையும் ஆராய்ந்தறிதல் போன்ற ஆற்றல்கள் இரண்டு வயதான குழந்தைகளிடம் துளிர்விட ஆரம்பிக்கின்றன. இதனால் தான் அவர்களிடம் கேள்வி கேட்கும் பழக்கம் உருவாகிறது. பிறர் சொல்வதைப் புரிந்து கொள்ளவும் அதன்படி நடக்கவும் இப்பருவத்தில் பழகிக் கொள்கிறார்கள். அவர்கள் காண்பதைக் கிரகித்துக் கொள்வதுடன் பிறர் செய்வது போல தாமும் செய்யவேண்டும் என்று முயற்சிப்பார்கள்.

இந்தவயது பருவத்தினர் விளையாடுவதற்காகவே உருவாக்கப்பட்டுள்ள ஒரு பொருள்தான் இது. இதனைக் கையில் வாங்கும் குழந்தை, இதனை வைத்துக் கொண்டு தனது அறிவாற்றலுக்கு எட்டிய படி எதையெதையெல்லாமோ செய்யும். இக்கருவி குழந்தையின் எண்களுக்கு அறிவினை வளர்க்க உதவுமாம்.




SRI KALYANY JEWELLS
புன்னகை சிந்தும் பெண்ணுக்கு
மின்னிடும் பொன்னகை பேரழகு
5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு
323657


## கையெழுத்து

❢ சுமோ மல்யுத்தம் ஜப்பான் நாட்டில் பிரசித்தமானது. இதில் பங்கேற்கும் வீரர்களும், இரசிகர்கள் மத்தியில் பிரபலமாகி வருகின்றனர். சுமோ மல்யுத்தத்தில் பங்குபற்றும் வீரரின் உள்ளங்கையும் விரல்களும்தான் பிரதான இடத்தைப் பெறுகின்றன. மக்களிடம் செல்வாக்குப் பெற்ற ஒரு சுமோ வீரரின் கை அடையாளம் பதிக்கப்பட்டு ஒப்பமிடப்பட்ட இந்த அட்டையின் பெறுமதி 8000 டொலர்களுக்கு மேல் விலைபோகுமாம்.



## விருது நடனம்

➳ இந்தியாவில் கடந்த ஆண்டின் சிறந்த நடிகருக்கான தேசிய விருதைப் பெற்றவர் மலையாள நடிகர் மோகன்லால். 'வானப் பிரஸ்தம்' என்ற மலையாளப்படத்தில் சிறப்பாக நடித்தமைக்காக இவருக்கு விருது வழங்கப்பட்டது.

1981ம் ஆண்டு 'மஞ்ஞில் விரிஞ்ஞ பூக்கள்' என்ற மலையாளப் படத்தில் வில்லனாக அறிமுகமான மோகன்லால், தமிழில் 'இருவர்' படத்திலும் நடித்துள்ளார்.

'வானப்பிரஸ்தம்' படத்தில் கதகளி நடனக்கலைஞராக நடித்த மோகன்லாலின் தோற்றம் தான் இது.



## 2வது பிறந்தநாள் வாழ்த்து



செல்வி
பிறேமதிருஜா
கணேசநாதன்

14
10ஆம்
2000

கிளிநொச்சி-திருநகர், வவுனியா-புளியங்குளத்தைச் சேர்ந்த கணேசநாதன் (திரு)-அனந்தநாயகி (பிறேமா) தம்பதிகளின் செல்வப் புதல்வி பிறேமதிருஜா லண்டனில் உள்ள அவரது இல்லத்தில் 14.10.2001 அன்று தனது 2வது பிறந்தநாளை விமர்சையாகக் கொண்டாடினார்.

இவரை அன்புநிறைந்த அப்பா, அம்மா, அண்ணா பிறேம்நாத் மற்றும் வவுனியா ஆச்சி, அப்பம்மா, ஆனந்தன் மாமா குடும்பத்தினர், ஜெர்மனி ஆசை விஜிசித்தி குடும்பத்தினர், அருந்தவம் மாமா குடும்பத்தினர், அற்புதம் மாமா குடும்பத்தினர், அகிலன் மாமா, அருந்தன் மாமா, கணேஸ் பெரியப்பா குடும்பத்தினர், கவிஸ் வேணியத்தை குடும்பத்தினர், விசுவமடு குமாரன் சித்தப்பா குடும்பத்தினர், குமாரி மத்தை குடும்பத்தினர், பெரியமாமா, மச்சான்மார்கள், மச்சாள்மார்கள் மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் பலவளமும் பெற்று பல்லாண்டு வாழ்க வென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: விஜயநாதன் மாமா குடும்பத்தினர்-லண்டன்
UK: 00441812041212

## நீராட்டம்

❢ ஓய்வு பெற்றவர்களுக்கான பொழுது போக்குக்கூடம் இது. அமெரிக்க டெக்ஸாஸ் மாநிலத்திலுள்ளது. வடக்கே பனியுடன் குளிர் படரும் காலங்களில் பெரும்பாலான வசதி படைத்த வயோதிப ஓய்வுபெற்ற அமெரிக்கர்கள் டெக்ஸாஸ் மாநிலத்துக்கு வந்து சேர்ந்துவிடுகிறார்கள். சான் பெனிட்டோ என்ற 'சன் என் பேண்' விடுதியில் நீர் நிலை கரப்பந்தாட்ட மையம் உள்ளது. இதில் ஓய்வுபெற்ற இருமுதியவர்கள் நீர்நிலைக்கரப்பந்தாட்டம் ஆடுகின்றனர்.

ஒவ்வொராண்டும் வருட முடிவில் டெக்ஸாஸ் மாநிலத்துக்கு இல்லினொயிஸிலிருந்து தனது மனைவியுடன், தங்குமிடவசதி கொண்ட இழுவை வண்டியுடன் வரும் ஜோர்ஜ் வெயிர் என்பவர், "புளோரிடாவில் இப்பொழுதெல்லாம் மக்கள் தொகை பெருகிவிட்டது. அத்துடன் வாழ்க்கைச் செலவும் அதிகரித்துவிட்டது" என்று அலுத்துக் கொள்கிறார்.

